
கல்கி
KALKI
19.2.1967
40 காசு




பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர்
POND'S
சொப்பன சுந்தரியின் வதனப் பொலிவை உங்களுக்கு அளிக்கும்
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் சீராகப் படிந்து முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்கிறது...முகத்தைப் பளிச் சென்று வைக்கிறது! உங்கள் சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப் பலவித வண்ணங்களில் கிடைக்கின்றது.
சீஸப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)
JWT-P-3219

கல்கி

பொருளடக்கம்

பராபவ, மாசி 7 — பிப்ரவரி 19


நினைவுத் திரையில்...



ரயிலில், "என் மேலே வந்து ஏன் ஐயா இப்படி விழுகிறீர்?" என்று பரஸ்பரம் எரிந்து விழுந்தவர்கள்....

....சிறிது நேரத்துக்குப் பிறகு தூங்கும்போது இப்படிக் காட்சி அளிக்கிறார்கள்! - சாமா

கல்கி, ஜூலை 20, 1947


கெஞ்சலும் மிஞ்சலும்
கருணை கூர்ந்து வாக்களியுங்கள்!
காங்கிரஸ்
நாங்கள்தான் ஆட்சியாளர், தெரிகிறதா?

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 29



ஆட்சியை மாற்றுங்கள்!

பத்தொன்பதாண்டுகளாக நாட்டை ஆண்டு வரும் காங்கிரஸ் தலைவர்கள் அக்கட்சியிடம் மக்கள் வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்து விட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் கடைப்பிடித்த கொள்கைகளின் விளேவாக மக்களின் மீது நேரடி வரிகளும், மறைமூக வரிகளும் பெரும் சுமையாக ஏறிவிட்டன; ஏழை மக்களின் சக்திக்குத் தாங்கவொண்ணுமல் எல்லாப் பண்டங்களின் விலைகளும் உயர்ந்து விட்டன; நம் நாட்டினுல் தீர்க்கவொண்ணுத அந்நியக் கடன்கள் வரம்பின்றி ஏறிவிட்டன; ஆட்சியாளரை அண்டி வருகிற ஒரு சலுகைக் கூட்டம் அபரிமிதமான செல்வத்தை ஈட்டியுள்ளது; சமீப காலம் வரையில் மக்கள் அனைவரும் மதித்து வந்த தருமங்களைப் பாழாக்கித் தருமத்தின் இடத்தில் தெய்வத்தை மறந்து பணம் சேர்க்கும் ஆசையை அமர்த்தியிருக்கிறது காங்கிரஸ் ஆட்சி.

காங்கிரஸ் கட்சி என்பது இன்று உருப்படியான ஒரு ஸ்தாபனமல்ல. பகிரங்கமாக அதற்குள் பல போட்டிக் கட்சிகள் தோன்றி விட்டன. இனி எவ்விதத்திலும் மதிப்பையோ, நம்பிக்கையையோ பெறுகிற தகுதி காங்கிரஸுக்கு இல்லை. இக்கட்சியை அதிகாரத்திலிருந்து இறக்குவதற்காக நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதே நம் கடமை.

இருபது ஆண்டுகளுக்கு முன்னுல் ஸர்தார் படேல் அவர்களின் ஆழ்ந்த கவனத்தின் கீழ் டாக்டர் அம்பேத்கர், கோபாலஸ்வாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், பி. என். ராவ் முதலிய பல பெரியோர்கள் மிகுந்த ஆலோசனையுடன் நமது அரசியல் சாஸனத்தை உருவாக்கினுர்கள். இந்தச் சாஸனம், எந்தக் கட்சியானது மெஜாரிட்டி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் மக்களின் உரிமைகளை மாற்ற முடியாதபடி மக்களுக்குப் பல அடிப்படை உரிமைகளை வழங்கியது. அரசாங்கம் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்பது சாஸனத்தின் சாராம்சம். ஆனுல் காங்கிரஸ் கட்சியோ ஆட்சிக்கு வந்தபின் எல்லாருடைய தொழில்களிலும் பிரவேசித்து மக்கள் அனைவரையும் அடிமைகளாக்கி அரசாங்கத்தை மக்களின் எஜமானுக்கி விட்டது.

இந்தக் கொடுங்கோன்மைக்கு நாம் முடிவு காண வேண்டும். இந்த நோக்கத்துடனேயே சுதந்திரக் கட்சி என்ற இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. நம் மக்கள் சரியானபடி சங்கற்பம் செய்து கொண்டு விட்டால் எவ்வளவு தேசப் பற்றுடனும் தீரத்துடனும் செயலாற்றுவார்கள் என்பதை அறிவேன். இப்போது அவர்கள் சுதந்திரக் கட்சி வேட்பாளர்களையும், சுதந்திரக் கட்சியின் ஆதரவு பெற்ற கூட்டணி வேட்பாளர்களையுமே பெருமளவில் தேர்ந்தெடுப்பதற்குச் சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். இதுவே என் விருப்பமும் விண்ணப்பமும். நாட்டில் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தி வரும் காங்கிரஸுக்குத் தோல்வி கொடுத்து ஜனநாயகத்தைக் காத்திடுவீர்களாக! எதிர்ப்புக் கூட்டணிக்கு வாக்களிப்பதே சத்திய சந்தர்களுக்குரிய நியாயச் செயல் என்று உணர்ந்து வாக்கைப் பிரயோகிப்பீர்களாக!

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

என்ன சேதி?

- கண்டிக்கிறோம்
- ராஜாஜியும் அண்ணாவும்
- வேற்றுமையில் ஒற்றுமை
- கிருபளானியிடம் கரிசனம்!
- இலவசக் கல்வி

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் கல்வீச்சுக்கு இலக்கானதாகக் கேள்விப்பட்டு மிக்க வருந்துகிறோம். வாக்குரிமை என்ற ஜனநாயக சாதனம் கைவசம் உள்ளபோது, இவ்வித நீசத்தனமான வன்முறைகளைக் கடைப்பிடிப்பவர்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சமீபத்தில் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் ராஜாஜியும் அண்ணாதுரை அவர்களும் சேர்ந்து ஒரு பொது மேடையில் பேசினார்கள். காங்கிரஸின் ஆட்சியை மாற்ற இறைவன் வகுத்த வழி திரு அண்ணாதுரையையும் தம்மையும் இணைத்துப் பணியாற்ற வைத்துள்ளது என்று கூறினார் ராஜாஜி. பின்னர் பேசிய திரு அண்ணாதுரை அவர்கள், ராஜாஜி தம் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், இம்மாதிரிக் கூட்டங்களுக்குச் சென்று அலைய வேண்டியதில்லை என்றும், 'ராஜாஜி அவர்கள் நல்ல கருத்துக்களை அவ்வப்போது பல்லவியளவு எடுத்துக் கொடுத்தால் போதும், நாமும், தமது சகாக்களும் அனுபல்லவி, சரணங்கள் யாத்து, முழுதுமே பாடிப் பணியினை நிறைவேற்றிவிடத் தயாராக இருக்கிறோம்' என்றும் கூறியபோது, சபையில் அத்தனை பேரும் பெரு மகிழ்ச்சியால் புல்லரித்தனர். தமிழகத்துக்கு நல்ல காலம் பிறக்கிறது என்று யாவரும் குதூகலித்தனர்.

முதன் மந்திரி திரு பக்தவத்சலம் அவர்கள் தி. மு. கழகத்தாரின் தேர்தல் அறிக்கையில் காணப்படும் 'இந்திய சர்க்காருக்குள்ளடங்கிய திராவிடம்' என்பது முன்பு ராஜாஜி கூறி வந்த தட்சிணப் பிரதேசமே தவிர வேறில்லை என்றும், ''விஞ்ஞான சோஷலிஸம்'' என்பது ராஜாஜி கூறிவரும் சோஷலிஸம்தான் என்றும் விளக்கம் கூறிப் பலருடைய சந்தேகங்களைத் தீர்த்து வைத்தமைக்கு நன்றி கூறுகிறோம். அத்துடன் சுதந்திரக் கட்சிக்கும் தி. மு. க. வுக்குமிடையே காங்கிரஸ்காரர்கள் வேற்றுமையே கண்டு வருகையில் முதன் மந்திரி ஒற்றுமையைக் கண்டதற்கு நன்றி கூறுகிறோம். ஆக இனி யாரும் அண்ணாதுரையும் ராஜாஜியும் எப்படி ஒன்று சேரலாம் என்று கேட்க வேண்டியதில்லை.

மத்தியப் பிரதேசத்தில் சத்திஸ்கட் என்ற தொகுதியில் ஆசாரிய கிருபளானி இவ்வி மக்கள் சபைக்கு வேட்பாளராக நிற்கிறார். மத்தியப் பிரதேச முதன் மந்திரி திரு டி. பி. மிச்ரா, 'அத்தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ஜயிப்பது நிச்சயம்; கிருபளானி போன்ற பெருமதிப்புக்குரிய தலைவர் தோல்வியுறுவது அழகல்ல; ஆகவே, இப்போதே தேர்தலிலிருந்து கிருபளானி வாபஸ் பெற்றுக் கொள்ளலாம்' என்று கூறியிருக்கிறார்.

ஆசாரிய கிருபளானி அவர்கள் 'என்னை அவ்வளவு மதிப்பதானால் எனக்கெதிராக காங்கிரஸ் அபேட்சகரை நிறுத்தாமல் அவரை, வாபஸ் பெற்றுக் கொள்ளச் சொல்வதல்லவா தர்க்க ரீதியான முடிவாகும்?' என்கிறார். கிருபளானியின் கூற்றில் உள்ள உண்மை மிச்ராவுக்கு எங்கே தெரியப் போகிறது!

கல்லூரிப் படிப்பை இலவசமாக்கப் போகிறார்களாம்!

முன்னாள் சென்னை மாநிலத்தில் கல்வி அமைச்சராக இருந்த அவினாசிலிங்கம் செட்டியார், 'பள்ளிப் படிப்பை இலவசமாக்கித் தரத்தைக் குறைத்தது போதும், கல்லூரிக் கல்வியின் தரத்தையும் குறைக்க வேண்டாம்' என்றார்.

இது பற்றி நாம் விவாதிக்க விரும்பவில்லை. அதெப்படியாயினும் எதிர் காலச் சந்ததியினரின் கல்வியைப் பற்றியும் அறிவைப் பற்றியுமா காங்கிரஸாருக்கு இப்போது அக்கறை? இந்த ஆண்டு நடக்கவிருக்கும் தேர்தலில் வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என்பதல்லவா அவர்கள் கேள்வி!

நாட்டின் நிரந்தர நலனில் அக்கறை இல்லாமல் தேர்தலில் வெற்றி வாய்ப்பையே எண்ணி வேலை செய்யும் கட்சியை ஆட்சியில் இருத்தலாமா? இது ஒரு மறைமுக லஞ்சம் அல்லவா? எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கு இப்படிச் செய்ய வாய்ப்பில்லாதபோது, ஆளும் கட்சி இப்படிச் செய்யும் ஓர் அதர்மச் செயலுக்காகவே அதிகாரத்திலிருந்து அதை அகற்ற வேண்டும்.

இந்த விஷயத்தை எந்தப் பத்திரிகையும் கண்டிக்கக் காணோம். ஆனால் சென்னை மாநகராட்சியினர் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக ஸ்லேட்—புத்தகம் தர இருப்பதும், பல வரிகளைக் குறைத்திருப்பதும் பத்திரிகைகளுக்குத் தேர்தல் லஞ்சமாகத் தோன்றுகிறது. தி. மு. க. தலைவர் திரு முனுசாமி அவர்கள் இவ்விஷயத்தைத் தெளிவு செய்துள்ளார். சென்னை நகரில் புது கட்டிடங்களின் மீதான சொத்து வரி மூலம் மாநகராட்சிக்குக் கிடைக்கும் தொகை உயர்ந்திருப்பதாலும், மாநகராட்சிக்குச் சாலைகள் சம்பந்தமாகத் தபால் இலாகா ஏராளமான பொருள் தரவேண்டியிருப்பதாலுமே, அந்த அளவுக்குப் புதுச் சலுகைகள் தர முடிந்திருக்கின்றன என்று அவர் கூறியுள்ளதை அனைவரும் கவனிக்க வேண்டும்.


விற்பன்னர்களை வாழ்த்துகிறோம்


இவ்வாண்டு குடியரசு தின விருது பெற்ற பெருமக்களில் நமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான பலரின் பெயர்களைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தோம். கலைத் துறை இந்த ஆண்டு விசேஷமான சிறப்பைப் பெற்றிருக்கிறது. கர்நாடக சங்கீதத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கும் சங்கீதவாணி ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி அவர்கள் 'பத்ம பூஷண்' பெற்றிருக்கிறார். ஹிந்துஸ்தானி இசையில் தேர்ந்த பண்டிட் ரவி சங்கரும், அலி அக்பர் கானும், சித்தேசுவரி தேவியும், வஸந்த தேசாய் அவர்களும் பாரத சர்க்காரின் பாராட்டினைப் பெற்றுள்ளனர். சமூகத் துறையில் பெயரெடுத்த ஸ்ரீமதி தாரா செரியனும், சத்தியம் தப்பாத பத்திரிகையாளர் ஸ்ரீ பி. சிவராவும், வேதாந்தப் பேராசிரியர் ஸ்ரீ டி. எம். பி. மகாதேவனும், உலகப் புகழ் கொண்ட எழுத்தாளர் முல்க் ராஜ் ஆனந்த் அவர்களும், வியாபாரத் துறையில் சிறந்து விளங்கும் ஸ்ரீ நாகப்ப செட்டியாரும், நீச்சல் வீரர் மிஹிர் ஸென்னும் பாரத இளைஞர்களின் பேரன்பைப் பெற்றுள்ள டென்னிஸ் கிருஷ்ணன், பட்டோடி நவாப் ஆகியவர்களும் விருது பெற்றிருப்பது வரவேற்புக்குரியது. விருது பெற்ற விற்பன்னர் அனைவரையும் வாழ்த்துகிறோம்.













1. ஸ்ரீமதி வஸந்தகுமாரி
2. பண்டிட் ரவிசங்கர்
3. ஸ்ரீமதி சித்தேசுவரி தேவி
4. பேராசிரியர் மகாதேவன்
5. உஸ்தாத் அலி அக்பர்கான்
6. ஸ்ரீ பி. சிவராவ்
7. டென்னிஸ் ஆர். கிருஷ்ணன்
8. நவாப் பட்டோடி







தேர்தல் நெருங்க நெருங்க ஒவ்வொரு வர்க்கத்தின் கோரிக்கையையும் ஆள்கிற கட்சி நிறைவேற்றி வருகிறது. அதிகாரத்திலுள்ளவர்கள் வோட்டுப் பிடிப்பதற்காகவே, 'அதைச் செய்வோம்; இதைச் செய்வோம்' என்று மிகவும் தயாளத்துடன் வாக்குறுதி கொடுக்கிறார்கள். இதனால் அடுத்த சர்க்காரின் மீது சுமை ஏற்றப்படுகிறது. வரி கொடுக்கும் மக்களின் மீதும் கூடுதலாகப் பளு ஏற்றப்படுகிறது. இது கணித நியதி; இதை யாரும் தவிர்க்க முடியாது. எந்த வாக்குறுதியாயினும் சரி, வாக்குறுதி தருபவர் யாராயினும் சரி, வரி கொடுக்கும் மக்களுக்காகவே அவ்வாக்குறுதி தரப்படுகிறது எனினும், இதற்காகச் சுமை தாங்க வேண்டியதும் அதே மக்கள்தாம். கட்சி அரசாங்கங்கள் பொதுத் தேர்தலுக்கு நீண்ட காலம் முன்பே ராஜிநாமா செய்ய வேண்டும் என்பதை இதுவும் வலியுறுத்துகிறது. அப்போதுதான் ஒரு கட்சியினர் மட்டும் அரசாங்க அதிகாரத்துடன் வாக்குறுதிகள் தருவது நிற்க இடமேற்படும்.

* * *

தேர்தலுக்குப் பின்னும் ஏற்படப் போகும் சர்க்கார் எப்படி அமையும் என்பதை நினைத்து இப்போது வாக்காளர்கள் விசாரப்பட வேண்டியதில்லை. இது ராஷ்டிரபதிக்கு விடவேண்டிய பிரச்னை. பொதுத் தேர்தல்களின் விளைவாக ஏற்படும் மொத்த வாக்களிப்பின் அமைப்பைப் பொறுத்து அவர் முடிவு செய்வார். காங்கிரஸ் ஆட்சி நல்லது செய்ததா, கெட்டது செய்ததா என்பதை வாக்காளர் யோசித்து, தங்கள் மனச்சாட்சிப்படி வோட்டுச் செய்து அதன் விளைவை ராஷ்டிரபதியிடம் விட்டுவிட வேண்டும். மக்கள் மனம் எப்படிச் செயல்படுகிறது என்பதை ராஷ்டிரபதி உண்மையாக அறியுமாறு வாக்கு அளிக்கப்படவேண்டும். 'எதைச் செய்தால் புதுச் சர்க்கார் பலமாக அமையும்' என்பதை யோசித்துச் சாதுரியமாக வாக்களிப்பதற்காகத் தேர்தல் நடைபெறவில்லை. அது ராஷ்டிரபதி கவனிக்கவேண்டிய பிரச்னை.

எந்த இக்கட்டான நிலை ஏற்பட்டாலும் அதை ராஷ்டிரபதி சமாளிப்பதற்கு நம் அரசியல் சாஸனம் வழி கூறியுள்ளது. அப்படியே சாஸனத்தில் உள்ள எந்த வழியும் போதாவிடினும் கூட, ராஷ்டிரபதி தமது விவேகத்தைக் கொண்டும் இந்தியாவின் பிரதம நீதிபதியின் யோசனையைப் பெற்றும் நிலைமையைச் சமாளிக்க முடியும்.

தேர்தல்களின் விளைவாகக் காங்கிரஸ் சர்க்காரை அகற்றித் தேசிய சர்க்காரை ஏற்படுத்த வேண்டுமென ராஷ்டிரபதி கருதினால் அதற்குத் தலைமை தாங்கிப் பிரதமர் பதவி ஏற்க ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணரின் பெயரை முன்பே குறிப்பிட்டுள்ளேன். அவர் அநுபவம் வாய்ந்த தலைவர் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஏழை மக்களிடம் மகத்தான அநுதாபம் கொண்டவர் அவர். எந்த அரசியல் கட்சியிலும் சேராமல்; அரசியல் சூழ்ச்சிகளில் சிக்காமல் இருப்பவர்.

திறமையின்மையும் நிர்வாக ஊழலும் மலிந்து விட்டதாக ராஷ்டிரபதி தமது குடியரசு தினப் பேச்சில் கூறினாரல்லவா? இக்குறைபாடுகளை நீக்குவதே தேசிய சர்க்காரின் கொள்கையாக இருக்கும்.

தேசிய சர்க்காரோ, பல கட்சிகளின் கூட்டுச் சர்க்காரோ நிலைமையைச் சமாளிக்க முடியாமல் போய், அந்தச் சர்க்காரைக் கலைக்கும்படி ஆகினும் பரவாயில்லை. இருபது ஆண்டு விடாமல் ஆட்சி செலுத்திய காங்கிரஸின் ஆட்சியில் ஒரு சிறு முறிவு ஏற்பட்டாலே மக்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை வலுப்படும்.

* * *

எதிர்ப்புக் கூட்டணியில் கம்யூனிஸ்டுகளுக்கு இடமளிக்கப்பட்டிருப்பதால் அதற்கு வோட்டுப் போடக் கூடாது என்று காங்கிரஸார் பிரசாரம் செய்கின்றனர். சுதந்திரக் கட்சி நேரடியாகக் கம்யூனிஸ்ட்களுடன் எவ்விதப் பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை; தேர்தல் ஏற்பாடுகளும் செய்து கொள்ளவில்லை. எனினும் தி. மு. க என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நாங்கள் உத்தரவு போடுவதற்கில்லை. இப்போது 'சட்டப்படி' கட்சிகள் இணைந்துவிடவில்லை என்பதையும் மறந்து விடக் கூடாது. தி. மு. க.வினர் தங்களது ஸ்தானங்களில் சிலவற்றை கம்யூனிஸ்டுகளுக்கு ஒதுக்கியதற்காகச் சுதந்திரக் கட்சி கூட்டணியிலிருந்து வெளியேற வேண்டிய அவசியமில்லை.

ஒரு சில கம்யூனிஸ்டுகள் சட்ட சபையில் இடம் பெறுவதால் தேசத்துக்குத் தீங்கு ஏற்படாது. அவ்வப்போது அவர்கள் மனநிலையும் சட்டசபைகளில் வெளிப்படுவது நல்லதுதான். 'கூட்டணி மெஜாரிட்டி பெற்றுச் சர்க்கார் அமைத்தாலும் நாங்கள் அதில் இடம் பெற மாட்டோம்' என்று இடதுசாரி கம்யூனிஸ்டுகள் உறுதியாகக் கூறியுள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

* * *

தி. மு. க.வுக்கு உதவுவதாகச் சொல்லிக் கொண்டாலும் காங்கிரஸுக்கு உதவி செய்யவே நான் விரும்புகிறேன் என்று சில தமிழ் நாட்டுக் காங்கிரஸ் பிரமுகர்கள் கூறியுள்ளனர். இவர்களது மூளை அளவுக்கு மீறி வேலை செய்து, இப்படி ஒரு சிறுபிள்ளைத்தனமான கற்பனையைத் தோற்றுவித்திருக்கிறது.

நான் தி. மு. க. வைப் பொறி வைத்துப் பிடித்துவிட்டேன் என்கிறார் தமிழக முதன்

மந்திரி. தி. மு. க. வின் பொறியில் நான் சிக்கிவிட்டேன் என்று என் பழைய நண்பர்கள் பலர் நினைக்கிறார்கள். 'காங்கிரஸைப் பதவியி லிருந்து அகற்ற வேண்டும்; அல்லது குறைந்த பட்சம் அதைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் எதிர்க் கட்சிகள் பலம் பெற வேண்டும்' என்ற ஒரே விருப்பம்தான் என்னைப் பொறி வைத்துப் பிடித்துள்ளது: வேறெதுவுமல்ல.

⁂

ஒரு சில தினங்களில் தேர்தல்கள் முடிந்து விடும். அதன் முடிவு ஆகிறபடி ஆகட்டும். இனி எதிர்காலத்தில் தேர்தல் முறையைச் சீர்செய்வது பற்றி ஆராய்வோம்.

மேற்கு ஜெர்மனியில் தற்போதுள்ள சட்ட சபைத் தொகுதிகளில் இரண்டிரண்டை இணைத்து ஒரு தொகுதியாக்குவதற்கு யோசிக் கப்படுகிறது. இத் தொகுதிகள் ஒவ்வொன்றும் நான்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும். மைனாரிட்டி கட்சிகளும் பிரதிநிதித்வம் பெறவே இந்த யோசனை கூறப்பட்டிருக்கிறது. உதாரணமாக அறுபது சதவிகிதம் வாக்கு களைப் பெற்ற கட்சி நான்கில் மூன்று ஸ்தா னங்களைப் பெறும். அதற்கடுத்தபடி அதிக வாக்குப் பெறும் கட்சி ஒரு ஸ்தானம் பெறும்.


பிரிட்டிஷ் முறைப்படி மெஜாரிட்டி பெற்ற ஒரு கட்சிக்கு மட்டும் ஸ்தானம் தராமல், மற்ற கட்சிகளும் தங்கள் வோட்டு விகிதப் படி சட்ட சபையில் ஸ்தானம் பெறுகிற விகி தாசாரப் பிரதிநிதித்வ முறையை ஸ்ரீ எம். ஆர். மஸானி நீண்ட காலமாக ஆதரித்துப் பேசி வருகிறார். என்னைப் பொறுத்த மட்டில், நம் நாட்டில் வோட்டுச் செய்பவர்கள் மனப் பூர்வமான பிரியத்தின்மீது மட்டுமே அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்ல மாட்டேன். அறியாமை — அச்சம் — பணத்தின் பங்கு இவையும் வாக்களிப்பைப் பெரிதும் பாதிக் கின்றன. எனவே, தேர்தல் முறையில் செய் யப்படும் எந்தச் சீர்திருத்தத்தையும் சக்தி யற்றதாகவே கருதுகிறேன். எனினும் மேலே குறிப்பிட்ட விகிதாசாரப் பிரதிநிதித்வ முறையை ஆதரிப்பதற்குப் பலமான கார ணங்கள் உண்டு.


அதோடு, பல்வேறு தொழில்களையும் துறை களையும் சேர்ந்தவர்கள் தத்தம் பிரதிநிதி களைத் தேர்ந்தெடுத்து அனுப்பவும் இட மிருக்க வேண்டும். இதனால் ஆட்சியாள ருக்குத் தெரியாத விஷயங்களில் அவர்கள் தலையிடும்போது அவர்களுக்குச் சட்ட சபை யில் நம்பகமான அறிவுரைகள் கிடைக்கும்.




சென்ற 9-2-67 அன்று கல்கி காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் ராஜாஜி பல விஷயங்களைத் தெளிவு செய்தார். இந்தியாவின் முக்கியமான பத்திரிகைகள் மட்டுமின்றி அந்நியப் பத்திரிகைகளின் நிருபர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.







இந்தக் கப்பல்....





சென்னையில் அடித்த பலமான புயலின் போது கரை தட்டிய கப்பல் நாளாவட்டத்தில் பிளக்கவும் செய்தது. அதைப் பகுதி பகுதியாகப் பிரித்து எஃகையும் மரத்தையும் ஏலத்தில் போட ஏற்பாடு நடக்கிறது.

ஆனால், பிரிட்டனில் தயாராகி வரும் 'மல்டி பாக்கெட்' என்ற பெயர் கொண்ட கப்பலில் கடலில் மிதக்கும்போதே அது பகுதி பகுதியாகப் பிரிவதற்கான வசதி உள்ளது! சாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பல் இது. ஒரு துறைமுகத்துக்குச் சென்றடைந்ததும் இக்கப்பலில் சாமான்கள் உள்ள பகுதி மட்டும் தனியே பிரிந்து விடும். பாரம் தூக்கிகள் அதில் உள்ளவற்றைத் துறைமுகத்தில் இறக்கி முடிக்கும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. கப்பலின் இஞ்சின் உள்ள பகுதி தனியாகத் தன் பயணத்தைத் தொடரலாம்; அல்லது அந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதிப் பொருள்களுடன் தயாராகக் காத்திருக்கும் வேறு ஒரு கப்பல் பகுதியைத் தன்னுடன் இணைத்துக் கொண்டும் இந்தக் கப்பல் புறப்படலாம்! ரயில் பெட்டித் தொடரில் ஒரு பெட்டியைக் கழற்றிவிட்டு வேறு ஒரு பெட்டியை இணைப்பதில்லையா? அது போலத்தான்! இதனால் துறைமுகங்களில் கப்பல் காத்திருக்க வேண்டிய நேரம் வெகுவாகக் குறைகிறதாம். விளைவு? அதிக வியாபாரம்; அதிக லாபம்!

இந்தச் சைக்கிள்...

போலந்தில் மடித்து வைக்கக்கூடிய சைக்கிளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்! இதற்கு ''3203 பைசைக்கிள்'' என்று பெயர்! இதை மடிப்பதற்குப் பிரத்தியேக ஆயுதம் எதுவும் வேண்டாம். தேவையானபோது 'சட்புட்'டென்று மடித்து ஒரு நடுத்தர அளவுள்ள 'ஸூட் கேஸ்' பெட்டிக்குள் வைத்து எடுத்துக் கொண்டு போகலாம். இதில் இன்னுமொரு வசதியும் அதிசயமும் என்னவென்றால் இந்த ஒரு சைக்கிளையே பெரியவர்களும், ஓட்டலாம், சிறுவர்களும் ஓட்டலாம். அதற்கு ஏற்றபடி இதை உயரமாக்கவோ குட்டையாக்கவோ இயலும்!

புரியாத விஷயம்!

எத்தனையோ அற்புதங்களை விஞ்ஞானம் சாதிக்கிறது. எனினும் நம் இரைப்பை தன்னைத்தானே ஏன் ஜீரணித்து விடவில்லை என்பது விஞ்ஞானிகளுக்கு இன்னமும் புதிராகத்தான் உள்ளது. 'இரைப்பைக்கு உயிர் உள்ளது. அதனால்...' என்ற காரணம் சரியல்ல. ஏனெனில் உயிருள்ள ஒரு சிறு ஜந்துவை விழுங்கிவிட்டால் அது நம் வயிற்றில் ஜீரணமாகி விடுகிறதே!




தோழியில் ஒருவர்!

அந்தச் சிறுமி ஒரு குறும்புக்காரச் சிறுமி! வகுப்புக்களுக்கு இடையே நேரம் கிடைக்கும்போதும், இடைவேளைக்குப் பிறகு வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னும் தன் சிநேகிதியுடன் சேர்ந்து ஆடிப் பாடி மகிழ்வது அவளுடைய விருப்பமான பொழுதுபோக்கு.

ஒரு நாள் பிற்பகல் அந்த இரண்டு சிறுமிகளும், தாங்கள் காப்பியடித்துப் பாடி மகிழ எடுத்துக் கொண்ட விஷயம் சற்று அசாதாரணமானது! அன்று காலை அவர்கள் பள்ளிக்கு வரும் வழியில் யாரோ ஒரு கிழவி ஒப்பாரி வைத்துப் புலம்பிக் கொண்டிருந்ததைக் கவனித்திருந்தார்கள். அந்த ஒப்பாரி வாசகம் அவர்கள் மனத்தில் பதிந்துவிட்டிருந்தது.

பிற்பகல் இடைவேளையின்போது அந்தக் குறும்புக்காரச் சிறுமிக்கு, காலையில் கேட்ட





இவருக்குக் கிடைத்துள்ள பட்டம் பாரதநாட்டில் இவரைத் தவிர இன்னும் ஐந்து பெண்களுக்கே கிடைத்துள்ளது!

புலம்பல் ஒலி நினைவுக்கு வந்து விட்டது. அவ்வளவுதான்! அந்தக் கிழவி போலவே குரல் எடுத்து அலற ஆரம்பித்தாள்! அவள் சிநேகிதியும் அவளுக்கு அவ்வப்போது நினை ஊட்டி உதவி செய்தாள். அதை ரசிக்க மற்ற மாணவிகளும் சேர்ந்தார்கள்.

அவர்களுக்கு வேடிக்கையாக இருந்த இந்த விஷயம் அதைக் கவனித்துக்கொண்டே வந்து சேர்ந்த கணித உபாத்தியாயினிக்கு ஆத்திரமூட்டும் விஷயமாக இருந்தது. வகுப்பு ஆரம்பித்ததும் அந்த மாணவியைத் தண்டிக்கும் வகையில் அவளைப் பெஞ்சியின் மேல் ஏறி நிற்கச் செய்து விட்டாள்.

தண்டனை என்று பெறுவது அதுதான் முதல் தடவை அந்தச் சிறுமிக்கு. ரோஷம் தாங்காமல் 'ஓ'வென்று அழ ஆரம்பித்துவிட்டாள். உபாத்தியாயினிக்குத் தர்மசங்கட நிலையாகி விட்டது. ''நீ இப்படி அழுது ஆகாத்தியம் செய்வதைப் பார்க்கும் போது உன் ஒப்பாரியே தேவலை என்று நினைக்கத் தோன்றுகிறது. உட்கார்ந்து தொலை'' என்று கருணை காண்பித்தாள்.

அப்புறம் அந்தச் சிறுமி உபாத்தியாயினியின் கண்களில் அகப்படவும் இல்லை; தண்டனை பெறவும் இல்லை. ஆனால் வளர்ந்து படித்துப் பெரியவளான பிறகு சென்னை மாநில பெற்றோர்கள்— உபாத்தியாயர்கள் சங்கத்தின் பொறுப்பான காரியதரிசி பதவி ஏற்றுக் குழந்தைகள் மனத்தை எப்படிப் பக்குவமாகப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வர இயலும் என்று ஆராய்ச்சிபூர்வமாக எடுத்துச் சொல்லக்கூடிய தகுதி பெற்றிருக்கிறார்.

திருமதி கியாஸ் உன்னிசா பேகம், எம்.ஏ. எம். இடி. பட்டங்கள் பெற்றுச் சென்னை நகரசபை கல்வி இலாக்காவில் உதவி அதிகாரியாகப் பணியாற்றினாலும், அன்று தம் குறும்புத்தனத்துக்காகப் பெஞ்சு மேல் ஏறி நின்ற நிகழ்ச்சியை மறக்கவில்லை. அதன் அடிப்படையில்தான் இன்றும் பள்ளிச் சிறுவர் சிறுமியரை, அடிக்காமல் பயமுறுத்தாமல் திருத்தி நல்லவர்களாக்கலாம் என்றும் கண்டுகொண்டிருக்கிறார்.

ஆர்க்காட்டு நவாப் பரம்பரையைச் சேர்ந்த கியாஸ் உன்னிசா பேகம், கலைத் துறையில் எம். ஏ. பட்டம் பெற்றதோடல்லாமல், ஆசிரியர் பயிற்சியிலும் எம்.ஏ.க்குச் சமமான எம். இடி. (M. Ed.) பட்டம்பெற்றார். தென்னிந்தியாவிலேயே இந்த எம். இடி. பட்டத்தைப் பெற்ற முதல் இஸ்லாமியப் பெண்மணி கியாஸ் உன்னிஸா பேகம்தான். உடனடியாக நகரசபை கல்வித் துறையில் மேற்பார்வையாளராக உத்தியோகம் கிடைத்தது. சில ஆண்டுகளில் பதவி உயர்ந்து உதவி கல்வி அதிகாரியானார்.

மீண்டும் சென்னை மாநிலத்துக்கும் ஸ்திரீகள் சமூகத்துக்கும் பெருமை தேடித் தரும் வாய்ப்பு இவரையே அடைந்தது!

கல்வித் துறையில் பல ஆராய்ச்சிகள் செய்திருக்கும் இவர், உயர் கல்வியைப்

பற்றித் தாம் எழுதிய கட்டுரை ஒன்றை இங்கிலாந்திலுள்ள ராயல் ஏஷியாடிக் சொஸைட்டி என்னும் நிறுவனத்துக்குப் பாரத உதவி ஜனாதிபதி ஜாகிர் ஹுசேன் மூலம் அனுப்பி வைத்தார்.

சுமார் நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னால் நான்காவது ஜார்ஜ் மன்னரின் ஆதரவால் தோற்றுவிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் ஆசியா கண்டம் சம்பந்தமான கலை, விஞ்ஞான ஆராய்ச்சிகளைக் கவனித்துப் பாராட்டும் ஒரு நிறுவனமாக இன்றும் விளங்கி வருகிறது.


அந்த நிறுவனம் ஜெயாஸ் உன்னிசா பேகத்தின் கல்வித் துறை சம்பந்தப்பட்ட ஈடுபாடுகளைக் கண்டு அவரைப் பாராட்டும் வகையில், எப்.ஆர்.ஏ.எஸ். (F. R. A. S. (Lond) Fellow of Royal Asiatic Society) என்னும் விருதைச் சமீபத்தில் வழங்கியிருக்கிறது.

தென்னிந்தியாவில் இந்த விருதைப் பெறும் முதல் பெண்மணி இவர்தான். பாரதத்திலேயே இவருக்கு முன்னால் ஐந்து பெண்மணிகள்தான் இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். (ஸ்ரீமதி எஸ். வாடியா—பம்பாய் 1930; ஸ்ரீமதி ஊர்மிளா சர்மா—1955; குமாரி ஏ. ரூபிஸ்ரோ — எர்ணாகுளம் 1959; ஸ்ரீமதி பகவான் அகர்வால்—டில்லி 1959; குமாரி கோயில் பரம்பில்—புதுடில்லி 1961, ஸ்ரீமதி ஜெயாஸ் உன்னிஸா பேகம்—சென்னை 1966). ஆகவே ஐம்பது கோடி ஜனத்தொகை கொண்ட பாரத நாட்டில் இவரை ஆயிரத்தில் ஒருவரல்ல, லட்சத்தில் ஒருவருமல்ல, கோடியில் ஒருவர் என்பது பொருத்தம்தானே!

''இன்றைய குழந்தைகள்தான் நாட்டின் நாளைய செல்வங்கள்! அவர்களை நல்ல முறையில் உருவாக்கி, நாட்டின் அறிவு, பொருளாதாரக் கலைக் காவலர்களாக்கும் கடமை இன்றையக் கல்வித் துறையின் மகத்தான பொறுப்பு. அந்தத் துறையில் எனக்குப் பணி செய்ய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று நினைக்கும்போது நான் அதிருஷ்டசாலி என்று பெருமைப்படுகிறேன்'' என்று கூறும் இந்த அம்மையார், சென்னை நகர சபைதான் 1925ஆம் ஆண்டிலேயே ஏழைக் குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது என்று பெருமையுடன் எடுத்துச் சொல்கிறார்.



விமானி மரீனா



விண்வெளி விமானி பவெல் பொபோவிச்சின் மனைவி மரீனா இன்று ஒரு சோதனை விமானியாகப் பணியாற்றுகிறார். சோதனை விமானி எவருக்கும் விமானம் ஓட்டுவதில் அபாரத் திறமை மட்டுமின்றி, வியக்கத்தக்க உடல் வலிவும் நெஞ்சுறுதியும் சிப்புத் தன்மையும் அவசியமாகும்.

மரீனா பொபோவிச்சுக்கு 34 வயதாகிறது. 1941-ல் யுத்தம் ஆரம்பமான போது அவருக்கு வயது எட்டு. மரீனாவும் அவ்வூரின் சிறுவர்கள் சிலரும் சோவியத் போர் விமானத்துக்கும் பாசிஸ்டு விமானங்களுக்கும் நடைபெற்ற கடும் போரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பகைவனின் போர் விமானங்களில் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டன. ஆனால் சோவியத் விமானத்திலும் தீப் பிடித்துக் கீழே விழுந்து நொறுங்கிற்று. இதைக் கண்ணுற்ற மரீனாவும் அச்சிறுவர்களும் தாமும் பெரியவர்களானதும், விமானிகள் ஆவோமெனச் சபதமேற்றனர்.


இந்தச் சபதத்தை நிறைவேற்றுவது சுலபமாக இருக்கவில்லை. தொழில் நுட்பப் பள்ளி மாணவியாக இருக்கையிலேயே மரீனா விமானிப் பயிற்சி மன்றத்தில் சேர முயன்றார். ஆனால் உயரம் போதாதென்று அவரை ஏற்க மறுத்து விட்டனர். பிறகு தமது ஓய்வுநேரம் முழுவதையும் தம் உயரத்தை அதிகரிக்கச் செய்வதற்கான உடற்பயிற்சிகளில் செலவிட்டு வந்தார். தினமும் காலையில் கால்களை மேலே உத்தரத்தில் கட்டிக் கொண்டு தலைகீழாய்த் தொங்கிப் பயிற்சிகள் செய்தார். இறுதியில் அவரை விமானிப் பயிற்சி மன்றத்தின் விமானம் ஓட்டும் பிரிவில் சேர்த்துக் கொண்டனர். ஓராண்டுக்குள் அவர் ஒரு விமானியானார்.

நீண்ட காலப் பயிற்சிக்குப் பிறகு சென்ற 1965ஆம் ஆண்டு கோடையில் காற்றழுத்த அறையில் பூர்வாங்கப் பயிற்சிகள் முடிந்தபின், மரீனா வானுச்சிக்கான பிரத்தியேக உடைகள் அணிந்து ஒற்றை ஆசன இரண்டு இஞ்சின் சோவியத் ஆர். வி. விமானத்தில் ஏறி 2000 கிலோ மீட்டர் சுற்றுப் பாதையில் மணிக்கு 735.048 கிலோ மீட்டர் வேகம் காட்டிப் புதிய உலக சாதனையை ஏற்படுத்தினார்.

இனசி காலையில் மரீனா விமான நிலையத்துக்குப் போய் விடுகிறார். போக்குவரத்து விமானங்களை ஓட்டிச் சென்று சோதனைகள் நடத்துகிறார்.

– சோவியத் நாடு







கிரேக்க நாட்டுப் புராணக் கதை ஒன்றில் பிக்மேலியன் என்ற சிற்பி மானசீகமாக ஓர் அழகியின் உருவத்தைக் கல்லிலே சிலையாகச் செதுக்கினான். அந்த அழகுச் சிலை அந்தச் சிற்பியின் மனத்தைக் கவர்ந்து, அதன்பால் அவன் உள்ளத்தில் காதலைத் தோற்றுவித்தது. அந்த நாட்டுக் காதல் தெய்வமான அஃப்ரோடைட், அம் மோகனச் சிற்பத்துக்கு உயிரை அளித்து 'கலாட்டியா' என்ற பெயருடன் அந்தச் சிற்பிக்கு மனைவியாகவே மாற உதவி செய்தது.

லண்டனுக்கும் நையாண்டிக்கும் பெயர்போன ஜார்ஜ் பெர்னார்ட்ஷா, இந்தக் கதையின் அடிப்படையிலே பிக்மேலியன் என்ற தலைப்பைக் கொடுத்தே ஓர் அற்புதமான மேடை நாடகத்தை எழுதினார். ஆங்கில மொழியையும் பிரஞ்சு மொழியையும் அந்த நாட்டவர்களாலேயே சரியாக உச்சரித்துப் பேச முடிவதில்லை என்ற மனக்குறை ஷாவுக்கு உண்டு. இதைச் சுட்டிக் காட்டும் வகையில் தான் தம்முடைய சொந்த 'பிக்மேலியன்' நாடகத்தில் ஒரு கற் சிற்பிக்குப் பதிலாக ஒரு சொற்சிற்பியை — மொழி உச்சரிப்பு விற்பன்னனை ஹிக்கின்ஸ் என்ற பெயரில் சிருஷ்டித்தார்.


சொற் சிற்பி ஹிக்கின்ஸினால் உருவாக்கப் பட்டவள் எலிஸா. முழுக்க முழுக்கக் கொச்சையாகவே மொழி பேசும் ஒரு பூக்கார யுவதியான எலிஸா டூலிட்டிலுக்கு ஹிக்கின்ஸ், தம் உழைப்பால் உயர்ந்த சமூகத்தோர் பேசும் பாணியில் உச்சரிப்பைக் கற்றுக் கொடுத்து, உயர் வட்டாரங்களில் அந்தஸ்தைத் தேடிக் கொடுக்கிறார். எலிசாவோ, பழைய வாழ்க்கைக்கும் திரும்ப முடியாமல், புதிய வாழ்க்கையிலும் பொருந்த முடியாமல் தவிக்கிறாள்.

ஷாவும் சோவும்



1912ம் ஆண்டில் ஷா எழுதிய இந்த நாடகத்தை 'மை ஃபேர் லேடி' என்ற புதுத் தலைப்புடன் 1956ம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் தேதி நியூயார்க் நகர பிராட்வே நாடகஅரங்கில் அரங்கேற்றம் செய்தபோது நாடக உலகில் புரட்சியே ஏற்பட்டுவிட்டது. ஆலிவர் ஸ்மித் என்னும் அரங்க நிபுணர் ஆறு மாத காலம் திட்டமிட்டு உழைத்து எண்பதினாயிரம் டாலர் செலவில் பத்துக் காட்சி அமைப்புக்களை நிர்மாணித்தார். ஆலன் ஜே லெர்னர், பிரடரிக் லாவி என்ற இரு சாகித்தியகர்த்தாக்களும் இந்த நாடகத்துக்காக என்றும் செவிகளில் ஒலிக்கும் வண்ணம் பதினைந்து பாடல்களை எழுதினார்கள். ஒவ்வொரு பாட்டும் 'ஓஹோ' என்று அமைந்தது.

ஆரம்ப தினத்தன்றே நாடக ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இந்த நாடகம், இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து தினசரி அமோக வெற்றியுடன் நடந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! நாடகத் தயாரிப்புக்கான செலவு நாலு லட்சம் டாலர்களுக்கு மேலாயிற்று. நிகர லாபம் ஐம்பது லட்சம் டாலர்களை எட்டியது. நாடக டிக்கெட்டுகளை ரிசர்வ் செய்ய மாத்திரம் தினசரி மூவாயிரத்துக்கு மேலான கடிதங்கள் செக்குகளுடன் வந்தனவாம். இந்த நாடக நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்றிருந்த கொலம்பியா பிராட்காஸ்டிங் கார்ப்பொரேஷன் நாடக வருலில் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது.



“அவர் ஆட்டி வைத்தால் ஆடாதார் யார்?” — அவையடக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

பிரபல திரைப்பட நடிகர் ரெக்ஸ் ஹாரிசன் ஹிக்கின்ஸாகவும் புது அறிமுகமான நடிகை ஜூலி ஆண்ட்ரூஸ் எலிஸாவாகவும் நடித்தனர்.

நியூயார்க் பிராட்வே அரங்கப் பகுதியில், பிரபல நடிகர்கள், சமூகப் பிரபலஸ்தர்கள், பத்திரிகை விமரிசகர்கள் கூடும் 'சார்டி' உணவு விடுதி இருக்கிறது. புதிய நாடகங்கள் அரங்கேற்ற தினங்களில் பின்னிரவு நேரத்தில் அங்கு கூட்டம் ஜே ஜே என்றிருக்கும். நாடக மேக்கப்பைக் கலைத்துவிட்டு நடிகர்கள் அங்கு உணவருந்த வருவார்கள். விமரிசகர்கள் நாடகம் முடியும் தறுவாயிலேயே தங்கள் விமரிசனங்களை எழுதி முடித்துத் தங்கள் பத்திரிகைக் காரியாலயங்களுக்கு டெலிபோன் செய்து சூட்டோடு சூடாக அவைகள் அச்சாகி விடும். காலைப் பதிப்புகளின் தினசரி இதழ்கள் இந்த விமரிசனங்களைத் தாங்கிப் பிறருக்கு விநியோகமாகுமுன்பே, முதல் பிரதிகள், 'சார்டி' ஹோட்டலுக்குக் கிடைத்துவிட ஏற்பாடு உண்டு. ஹோட்டல் அதிபர், அந்த விமரிசனங்களை உடனடியாக அறிவிப்புப் பலகையில் ஒட்டிவிடுவார். பிரதான நடிகர்கள் மேக்கப்பைக் கலைத்துவிட்டு இந்த ஹோட்டலுக்கு வரு முன்பே அங்கே குழுமியுள்ளவர்கள் இந்த விமரிசனங்களைப் படித்து விடுவார்கள். அத்தனை வேகம் அங்கே!

அன்றைய நாடக நடிகர்கள் விமரிசகர்களிடம் நல்ல பெயர் வாங்கியிருந்தால், அவர்கள் ஹோட்டலுக்குள் நுழையும் போது அங்கிருப்பவர்கள் எழுந்திருந்து கைதட்டிப் பாராட்டைத் தெரிவிப்பார்கள்! இல்லாத போதும் மௌனமாகவே இருந்துவிடுவார்கள். நடிகர்களுக்கு இந்த நிலை ஓர் அளவுகோல் போல!

அன்று ஜூலி ஆண்ட்ரூஸ், 'சார்டி' ஹோட்டலுக்குள் அதிகாலை மூன்று மணி சுமாருக்கு நுழைந்தபோது, கூடியிருந்தவர்கள் எழுந்திருந்து கை தட்டுவதோடு மாத்திரம் நிற்கவில்லை! உற்சாக ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்! சாதாரணமாக யாருக்கும் கிடைக்காத பாராட்டு இது!

■ ஹாலிவுட்டில் ஜூலி ஆண்ட்ரூஸ்

■ 'மனம் ஒரு குரங்கு' நாடகம். கோபிநாத்தாக "சோ", மாலதியாக சுகுமாரி.

■ "ஸ்ரீராஜ்"ஜுடைய படைப்பான "புலவர் மாறா"வில் மாறனாக நடிக்கும் திரு ராஜபாண்டியன்.

■ 'மை ஃபேர் லேடி' திரைப்படத்தில் ஆட்ரி ஹெப்பர்ன், ரெக்ஸ் ஹாரிஸன்.









ஷீ லி ஸா லோ கூ!

ஷீலி ஸா லோ கூ: லோ டி அன் காலோ என்ற இந்த இரண்டு வார்த்தைகளும் மந்திரமுமல்ல, மாயமுமல்ல; இந்த இரண்டும் தமிழ் மன்னர்களின் பெயர்கள்!

அனபாய குலோத்துங்கன் சீனத்திற்குத் தனது தூதரை அனுப்பினான். ராஜராஜன், அனபாய குலோத்துங்கன் இருவரும் சீன நூல்களில், ஷீ லி ஸா லோ கூ என்றும், லோ டி அன் காலோ என்றும் குறிக்கப்படுகின்றனர்.

தகவல்: பி. வேதகிரி
ஆதாரம்: 'தமிழ் உணர்ச்சி'
- யோகி சுத்தானந்த பாரதியார்

இத்தனை வெற்றிக்குப் பிறகும் லண்டனில் இந்த நாடகம் நடைபெற்றபோது அவர்கள் காட்டிய அவையடக்கம் விளம்பரத்தில் இடம் பெற்ற ஒரு படம் மூலமே விளங்கியது. நாங்கள் எதையும் சாதித்துவிடவில்லை; ஷா எங்களை ஆட்டுவிக்கிறார், நாங்கள் ஆடுகிறோம் என்று சொல்லாமல் சொல்லும் பாணியில் இந்தக் கார்ட்டூன் படம் அமைந்திருந்தது.

நாடகத்தின் வெற்றி அடிப்படையில், 'மைஃபேர் லேடி' திரைப்படமாகவும் வெளிவந்து உலகப் புகழ் பெற்றது. திரைப்படத்தில் ஜூலி ஆண்ட்ரூஸுக்குப் பதிலாக எலிஸாவாக ஆட்ரே ஹெப்பர்ன், ரெக்ஸ் ஹாரிசனுடன் நடித்தார்.

இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு, விஜயம் செய்த ஷாவின் 'பிக்மேலியனை'த் தமிழ்நாட்டு ரசிகர்களுக்கும் அறிமுகப் படுத்தி வைக்கும் பணியை இரு இளைஞர்கள் மேற்கொண்டார்கள்.

ஒருவர் ஏற்கனவே தம் கிண்டல் நாடகங்களின் மூலம் ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமாயிருக்கும் நடிகர் ''சோ''.

மற்றொருவர் அறிமுகத்தின் ஆரம்பகட்டத்திலிருக்கும் இலக்கிய வாடை எழுத்தாளர் ''ஸ்ரீராஜ்''.

இருவரும் ஷாவின் படைப்பை வெவ்வேறு கோணங்களில் நின்று கவனித்திருக்கிறார்கள்.

முன்னவர், ஷா கிரேக்க இதிகாசத்திலிருந்து கருத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு, 'ஹிக்கின்ஸை'யும் 'எலிசா'வையும் சிருஷ்டித்தது போல் 'பிக்மேலியனி'ன் கருத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு 'கோபி நாத்'தையும் 'மருதாயி'யையும் உலவ விட்டு இன்றைய சமூகத்தின் போலி நாகரிகத்தை நையாண்டி செய்கிறார் தம் நாடகம் 'மனம் ஒரு குரங்கு' வாயிலாக!

பின்னவர் 'பிக்மேலியன்' கதையை அப்படியே எடுத்துக் கொண்டு, 'தமிழ் மொழியின் தரமான உச்சரிப்பே என் லட்சியம்' என்று முழங்கும் 'புலவர் மாறன்' பாத்திரத்தைச் சிருஷ்டித்து அவரிடம் பூக்காரக் 'குழலி'யையே கொண்டு வந்து சேர்த்து, மொழி உச்சரிப்புப் பயிற்சி எல்லையோடு நிற்காமல் நம் நாட்டு முத்திரையான பண்பின் பயிற்சியையும் இணைத்து ஓர் இலக்கிய நாடகமாக உருவாக்கியிருக்கிறார். 'புலவர் மாறன்' இவருடைய சிருஷ்டி.

''இன்றைய உயர் சமூகத்தில் நிலவும் சில போலித் தன்மைகளை உடைத்துக் காட்டிக் கேலி செய்ய வேண்டும் என்பது தான் என் நோக்கம். என் நண்பர் வேதாந்தம் சீனிவாசன் (இவரும் 'சோ'வைப்போல் ஒரு வழக்கறிஞர் தான்) பல நாட்களாக இந்த 'பிக்மேலியன்' அடிப்படையில் ஒரு நாடகத்தை எழுதி மேடையேற்ற என்னைத் தூண்டிக் கொண்டிருந்தார்! நானும் அந்த எண்ணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே தான் வந்தேன். இரண்டொரு ஆங்கில வார்த்தைகளை மாத்திரம் சமயத்துக்கு ஏற்றவாறு ஏற்றி இறக்கி அலட்சியத்துடன் உதிர்த்துவிட்டு அநாயாசமாகப் பெரிய மனிதப் பட்டம் வாங்கிக் கொண்டு போகும் சிலரைப் பார்த்தபோது ஏன் இவர்களுடைய அட்டகாசத்தைக் கிழித்துக் காட்டக்கூடாது என்று தோன்றியது! மேடையில்தான்! நண்பர் தூண்டுதலும் நினைவு வந்தது. ஹிக்கின்ஸ் இடத்தில் கோபிநாத் பாத்திரம் உருவாயிற்று. சாதாரண எழுத்தறிவில்லாத கறிகாய்க்காரி மருதாயியை மாலதியாக மாற்றி மல்லிகாதேவியாகப் பரிணமிக்கச் செய்து, சமூகத்தில் அவள் அந்தஸ்தை எவ்வளவு உயர்த்த முடியுமோ அவ்வளவு உயர்த்தி அவள் வாழ்க்கையை ஒரு பிரச்னையாக மாற்றினேன்! மாறிக் கொண்டே இருக்கும் மனம், கிளைக்குக் கிளை தாவிக் கொண்டே யிருக்கும் குரங்கு போலத் தானே? மனம் ஒரு குரங்கு என்று ஒரு தலைப்பைக் கொடுத்து அதற்கு மேலும் வலு அளிக்கும் வகையில் செல்லப்பா — ஹேமா ஜோடியைப் புகுத்தினேன். ஆரம்பத்திலே மருதாயி மாறுதலை மிகவும் ரசித்த சில 'ஃபாஷனபிள்' பெண்மணிகள் அப்புறம் என் மேல் கோபமே காட்ட ஆரம்பித்தார்கள். போதாக் குறைக்கு 'சோ' எழுதிய 'மனம் ஒரு குரங்கு' என்பதைச் சுருக்கி 'சோவின் மனம் ஒரு குரங்கு' என்று போடப் போக, அமர்க்களமாகி விட்டது! அதுவும் எனக்குச் சாதகம்தான்'' என்கிறார் 'சோ'.

''எனக்கு ஷேக்ஸ்பியர், பெர்னார்ட் ஷா போன்ற மேதைகளின் நாடகங்களை ஒருவித இலக்கிய ஆர்வத்துடன் படிப்பதில் ஈடுபாடு உண்டு. ஆத்ம திருப்திக்காகவும், இலக்கிய நயத்தை ரசிப்பதற்காகவும் இந்த வழக்

த்தை மேற்கொண்டேன். ஆனால் ஷாவின் பிக்மேலியனைப் படித்த போது ஏன் தமிழ் மொழி உச்சரிப்புத் திருத்தத்துக்காகவும் ஒரு புரொபசர் ஹிக்கின்ஸை சிருஷ்டி செய்து ஒரு நாடகம் எழுதிப் பார்க்கக் கூடாது என்று தோன்றியது. என் நண்பர்கள் உற்சாகமளித்தார்கள். என்னுடைய புரொபசர் ஆங்கிலம் படித்த பேராசிரியர்தான். ஆனால் தமிழ் மொழி ஆராய்ச்சியாளர். ஒரு மொழியின் ஜீவன் அதன் சரியான உச்சரிப்பில்தான் இருக்கிறது என்று பிடிவாதமாக இருப்பவர். அவரிடம் பூக்காரக் குழலியைக் கொண்டு வந்து சேர்ப்பதன் மூலம் நான் 'ஷா'வை அப்படியேதான் பின்பற்றினேன், கதையைப் பொறுத்தவரை! ஆனால் குணங்களைப் பொறுத்தவரை நான் நம் நாட்டு மரபுக்கு முதலிடம் கொடுத்தேன். 'புலவர் மாறன்' என்ற தலைப்பு இந்தச் சமூக நாடகத்துக்குப் பொருந்தியிருக்குமா? இந்தப் பெயர், ஏதோ சரித்திர நாடகத்தையோ காவிய நாடகத்தையோ நினைவூட்டக் கூடியதாக இருக்குமோ என்றெல்லாம் சில நண்பர்கள் சந்தேகக் குரல் கொடுத்தார்கள். நான் அந்தக் குரல்களைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. என்னுடைய கதாநாயகன் ஒரு தமிழ்ப் புலவர்! அதை அப்படியே சொல்லாவிட்டால் நான் அந்தப் பாத்திரத்துக்கே அநீதி இழைத்தவனாவேன்'' என்கிறார் 'ஸ்ரீராஜ்'. இவர் ஏ. எம். ஐ. இ. வகுப்பில் படித்துப் பொறி இயல் கற்றுக் கொள்ளும் மாணவர்.

'சோ' அனாயாசமாக ஆங்கிலத்தையும், தமிழையும் கலந்து நகைச்சுவைப் புயலை எழுப்பி ரசிகர்களைச் சிரிக்க வைக்கிறார். ''ஹௌ நைஸ்!'', ''ஹௌ ஸ்வீட்!'', ''ஓ... போரிங்'' என்ற ஆங்கிலப் பதங்களை அபிநயத்துடனும் குரல் நயத்துடனும் அவர் மருதாயிக்குச் சொல்லிக் கொடுக்கும்போது அரங்கம் சிரிப்பில் அதிர்கிறது.

'ஸ்ரீராஜ்'ன் தமிழ் வசனங்கள் கடகடா ஒலியும் அகராதி தேடிப் போக வேண்டிய நிலையும் இல்லாமல் தெள்ளிய நீரோடை போலத் தேனைப் பாய்கிறது. ''தமிழில் என்ன இருக்கிறது என்று கேட்கிறீர்கள்?'' என்று வினா எழுப்பி விட்டுத் தம் நண்பருக்குப் பதில் சொல்லும் வகையில் ''அமுதத் தமிழ்க் கடலின் ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் அழகிய முத்துக்களைக் கோத்துக் கோத்துச் சொல்கிறேன். கூர்ந்து கேளுங்கள்!'' என்று ஆரம்பித்து, ''ஏட்டுக்கு ஏடு தேன் இனிக்கும் கம்பன், வீட்டுக்கு வீடு தமிழ் மணக்கும் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி'' என்று புலவர் மாறனாக நடிக்கும் ராஜ பாண்டியன் முடிக்கும்போது ஒருவித சிந்தனை மயக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறார்கள் ரசிகர்கள். இடையே ஒரு வார்த்தை தடுமாற்றம் ஏற்பட்டாலும் கேலிக்கூத்தாகப் போய்விடும். அந்த நிலையிலும் அந்தப் பாத்திரம் ஏற்றிருக்கும் நடிகர் நன்றாகவே நடிக்கிறார். 'ஸ்ரீராஜ்' சிந்திக்க வைக்கிறார்; 'சோ' சிந்திக்கவும் வைக்கிறார், சிரிக்கவும் வைக்கிறார்.

—மேனு



பிரபலமான அந்த பாங்கிலினுள் நுழைந்த நாட்டுப்புறக் கிழவி சுற்று முற்றும் பார்த்து விசாரித்த பின்னர் சேமிப்பு (ஸேவிங்ஸ் பாங்க்) நிதி குமாஸ்தாவிடம் தன் 'பாஸ்' புத்தகத்தை நீட்டியபடி, தன் கணக்கை முடித்து எல்லாத் தொகையையும் கொடுத்து விடச் சொன்னாள். ''ஒரு ஐந்து ரூபாயாகிலும் வைத்துக் கொண்டு பாக்கிப் பணத்தை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்; பாட்டியம்மா. எதற்கு வீணாகக் கணக்கையே தீர்க்க வேண்டும்?'' என்று குமாஸ்தா யோசனை கூறியதும் வந்ததே கோபம் அந்த அம்மாளுக்கு. ''என் பணத்தைக் கொடு என்றால் கொடுக்க வேண்டியது தானே? உனக்கேன் அந்தக் கேள்வியெல்லாம்?'' என்று 'புசுபுசு'வென்று பாயவே, 'நமக்கேன் வீண் வம்பு' என்று முடிக்க வேண்டிய சம்பிரதாயங்களையெல்லாம் முடித்து, தொகையை எண்ணிக் கையில் கொடுத்தார்.

பாட்டியம்மாள் இரண்டு மூன்று முறை அச்சிறு தொகையை எண்ணிச் சரிபார்த்த பின்னர், ''சரியாகத்தானே இருக்கிறது. அதற்குள் யாரோ இது நம்பகமான பாங்கு இல்லை; நம் பணத்தையெல்லாம் சரியாக வைத்திருக்க மாட்டார்கள் என்று புரளி கிளப்பி விட்டார்களே'' என்று தனக்குள் முணு முணுத்தபடி திரும்பவும் அந்த சேமிப்புக் குமாஸ்தாவிடம் வந்து, ''இந்தாப்பா தம்பி! பாவம் உனக்கு எதற்கு மன வருத்தம்? நீ சொன்னபடியே இதையெல்லாம் திரும்ப என் கணக்கில் போட்டுவிடு. என் பணமெல்லாம் பத்திரமாக வைத்திருக்கிறீர்களா என்று பார்த்தேன், அவ்வளவு தான்!'' என்றாள்.

அந்த அப்பாவிக் குமாஸ்தா பின்புறம் சரிந்து கொண்டிருந்தார்!

உண்மையில் நடந்ததாகச் சொல்லப்பட்ட இந்தச் சம்பவம் பற்றி ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வெளியிடும் 'கொலீக்' பத்திரிகையில் (Colleague) வெளி வந்துள்ளது.

- ஆர். எஸ். மணி



"தங்கத் தம்பி"

தங்கமான பெயர். தகுதியான பாத்திரங்கள்; தரமான நடிப்பு. அண்ணனாக வரும் சுந்தரராஜன் தம் பாத்திரத்தை உணர்ந்து மிகவும் நன்றாக நடிக்கிறார். ஆனால் அவர் நாடகப் பாணியைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும். அண்ணனின் மனைவியாக வரும்' வாணிஸ்ரீ, பகட்டாக உடுத்தி, மிடுக்காகப் பேசித் துடுக்காக நடிக்கிறார்; பாத்திரத்துக் கேற்ற நடிப்பு.

சகோதர பாசத்துக்கு அடுத்தபடியாக இப்படத்தில் குழந்தைப் பாசம் வருகிறது. குழந்தை வளர்ப்பினால் பெண்மையின் அழகு அழிந்து விடும் என்று கருதும் ஓரகத்தியின் குழந்தையை ஏற்றுத் தன் குழந்தையோடு சேர்த்துப் பாராட்டி வளர்க்கும் பாசமுள்ள தாயாக வருகிறார் பாரதி - ஏழைப் பெண்ணாக வந்து ஒரு டாக்டரைக் காதலித்து மணந்து கொள்ளும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டுகிறது. பாரதி இந்தப் படத்தில் நன்றாக நடிக்க முயன்றிருக்கிறார். ஆனால் முயற்சி பலனளிக்கக் காலம் வர வேண்டாமா?

ரவிச்சந்திரன் ஓ. ஏ. கே. தேவருடன் 'கும் கும்' சண்டையிட்டுக் குதியாய்க் குதிக்கிறார்; காதல் காட்சிகளில் நெருங்கி நடித்துப் பாடாய்ப் படுத்துகிறார்; கடைசியில், அண்ணனுடன் சண்டையிட்டு அவனைச் சுட்டுக் காயப் படுத்தி விட்டுத் தவியாய்த் தவிக்கிறார்.

கதை, வசனம் மு. கருணாநிதி எழுதியிருக்கிறார். உரை நடை பல இடங்களில் அடுக்கடுக்காக உயர்ந்து நிற்கிறது.

ஐந்து பாடல்களில் வாலியின் 'ஆளுக்கொரு முத்தம் - இந்த அம்மா கன்னத்திலே' என்ற பாட்டு இனிமையாக ஒலிக்கிறது.

நாகேஷ், மனோரமா வரும் காட்சிகளில் கொட்டகையில் ஒரே சிரிப்பும், குதூகலமுமாயிருக்கிறது.

ஆரம்பத்தில், தளர்நடை போடும் "தங்கத் தம்பி" இடைவேளைக்குப் பிறகு துள்ளியோடிக் கடைசியில் தங்கக் கம்பியாகி விடுகிறான்!

பீகார் பஞ்சம்


பீகார் பஞ்சத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது, மத்திய அரசினரின் செய்தி ஒலிபரப்பு இலாகாவினர் தயாரித்து வெளியிட்டிருக்கும் ஒரு டாக்குமெண்டரி படம். தேர்தல் சமயத்தில் இதைத் திரையிட்ட துணிச்சலைக் கண்டு வியக்கத் தோன்றுகிறது.

பீகார் பஞ்சத்தின் கடுமையும் கொடுமையும் வயிற்றைக் குமட்டும் அளவுக்கு அப்பட்டமாக யாவரும் காணும் வகையில் சித்திரிக்கப்படுகின்றன இந்தப் படத்தில். அதே சமயத்தில் இத்துணை கடுமையான பஞ்சத்தினிடையிலும் தோல்வியை ஒப்புக் கொண்டு சோர்ந்து விடாமல் வாழ்க்கையுடன் இன்னமும் போராடி வரும் மாண்புமிக்க மக்களைப் பாராட்ட நினைக்கிறோம். நமது அநுதாபங்களுடன் நம்மாலான உதவியையும் பிரதம மந்திரியின் பஞ்ச நிவாரண நிதி மூலம் வழங்க முடிவு செய்து கொள்கிறோம்.

வேறு சில எண்ணங்களும் எழுகின்றன. 'எந்த அளவுக்கு நாட்டில் அதருமம் மலிந்து போயிருக்க வேண்டும், வானம் பொய்த்து மக்களை இவ்வளவு பயங்கரமான துன்ப வேதனையில் ஆழ்த்த?' என்று நினைத்துப் பார்க்கிறோம். அப்புறம் இந்தப் பஞ்சத்துக்கு இயற்கைக் காரணங்களை எந்தமட்டில் சொல்லலாம் என்றும் ஆட்சி பீடத்திலுள்ளோர் எந்தமட்டில் பொறுப்பேற்க வேண்டும் என்றும் சிந்திக்கத் தொடங்குகிறோம்.



1. ஆனந்த விகடன் பத்திரிகையில் தொழில்மந்திரி ஆர். வெங்கடராமன் அவர்கள் எழுதிய 'சோஷலிஸ நாடுகளில் மக்கள் தலைவர்' கட்டுரைத் தொடரைப் புத்தகமாகத் தயாரித்துள்ளார் திரு வாசன். புத்தகத்தை மத்திய சர்க்கார் மந்திரி திரு சி. சுப்பிரமணியம் வெளியிட்டுப் பேசினார். விழாவுக்கு முதன் மந்திரி திரு பக்தவத்ஸலம் அவர்கள் தலைமை வகித்தார்.






2. கோவையில் நடந்த தமிழக மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணாதுரை உரையாற்றுகிறார்.


3. திருவாவடுதுறை ஆதீனக் கொலு மண்டபத்தில் திருமந்திர மகாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. திரு சோமு, அறநிலையப் பாதுகாப்பு கமிஷனர் திரு சாரங்கபாணி முதலியார், மதுரை தினமணி ஆசிரியர் திரு வி. சந்தானம் ஆகியோருக்குத் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



4. கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் - ஸ்ரீ கந்தப் பெருமானார் ஆலய மகாகும்பாபிஷேகம் சமீபத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

5. நவாப் ராஜமாணிக்கம் அவர்களின் மதுரை தேவிபால விநோத சங்கீத சபையினரின் சம்பூர்ண ராமாயணம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபை தியேட்டரில் நடைபெற்றது. சிவாஜி கணேசன் தலைமை வகித்துப் பேசினார்.





ரதசப்தமி

பிப்ரவரி 16

அம்புப் படுக்கையில் பீஷ்மர் சயனித்திருந்த சமயம்.

வியாச மகரிஷி பீஷ்மரைக் காணச் சென்றார்.

"எல்லோரும் சௌக்கியம் விசாரிப்பார்கள். நானோ அசௌக்கியம் விசாரிக்கவே வந்திருக்கிறேன். குருநந்தனா, சரக்கூண்டில் சயனித்திருக்கும் உன்னிடம் சுகம் வினவுவது எப்படி ?" என்று உருக்கமாகக் கூறினார் வியாசர்.

"பாதராயணரே, நீங்கள் அசௌக்கியம் விசாரிக்கவே வந்திருக்கலாம். எனினும் என்னுடைய நித்திய சௌக்கியத்துக்கான மார்க்கத்தை நீங்களே சொல்ல முடியும் என்பதையும் நான் அறிவேன்!" என்று சொல்லி நெடுமூச்செறிந்தார் பீஷ்ம பிதாமகர்.

"என்ன சொல்லுகிறாய், அப்பனே ?" என்று வினவினார் வியாச பகவான்.

"தாங்கள் அறியாததா, கிருஷ்ண துவைபாயனரே ! உத்தராயணம் பிறந்தபின் உயிர் துறக்க வேண்டுமென்றே அம்புப் படுக்கை அமைத்துக் கொண்டு அதில் சயனித்தேன். என் உறுதியைப் பார்த்து உலகு வியக்கிறது. ஆனால் உத்தராயணம் பிறந்து ஒரு மாதமாகி விட்டது. பௌஷ மாதம் போய் மாகமும் பிறந்து விட்டது. நானே விரும்பியும்கூட என் ஆவி பிரியக் காணோமே ! இன்னும் எத்துணைக் காலம் அம்புப் படுக்கையில் அவதியுற வேண்டும்? ஏன் இப்படி அவதிப்பட வேண்டும்? நான் செய்த எந்தக் கொடும் பாவத்துக்கு இன்னமும் கழுவாய் செலுத்த வேண்டும் என்பது புரியவில்லையே ! அதைச் சொல்லுங்கள். என் கர்மத்தைக் கழித்துக் கொண்டு நித்திய சௌக்கிய அமர வாழ்வை அடைகிறேன்" என்றார் பீஷ்மர் ஆவலும் ஆதுரமும் தொனிக்க.

வியாசர் க்ஷண காலம் கண்களை மூடியிருந்தார். பிறகு, "காங்கேயா! பிரம்மசரியத்தின் உருவம் நீ! அப்பழுக்கற்ற உன் உள்ளத்துக்கே அனைத்தும் தெரியுமே! கண்ணனையே தனது ஆணை மீறி ஆயுதம் ஏந்த வைத்த உனக்கு நான் என்ன சொல்ல வேண்டும்?" என்றார்.

"பகவன்! எந்த அமானுஷ்ய சக்தியைப் பெற்றிருந்தாலும் சுய விஷயமாக அதைப் பிரயோகித்துக் கொள்ள முடிவதில்லை. என் விஷயத்தை நானே அறிவதற்கில்லை. தாங்கள் தான் கூறியருள வேண்டும்" என்றார் கௌரவ ச்ரேஷ்டர்.

"சொல்வது, எனக்குச் சிரமமான காரியம் தான். ஆனால் உனக்குத் தெரிவித்தேயாக வேண்டிய அவசியம் வந்ததால் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுச் சிறிது போது மௌனமாக இருந்தார் வியாஸாசாரியார்.

பிறகு, "தேவ விரதா ! 'என்ன கொடும் பாவம் செய்தேன்' என்று நீ கேட்டாய். பாவம் செய்வது என்றால் ஒருவர் தாமே நிச்செயலே மன – மொழி – மெய்களால் செய்ய வேண்டும் என்று பொருள் இல்லை. இன்னொருவர் கொடும் பாவம் செய்யும் போது தடுக்காமல் வாளாவிருப்பதும்கூடக் கொடும் பாவம்தான்" என்றார்.

சயனித்திருந்த பீஷ்மரின் கண்களிலிருந்து மளமள வென்று நீர் வழிந்து சாதுமடல்களை நனைத்து நிலத்தில் சொட்டிற்று.

"புரிந்து கொண்டேன், மஹரிஷே ! நம் இல்லத்துக்கு வந்த குலக் கொழுந்தான பாஞ்சாலியை அரச சபையில் துச்சாதனன் துகில் உரிய முன்வந்தபோது, வேட்டையாடப்பட்ட மான் போல மலங்க மலங்க அவள் என்னையும் துரோணரையும் திருதராஷ்டிரனையும் பார்த்தாள். ஆஹா! அந்தப் பார்வையை இன்று நினைத்தாலும் இந்த அம்புகளைவிடக் கூர்மையாக என் இதயத்தைத் துளைக்கிறது. அபலைக் குழந்தையை நான் அப்போது காப்பாற்ற வில்லை. வீட்டு விளக்காக வந்த தேவியை வீட்டு விலக்கான சமயத்தில் தூர்த்தன் மானபங்கப்படுத்த முயன்ற போது மௌனமாக உட்கார்ந்திருந்தேன். மகா பாபம்தான் அது. துரௌபதியின் மானத்தை வாசுதேவன் காத்தான். ஆனால் நான் அந்த விநாடியில் இழந்த மானத்தை இனிப் பெறுவது எப்படி ?"

பீஷ்மரின் அம்பு தைத்த உடல் அந்த நிலையிலேயே சிறிது குலுங்கியது.

"முனிவரே ! நான் எப்படிப் பிராயச்சித்தம் செய்து கொண்டு, என் பாவ கருமத்தைத் தீர்த்துக் கொண்டு, பரலோகம் செல்வேன் ?" என்று கேட்டார் பீஷ்மர்.

"வருந்தாதே, குழந்தாய்! உன் உள்ளத்தில் உதயமாகிவிட்ட பிராயச்சித்த உணர்வே உன் உள்ளத்தில் படிந்த பாவக் கறையை அகற்றி விட்டது. ஆனாலும் உடலால் அநுபவிக்க வேண்டியது – அம்புச் சயனத்துக்குப் பின்னரும் அநுபவிக்க வேண்டியது – மீதமிருக்கிறது. துரௌபதி தவித்து நின்றபோது குனியாதிருந்த தலையும், 'கிருஷ்ணா, துவாரகா நாதா, அநாதையை ரட்சிக்க மாட்டாயா ?' என்று அவள் அலறியதைக் கல்லாகக் கேட்டுக் கொண்டிருந்த இரு செவிகளும், அவளது அவலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த இரு கண்களும், கௌரவர்களைத் தட்டிக் கேட்காத வாயும், தோள் வலி பெற்றும் தூர்த்தர்களைப் பொருது தள்ளாத தோள்களும், குழந்தையைக்

காத்தெடுக்காத இரு கரங்களும், ஆசனத்தை விட்டே அசையாதிருந்த கால்களும் இன்னும் பாபத்துக்குக் கூலி தர வேண்டியிருக்கிறது!'' என்றார் வியாசர்.

வால்மீகியும் வியாசரும் பட்சபாதமில்லாமல் சத்தியத்தையே பாடிய மகாகவிகள் அல்லவா? பீஷ்மரின் தவற்றை ஒளிக்காமல் எடுத்துக் கூறினார் வியாசர்.

''ஐயனே, அவ்வாறெனில் தீப்பந்தம் தருவித்துத் தாருங்கள், என் அங்கங்களைப் பொசுக்கிக் கொண்டு உயிர் விடுகிறேன்'' என்றார் பீஷ்மர். தொடர்ந்து ஏதோ எண்ணியவராக, ''மகாமுனே! இந்தப் பாபத்துக்கு வெறும் நெருப்புப் போதாது. தங்களது தபோபலத்தினால் சூரியனின் சக்தியையே சாறு பிழிந்து தாருங்கள். அதனால் சூடு போட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

வியாசர் இளநகை பூத்தார்.

'' இதோ, கொண்டு வருகிறேன், ஸௌம்யா!'' என்று எழுந்திருந்தார்.

சூரியனின் சாற்றை எதிர்பார்த்திருந்த பீஷ்மரிடம் எருக்கிலையைக் கொண்டு வந்து காட்டினார் வியாச பகவான்.

''இதற்குப் பெயர் என்ன?'' என்று பீஷ்மரைக் கேட்டார்.

''அர்க்கபத்திரம்'' என்றார் பீஷ்மர்.


''அர்க்கன் என்றால் சூரியன்தானே! உலகத்தவர் குப்பைச் செடி என்று நினைக்கிற எருக்கில்தான் சூரியனின் சாரமே உள்ளது. அதனால்தான் சந்திரனைச் சூடும் பரமேசவரன், சூரியனையும் தரிப்பது போல் எருக்கிலையைத் தரிக்கிறார். பீஷ்மா! நீ நைஷ்டிக பிரம்மச்சாரி! பிரம்மசரியத்தின் உருவான கணேசனுக்கும் உகந்தது இந்த அர்க்க பத்திரம். இதனாலேயே உன் பாபத்தைத் துடைத்து விடுகிறேன்'' என்று பரிவுடன் கூறிய வியாசர், பீஷ்மருடைய அங்கங்களை எருக்கிலையால் அலங்கரித்தார்.

பீஷ்மர் தியானத்தில் மூழ்கினார். ரத ஸப்தமி திதியன்று. மூன்று தினங்களுக்குப் பின்பு, ஏகாதசி புண்ணிய காலத்தில் பீஷ்மரின் ஆன்மா உடலிலிருந்து விடுதலை பெற்றது. அஷ்டவசுக்களில் ஒருவனான பிரபாஸ வசுவாகப் பிரகாசித்துக் கொண்டு அவர் வானுலகை அடைந்தார்.

ஃ ஃ ஃ

பிதாமகரை இழந்து, துயரத்தில் ஆழ்ந்திருந்த யுதிஷ்டிரர் வியாச பகவானிடம் கூறினார்: ''பிதாமகர் பிரம்மசாரியாகவே வாழ்ந்து மறைந்து விட்டார். அவருக்கு வழிவழியாக சிராத்தம் நடைபெறாதே!''

''தருமபுத்திரா, இதற்கா விசனிக்கிறாய்!'' என்றார் வியாசர். ''ஒழுக்கம் தவறாத பிரம்மசாரியும் துறவியும் பிறரர் உலகத்தாரினும் மேம்பட்ட நிலையை அடைந்து விடுகிறார்களே! அவர்களுக்காக யாரும் எந்தக் கடனும் செலுத்த அவசியமே இல்லையே! இருந்தாலும் உன் திருப்திக்காக இனி இந்த நாடு முழுவதும் பீஷ்மருக்கு நீர்க்கடன் அளிக்கும். அது மட்டுமல்ல, சூரியனின் ஏழு குதிரை பூட்டிய தேர் சுழலும் ரத சப்தமியன்று, மக்கள் அனைவரும் எருக்கிலையைத் தங்கள் அங்கங்களில் வைத்துக் கொண்டு ஸ்நானம் செய்வார்கள், பீஷ்மருக்கு நன்றி தெரிவிக்குமுகமாக. தங்களது உடலால் செய்த பாபங்களையும் கழுவிக் கொள்வார்கள்!''





சரித்திர காலத்துக்குச் செல்ல வேண்டாம்! சென்னையிலிருந்து பதினைந்தாவது மைலில் உள்ளது இந்தச் சோழ மண்டலம்!

சோழமண்டலத்து நவீன ஓவியங்கள்

“கலைத் துறைக்கும் சோம்பேறித்தனத்துக்கும் ஏதாவது உறவு உண்டா? கலைஞர்கள் எல்லாம் சோம்பல் உபாசகர்களா? இல்லை, சோம்பல் அபிமானிகளெல்லாம் கலைஞர்களாகிவிட முடியுமா?'' என்ற விதண்டாவாதமான கேள்விகளுக்கெல்லாம் விடை தேடிக் கிடைக்கவில்லையானால் தயவு செய்து திருவான்மியூரிலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள ஈஞ்சம்பாக்கம் கிராமம்வரை போய் வாருங்கள்! அங்கே ஒதுக்குப்புறமான கடற்கரைப் பிரதேசத்தில் ஆசிரமம் மாதிரித் தங்குமிடங்கள் அமைத்து வாழும் கலைஞர்கள் சிலரிடமிருந்து உங்கள் கேள்விகளுக்கு அழுத்தம் திருத்தமாகப் பதில் கிடைக்கும்.





''‘கலையோடு இணைந்த அவசரமின்மை’ என்ற நிலைக்குச் சோம்பேறித்தனம் என்ற பெயர் அல்ல! அதற்குப் பெயர் ‘கற்பனைச் சுதந்திரம்’, ‘கலை மிதப்பு’ என்று சொல்ல வேண்டும். சுதந்திர மனப்பான்மை வேறு! அலட்சியப் போக்கு வேறு'' என்ற விடைகள் பளிச்சென்று கிடைக்கும்.

நிதானமாக, அவசரப்படாமல், கற்பனை வளத்தை உள்ளத்திலே தேக்கி வைத்து, அதைத் இடரென்று மை மூலமாகப் பேப்பரிலோ, மெழுகின் உதவியால் துணியிலோ வாரித் தெளித்து வண்ண உருவங்கள் கொடுக்கும் கலைஞர்கள், சந்தடியிலிருந்து ஒதுங்கி வாழும் இடம்தான் ஈஞ்சம்பாக்கம்








இராமத்தை ஒட்டியிருக்கும் சோழ மண்டலம். இதற்குக் கலைஞர்களின் கிராமம் என்ற பெயரே வந்துவிட்டது. கிராமவாசிகளிடம் 'பொம்மைக் கம்பெனி' எங்கே என்று கேட்டால் சட்டென்று காண்பிப்பார்கள். 'சோழ மண்டல்' என்று கேட்டால் மண்டையைக் குடைந்து கொண்டு சிந்தித்து, 'அப்படி ஒன்றும் இங்கே இல்லீங்களே!' என்பார்கள்!

சென்னை அரசினர் கலைத்தொழில் கல்லூரியில் பயிற்சி பெற்ற சில கலைஞர்கள் ஒன்றுகூடி யோசித்தார்கள். எங்காவது உடனடியாகப் பொதுத் துறையிலோ தனியார்த் துறையிலோ புகுந்து, தங்கள் கலையைக் கடிகார நேரத்துக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்திக் காசாக்க விரும்பாதவர்கள் அவர்கள்! சிந்தனைக்கு வேலை கொடுத்து அவசரமில்லாமல் புதுப் புதுக் கற்பனைகளை ஓவியங்களாக மாற்றத் துடிக்கும் சிருஷ்டிகர்த்தர்கள். அதாவது சம்பிரதாயத்துக்கு மாறுபட்ட குழுவினர் அவர்கள். அவர்களில் நாற்பத்திரண்டு பேர்கள், தாங்கள் ஈட்டி, கண்காட்சி நடத்தி விற்ற ஓவியக் கலைப் பொருள்களின் வருவாயை முதலீடாக வைத்து சஞ்சம்பாக்கப் பகுதியில் சுமார் முப்பத்தி ஐயாயிரம் ரூபாய்க்கு எட்டு ஏக்கரா நிலத்தை வாங்கிப் போட்டார்கள்! பழைய சோழ மண்டலக் கடற்கரையின் உச்சரிப்பு ஆங்கிலேயர்களின் வாயில் நுழையாததாலோ என்னவோ அது 'கோரமாண்டல் கோஸ்ட்' என்று மருவிவிட்டிருந்தது. அந்தப் பெயரிலிருந்த 'கோர'த்தை அகற்றி இந்த இளைஞர்கள் மீண்டும் சோழ மண்டலத்துக்கு மதிப்புக் கொடுக்கும் வகையில், தங்களுடைய வருங்காலக் கலைஞர்கள் காலனிக்கு இப்போதே 'சோழ மண்டலம்' என்ற பெயரைச் சூட்டினார்கள். கடற்காற்று ஜிலுஜிலு வென்று இங்கே வீசிக் கொண்டிருக்கிறது. நாளடைவில் கலைக் காற்றும் இங்கிருந்து நிறைய வீசலாம்!

இதுவரை இரண்டு கலைஞர்கள் தங்கள் குடும்பங்களுடன் தனித் தனியே குடில்கள் அமைத்துக் கொண்டு இங்கே வசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எட்டு பிரம்மச்சாரிகள் தங்களுக்காக ஒரு பெரிய குடிலை நிர்மாணித்து அதில் தங்கள் கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். கடற்கரை, சவுக்குத் தோப்பு, கீற்றுக் கொட்டகைகள்



"நீ அதிர்ஷ்டக்காரியடி! உங்கப்பாவை நீ பேஸ் பவுடர் வேணும்னு கேட்டியாம். அவர் உனக்காக ஒரு மாவு அரைக்கிற மெஷினே ஆரம்பிச்சுட்டாராமே?"

எல்லாம் ஒன்று சேர்ந்து ரிஷிகளின் பர்ண சாலைகளின் சூழ்நிலையை உண்டாக்குகிறது. இந்தப் பத்துப் பேருமே நவீன பாணி ஓவியக்கலை உபாசகர்கள்! வேறு பலரும் சீக்கிரமே இங்கு வந்து சேரலாம்.

"கலைஞர்களே! நீங்கள் ஓவியம் தீட்டுகிறீர்கள்! ரொம்ப சரி! ஆனால் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறீர்கள்?" என்ற சுத்தலான கேள்விக்கு இங்கு இடமில்லை. ஏனென்றால், அவர்கள் ஓவியமே, அவர்களுக்கு உணவு தேடிக் கொடுக்கிறது.

துணிகளிலே மெழுகின் உதவியாலும், வண்ணக் கலவைகளின் துணையாலும் ஓவியங்களைத் தீட்டி இவர்களுடைய சங்கத்தின் மூலமாக விற்றுப் பணமாக்குகிறார்கள். இந்தக் கலைக்கு 'பாட்டிக்' (Batik) என்று பெயராம்! சாதாரணத் துணியாக இருந்தாலும் அவைகளின் மீது இந்தக் கலைஞர்களின் நவீன பாணி ஓவியங்கள் படியும் போது நாகரிகப் பெண்மணிகளுக்கு இந்த 'டிசைன்கள்' மீது அலாதி மோகம் ஏற்பட்டு விடுகிறது. வாங்கி விடுகிறார்கள். ஜாக்கெட்டுகள் ஓவிய ஜாக்கெட்டுகளாக மாறி விடுகின்றன. ஒரு மீட்டர் துணி இருபத்திரண்டு ரூபாய் வரை போகிறது. புடவையாக விற்கப்படும் போது இந்த விகிதத்துக்குச் சற்றுக் குறைத்தே கொடுக்கிறார்கள். ஜன்னல்கள், வாயில்கள் இவற்றுக்கான திரைச்சீலைகளைத் தயாரிக்கும் போது இவர்கள் துணிகளில் கொடுக்கும் வர்ணக் கலவை பிரமிப்பை ஊட்டுவதாக இருக்கிறது. அந்தத் திரைச்சீலைகளின் மேல் ஒளி விழும்போது மறு பக்கத்திலிருந்து பார்த்தால், பழங்காலத்து மாதா கோயில்களின் வர்ண ஜாலக் கண்ணாடி ஜன்னல்கள் போல் தோற்றமளிக்கின்றன!

"சார்! எங்கள் கலைத் திறமையைப் பலர் ரசிக்கிறார்கள்! ஆனால் அவர்களெல்லாம் எங்கள் கலைப் பொருள்களை விலை கொடுத்து வாங்க முடிவதில்லை! சிலர் வாங்குகிறார்கள். அவர்களிடம் ரசனையைவிடப் பணப் பெருமையே அதிகம் இருக்கிறது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. எங்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு உணர்ச்சிகளுமே தேவைதான்! நாங்களும் வாழ்க்கை நடத்த வேண்டுமல்லவா?" என்கிறார் விசுவநாதன் என்னும் இளைஞர். இவரும் இந்தக் கலை முகாமில் இருப்பவர்தான்.

பெட்டி படுக்கைகள் ஒரு பக்கமாக அன்று காலையில்தான் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் வந்து இறங்கிய நாட்டிய கோஷ்டியினரின் உடைமைகள் மாதிரிக் கிடக்கின்றன. ஒரு பக்கம் லதா மங்கேஷ்கரின் இன்னிசை சன்னமாக டிரான்ஸிஸ்டரிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் ஸ்டவ்வில், மெழுகு உருகிக் கொண்டிருக்கும் வாசனை. ஒரு குறுந்தாடி இளைஞர் குப்புறப் படுத்துக் கொண்டு தம் முன் விரிக்கப்பட்டுக் கிடக்கும் ஓவியத்துடன் மானசீகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். நடுவில் ஒரு துணியை இரு பக்கமாகப் பிடித்துக் கொண்டு இரண்டு மூன்று இளைஞர்கள் அதன் மீது ஏதோ வர்ணம் பூசிக் கொண்டிருக்கிறார்கள். மற்றொரு தாடிக்காரர் அந்தக் கொட்டகையைச் சிந்தனையில் ஆழ்ந்தவாறு சுற்றி வருகிறார். துணையாக ஒரு கறுப்பு நாயும் சுற்றுகிறது.


இங்கு குடியேறி யிருக்கும் கலைஞர்களில் பலர் தங்கள் படைப்புக்களுக்கான பொருட்காட்சியை நாட்டின் பல பாகங்களில் நடத்தி வெற்றி கண்டவர்கள். இந்தச் 'சோழ மண்டல'க் கருத்துக்கு வித்தாக இருந்தவர் கலைத் தொழில் கல்லூரி முதல்வர் திரு பணிக்கர் என்று இவர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்கள்.

இந்தக் கலைக் காலனியைச் சீக்கிரமே அபிவிருத்தி செய்து கலைஞர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடிய தொழிற்கூடமாக மாற்றத் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அப்போது அந்த இடத்துக்குச் சொந்தமான நாற்பத்தி இரண்டு கலைஞர்களும் இங்கு குடியேறி விடுவார்கள். பீங்கான் பாத்திரங்களில் சித்திரங்கள் தீட்டும் கலையும், துணி, தோல், இவற்றின்மீது வண்ண ஓவியங்கள் வரையும் கலையும் பெரிய அளவில் விரிவடையும். இது வரை இந்தக் கலைஞர்கள் சர்க்காரிடமிருந்து எந்தவித மானியமும் பெறவில்லை. பிற்காலத்தில் பெரிய அளவு கலைத் தொழிற்பட்டறைக்கு ஏதாவது மான்யம் கிடைக்கும் என்று நம்பலாம்.

வெளி நாட்டவர்களில் ஓவியக் கலையில் ஈடுபட்டவர்கள் சென்னைக்கு வரும் போது இந்தக் காலனியைப் பார்க்க வருகிறார்கள். 'கலை வளர இது ஒரு கட்டுப்பாடற்ற அற்புதமான சூழ்நிலை' என்று பாராட்டுகிறார்கள்.

"என்ன மிஸ்டர் ராமானுஜம்! நாங்கள் கிளம்புகிறோம்" என்று அங்குள்ள ஓர் இளைஞரிடம் விடை கேட்கிறோம். அமைதியாக, அரைக் கண் மூடி போன நிலையில் நிற்கும் அவர் கால் புன்சிரிப்புக் காட்டுகிறார்! அதில்கூடக் கலைமணம் வீசுகிறது!

—கோமதி ஸ்வாமிநாதன்


ஜிம்மி
வால்ட் டிஸ்னி
நம்மதோழன் டிக்க
ஜைப் போய்ப் பார்த்து
வரலாமா?
வெளியே எங்கும் போ
யிருக்க மாட்டான்
என்று நினைக்கிறேன்.
வாப்பா....!
வாப்பா.. வா..
வா....!
டேய், டிக்கா..!
ஒட்டப் பந்தயத்
துக்கு வரியா?
ஆல்
ரைட்
நான் ரெடி!
ஆ..ஹ்..ஹா!
எப்படி..?
விர்ர்ர்
9-11
ஐயோ..ஓ!
தபா..ர்!
பலே..!
பலே..!
ஹா..ஹ்..ஹா...!
டியாதான் ஜெயிச்சாரு!

புதியது!

நீலநிற

மாஜிக்

அபரிமித வெண்மையாக்கும் சக்தியுள்ளது

அத்தகைய வெண்மை... அபரிமித வெண்மையை
மிளிரச் செய்வது ஒரேயொரு மாஜிக் சலவை




ஆம்- சாதாரண சலவைப் பவுடர்களினின்றும் மாறுபட்டது மாஜிக். அபரிமித வெண்மையளிக்கும் சக்தி வாய்ந்த மாஜிக். சலவையிலே அப்பழுக்கற்ற தூய்மை தருகிறது. சக்தி செறிந்த ஒவ்வொரு மாஜிக் துகளும் கொடிப் பொழுதிலே நீரில் கரைந்து, செயல்வேகமிக்க செழுமையான நுரை எழுப்புகிறது. அதனால் துணிகளுக்குப் பளிச்சிடும் வெண்மை, கண்ணைப் பறிக்கும் பொலிவு. இதன் காரணமாகவே, மாஜிக் என்று அழைக்கப்படுகிறது. வீட்டுச் சலவையை சுலபமாக்கும், சிக்கனத்திற் சிறந்த இந்த அற்புத சலவைப் பவுடர்- பருத்தி, பட்டு, கம்பளித் துணி, டெரீன், நைலான், வண்ண ஆடை...எதற்குமே தீங்கிழைக்காது மாஜிக் என்பதை மறவாதீர்கள்.

டாடா தயாரிப்பு

மாஜிக் வெண்மை, மாஜிக் மெருகு, மாஜிக் புதுமை!



பறக்கும் ஜமுக்காளங்கள்



அறுநூற்று முப்பது ரூபாய் விலையில் ஜெய்பூர் ஜமுக்காளம்

ஆமாம், பறக்கும் ஜமுக்காளங்கள்தான்! ஆண்டுதோறும் ஆறு கோடி ரூபாய்கள் மதிப்புள்ள ஜமுக்காளங்கள் 'பறந்து' விடுகின்றன அயல் நாடுகளுக்கு; அன்னியச்செலாவணியும் சம்பாதித்துத் தருகின்றன. அவசர நிமித்தம் பல ஜமுக்காளங்கள் உண்மையிலேயே விமானமேறிப் பறப்பதுமுண்டு! ஆறு கோடி ரூபாய்க்கு ஏற்றுமதியாகியும் கூட இந்த ஜமுக்காளங்களைத் தயாரிக்கும் நெசவாளிக்கு இந்த வர்த்தகம் எந்த அளவுக்குத் துணைசெய்திருக்கிறது? காலை விடிந்த விநாடியிலிருந்து கடைசி ஒளிக்கீற்றும் மறையும்வரை உழைப்பவன் இன்றும் பதினைந்து முதல் முப்பது ரூபாய்வரை தான் ஒரு மாதத்துக்குச் சம்பாதிக்கிறான். இலாபம் காண்பவர்கள் இடையில் இருப்போர்தான்.

நம் பாரதத்தின் பல பகுதிகளிலும் தயாராகும் பகட்டான விரிப்புகளை ஒருசேர ஒரே இடத்தில் காண்பதற்கான வாய்ப்பை அகில இந்திய கைத்தறி போர்டார் சமீபத்தில் அளித்தார்கள். இம்மாதம் ஒன்றாந் தேதி முதல் 7ம் தேதி வரை சென்னை மெமோரியல் ஹாலில் அகில இந்திய ஜமுக்காளம் மற்றும் தரை விரிப்புக்கள் கண்காட்சி நடைபெற்றது. வேலைப்பாடு மிக்க கம்பளி விரிப்புக்களின் தோற்றுவாய் பதினாறும் நூற்றாண்டுதான் என்று சரித்திராசிரியர்கள் கூறுகிறார்கள். மொகலாய மன்னர் அக்பர் பாரசீகத்திலிருந்து விசேஷ நெசவாளர்களைத் தருவித்து அருமையான கம்பளி விரிப்புக்களைத் தயாரிக்கச்செய்தாராம்.

அக்பரை அடுத்து ஜஹாங்கீரும் ஷாஜஹானும் ஆக்ரா, தில்லி, லாகூர், காஷ்மீர் ஆகிய பகுதிகளில் விரிப்புக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளையே ஏற்படுத்தினார்கள். கம்பளியினால் ஆன கண்கவர் வேலைப்பாடுகளுடன் கூடிய விரிப்புக்களுக்குக் காஷ்மீர் இன்றும் முன்னணியில் நிற்கிறது. காஷ்மீர் கம்பளங்கள் தரத்தில் உயர்ந்ததைப் போலவே விலையிலும் கூடுதல். உத்தரப் பிரதேசத்தில் தயாராகும் விரிப்புக்கள் முழுதும் ஏற்றுமதியாகின்றன. பாரதத்திலுள்ள 44,000 ஜமுக்காள நெசவாளிகளில் 33,000 பேர் இங்கு வாழ்கின்றனர். காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஜமுக்காளங்கள் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் இருக்கின்றன. ஒரு விரிப்பின் உயர்ந்தபட்ச விலை ரூ. 1350. மற்றொரு விரிப்பின் விலை ரூ. 5.40. வியக்கிறீர்களா? ஆமாம். சாதாரண பவானி ஜமுக்காளத்தைப் போன்ற ஒன்றின் விலைதான் 5.40. அயல் நாடுகளில் அதிகம் விலை போகும் விரிப்புக்கள் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஏலூரு, வாரங்கல்லில் தயாராகும் ரகங்கள்தாளும். காரணம் அவை குளிர் நாடுகளில் அதிக கதகதப்பைத் தருகின்றனவாம். காஷ்மீர் விரிப்புக்களில் கைத்திறன் இருந்தாலும் அதன் கம்பளி பதப்படுத்தப்பட்டதாக இருப்பதால் கதகதப்பை அளிப்பதில்லையாம்!

உலகம் முழுவதும் உறுமும் சிங்கம்!



ஆங்கிலப் படங்களை அடிக்கடி பார்ப்பவர்களுக்கு ''உலகம் முழுவதும் உறுமும் சிங்கம்'' என்றாலே எம். ஜி. எம். என்ற மூன்று எழுத்துக்கள் உடனே நினைவுக்கு வரும்; எந்தக் கம்பெனி எடுத்ததாயிருந்தாலும் சரி, ஆங்கிலத் திரைப் படங்களைப் பார்ப்பதை விட அவற்றின் 'டிரெய்லர்' களைப் பார்ப்பதிலே ஒரு தனிச் சுவை உண்டு. விளம்பரத்துக்காகக் காண்பிக்கப்படும் இந்த 'சாம்பிள்' படங்களில் அநேகமாகப் படத்தின் எல்லாச் சிறப்பு அம்சங்களும் உணர்ச்சிமிக்க கட்டங்களும் இடம் பெற்றிருக்கும். கதை ஒன்றும் புரியாது போனாலும் அடுத்தடுத்துப் பிரமிப்பூட்டும் காட்சி



இன்று உலக மக்களைப் பரபரப்புக்குள்ளாக்கிய ரஷ்ய நாவல் 'டாக்டர் ஷிவாகோ'வை ஒப்பற்ற திரைப்படமாக்கியுள்ளனர்.

களையும் உணர்ச்சி ததும்பும் கட்டங்களையும் காண்கையில் உடலில் சூடுபிடிக்கும்! அதோடு இன்னும் கொஞ்சம் பார்க்க மாட்டோமா என்று நினைக்கும் வகையில் 'பொக்'கென்று முடிந்துபோகிறதே 'டிரெய்லர்' படம், அதில் ஓர் அலாதி ருசி! இப்போதெல்லாம் முழுப் படத்தை விட டிரெய்லர் படங்கள் இன்னும் நன்றாக இருக்கின்றன என்று சொல்லுமளவுக்கு இந்த விளம்பரக் கலை வளர்ந்திருக்கிறது. அந்த அளவுக்கு அதிலே காமிரா நுணுக்கங்களையும் ஓவியத் திறனையும் இணைக்கிறார்கள்.

ஒரு டிரெயிலருக்கே இந்த நிலை என்றால் அடுத்தடுத்துப் பல உன்னதத் திரைப் படங்களின் டிரெய்லர்களை ஒருமிக்கப் பார்த்தோமானால்...?

அண்மையில் எம். ஜி. எம். கம்பெனியார் 'உலகம் முழுவதும் உறுமும் சிங்கம்' என்ற

அன்று திரையுலக ரசிகர்களைத் திகைப்பில் ஆழ்த்திய 'காற்றோடு போயிற்று' மறுபடியும் 70 எம்.எம். படமாக வருகிறது.



தலைப்பில் தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பல படங்களின் டிரெய்லர்களையும் ஒருங்கே இணைத்து ஓர் அரை மணி நேரத் திரைப்படமாகக் காண்பித்தார்கள் சென்னை ஆனந்த் தியேட்டரிலே. அவர்களது படங்கள் உலகம் முழுவதும் காண்பிக்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள பல்வேறு தேசங்களில் அவர்களது படங்கள் எடுக்கவும் படுகின்றன என்பது இதைப் பார்த்தபோது புரிந்தது. அத்துடன் அந்தப் பல்வேறு படங்களும் பல்வேறு தன்மையானவை. சோகத்துக்கு ஒரு படம், சரித்திர சம்பவங்களைப் பிணைக்கும் ஒரு திரை ஓவியம், சங்கீதத்துக்கு ஒரு சினிமா, துப்பறியும் வீரருக்கு ஒரு படம், ஹாஸ்யத்துக்கு என்று ஒன்று: — இப்படிப் பலப்பல படங்கள்; ஆனால் கலப்படங்கள் மட்டும் கிடையாது! அனைத்திலும் புகழ்பெற்ற நட்சத்திரங்கள்; அழகு மிக்க நடிகைகள்.

இவையெல்லாவற்றையும்விட இந்த 70 எம். எம். விளம்பரப் படத்தில் அகன்ற திரையை மூன்றாகப் பகுத்துக் கொண்டு மூன்று பகுதிகளிலும் மூன்று வெவ்வேறு காட்சிகளைக் காண்பித்த காமிரா உத்தி மிகச் சிறப்பானதாக மட்டுமல்ல; நெஞ்சை அள்ளும் திறன் படைத்ததாகவும் விளங்கியது. மாதிரிக்குக் காண்பிக்கப்பட்ட படங்களுள் முக்கியமானவை: பண வசூல் விஷயத்தில் உலக ரிகார்ட் ஏற்படுத்திய 'கான் வித் தி விண்ட்' என்ற படம் அகன்ற 70 எம். எம். திரைக்கு வரப் போகிறது. இதை விடப் பெரியதொரு மகத்தான தயாரிப்பான 'டாக்டர் ஷிவாகோ'வையும் திரையிடவிருக்கிறார்கள். அதில் ஐந்து நிமிஷங்களுக்கு 'ஸாம்பிள்' பார்த்த காட்சிகளே ஐந்து ஆண்டுகளுக்கு நினைவிருக்கக் கூடியவை! அவ்வளவு உன்னதமான நடிப்பு, படப்பிடிப்பு. "2001" என்ற வருங்காலத்தை நிலைக்களனாகக் கொண்ட படமும் பிரமிப்பூட்டுவதாக அமையும்.

தலையாய அலங்காரம்

ஆணாகட்டும், பெண்ணாகட்டும், வெளியே புறப்படுவதானால் முதலில் கண்ணாடி முன் நின்று தலையைத்தான் சரி செய்து கொள்கிறார்கள். படிய வாரிவிடப்பட்ட தலையை அழகின் அடையாளம் என்று கொண்டால், கலைந்த தலை சோகத்தின் அடையாளம் என்று கொள்ளலாம். தலையலங்காரம்தான் அலங்காரத்தில் தலையானது.

இயற்கையிலேயே அழகான கூந்தல் இல்லாதவர்கள் செயற்கை முறையை நாடித் தங்கள் கூந்தலை அழகுறச் செய்து கொள்ளும் பழக்கம் நெடுங்காலமாக நம் நாட்டில் இருந்து வருவதுதான். நீண்ட கூந்தல் இல்லாதவர்கள் சவுரி வைத்துப் பின்னிக் கொள்வதைப் பார்க்கிறோம்.

காலம் முன்னேற முன்னேறச் சிகை அலங்காரமும் முன்னேறிக் கொண்டு வந்திருக்கிறது. சினிமாப் படங்கள் தயாரிக்க ஆரம்பித்த பிறகு, பாட்டியைப் பருவ மங்கையாகக் காட்டுவதற்கும், வயோதிகளை

வாலிபருக்குக் காட்டுவதற்கும் சிகை அலங்காரம் இன்றியமையாததாயிருந்து வருகிறது.

மேனாடுகளில் வாரம் ஒரு முறை அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை பெண்கள் சிகை அலங்கார நிபுணர்களிடம் தங்கள் தலையைக் கொடுத்து அழகுபடுத்திக் கொள்வார்கள். இந்த அவசர யுகத்தில் இதற்கு நேரம் இல்லாது போகிறது சில தருணங்களில். அப்போதெல்லாம் சட்டென்று ஒரு டோபாவை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு கிளம்பி விடுவார்கள்! அங்கெல்லாம் வெவ்வேறு நிறங்களில் விதம் விதமான அலங்காரமான டோபாக்களைப் பெண்மணிகள் அணிவது சர்வ சாதாரணமாகி விட்டது. டோபாக்களைப் பாதுகாக்கும் விதம் பற்றிப் பல கட்டுரைகள் எழுதப்படுகின்றன. மேனாடுகளில் பெருகி வரும் டோபா வியாபாரத்தில் நாமும் பங்கு பெறலாம் என்று தீர்மானித்துச் சென்னை சர்க்கார் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ஒரு பெரிய தொழிற்சாலையையே தொடங்கியிருக்கிறார்கள். 2–2–67 அன்று இந்த டோபா தொழிற்சாலை (Wigs India) சென்னை ராஜ்ய கவர்னர் திரு உஜ்ஜல்சிங் தலைமையில், இந்திய சர்க்கார் வர்த்தகமந்திரி திரு மனுபாய் ஷா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இன்னும் ஏழு ஆண்டு காலத்துக்குள் பதினெழு கோடி ரூபாய் மதிப்புள்ள நவநாகரிக முடிகளை அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும் என்று நம்புகிறார்கள்.


இந்தத் தொழிற்சாலையில் ஏராளமான பெண்கள் வேலைக்கு நியமிக்கப்பட்டிருப்பது விசேஷம். வனப்பை வளர்க்கும் வாளிப்பான இந்தக் கலைத் துறையில் விசேஷப் பயிற்சியளிக்க அயல் நாட்டுக் கலை வல்லுநர்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தனை காலமும், பிரார்த்தனைக்காகப் பழனியிலும், திருப்பதியிலும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட தலைமுடிகள் ஒன்றுக்கும் பயன்படாமல் வீணாகிக் கொண்டிருந்தன. இப்பொழுது பெருவாரியான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பெருமதிப்பு அவற்றுக்கு ஏற்பட்டுவிட்டது. இது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தானே!

அமைச்சர் ஆர். வெங்கடராமன் தொழிற்சாலையின் சிறப்பைப் பற்றிப் பேசுகையில், "ஏழுமலையானுக்கும், பழனி ஆண்டவனுக்கும் இந்தத் தொழிற்சாலையின் போஷகர்கள் என்ற முறையில் பக்திபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும்...." என்று கூறினார். ஆகவே, நாமும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன், 'அரசினர் துறை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்த ஒரு தொழிலேனும் நஷ்டப்படாமல் இருக்க வழி செய்து நாட்டைக் காப்பாற்றும்' என்றும் வேண்டிக் கொள்கிறோம்! அசலைவிட நைஸான நைலான் செயற்கை முடிகளின் உற்பத்தி மேனாடுகளில் துரிதமாகப் பெருகி வருவதால் இந்தப் பிரார்த்தனைக்கு அவசியம் மிகுதியாகவே இருப்பதாகத் தோன்றுகிறது.







விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைன்ட் என்றால் என்ன? புதியதொரு விசேஷ செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருள் மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கப்பட்டிருப்பதைத் தான் மைக்ரோஃபைன்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் இந்த வலிநிவாரணப் பொருளின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்னைவிட இருமடங்கிற்கும் அதிகமான வலிநிவாரணச் சக்தி, முன்னைவிட வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள துரிதமாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், அதிவேகமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.

உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலந்தோ, ஒரு டம்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.


கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடம்பு வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள் இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்



[illegible]



மைக்ரோஃபைன்ட் ஆக இருப்பதனால் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன. அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து, விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிவலிமையான வலிநிவாரணியாகும்.





புதிய


மைக்ரோஃபைன்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக
வலியை வெளியே
இழுத்துவிடுகிறது

நிகோலஸ் (N) தயாரிப்பு

கல்லுக்குள் ஈரம்



ர. சு. நல்லபெருமாள்



ஆறும் அத்தியாயம்

வார்தாவில் இரண்டு நாள்

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான் ரங்கமணி. அவன் மனத்தில் எண்ணங்களும் புரண்டு கொண்டிருந்தன. அடிக்கடி அத்தையின் விபூதி துலங்கும் முகம் நினைவில் வந்து கொண்டேயிருந்தது. அந்த நினைவில் மனம் நிறைவைப் பெற்றது. தாயிடம் சிணுங்கி முரண்டு பண்ணிக் குறும்பு செய்து குழந்தைப் பருவத்தில் தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பே அவனுக்கு இல்லாமல் போய் விட்டது. இழந்துவிட்ட அந்தப் பாசத்தின் பிணைப்பு அத்தையைக் கண்டதும் ஏற்பட்டு விட்டது. அவளுடைய உபசரிப்பும் அன்பு கனியப் பரிமாறிய பாங்கும் ரங்கமணியை ஒரு புது உணர்வில் ஆழ்த்திவிட்டன.

அவனைத் தாத்தா தான் வளர்த்தார். தாத்தா தாயாகிவிட முடியுமா? பெண்களுக்கே அமைந்துவிட்ட தாய்மையின் சூட்சமமான மென்மையை ஆண்களின் முரட்டுத்தனத்தில் எதிர்பார்க்க முடியுமா? மலரின் மென்மையை மரக் கட்டையில் தேடினால் எப்படி? ரங்கமணி கவலையின்றி வளர்ந்தான், வளர்க்கப்பட்டான். மைனர் நெல்லையப்ப பிள்ளை அவனுக்காகவே வாழ்ந்தார். ஆனால் என்னதான் தியாகம் செய்யத் தயாரா யிருந்தாலும், அவரால் அவனுக்குத் தாயாக இருக்க முடியவில்லை இதைப் பற்றி ரங்கமணி கவலைப்பட்டதுமில்லை.

வெள்ளிவிழா இரண்டாவது பரிசு நாவல்

ஆனால் அத்தையைக் கண்டதும் அவனுள்ளே மறைந்து கிடந்த பாசத் தவிப்பு தலை தூக்கியது.

அவன் வளர்ந்து ஆளாகும் சமயத்தில் அவனுக்குத் துணையாகத் தாயுமில்லை, தந்தையு

யில்லை. தாத்தாவின் செல்லத்தில் தான்தோன்றியாக வளர்ந்தான். எதையும் பொருட்படுத்தாத அலட்சிய சுபாவம், எப்படியோ அவனுடனேயே ஒட்டி வளர்ந்து விட்டது. சிறுவனாகப் பள்ளியில் படித்த வேளையில் அவனுடைய குறும்புத்தனத்தின் உக்கிரம் தாங்காமல் பல பள்ளிகளிலிருந்து அவனை விரட்டினார்கள். இப்படியே வளர்ந்தால் பிற்காலத்தில் பெரிய போக்கிரியாகி விடுவானோ என்ற பயத்தாலேயே நெல்லையப்ப பிள்ளை உருகினார். அவனுடைய முரட்டுத்தனத்துக்குள் மிக சூட்சுமமாக நேர்மையும், தீமை கண்டு பொங்கும் குணமும் அபரிமிதமான துணிச்சலும் மறைந்திருந்ததைக் கிழவர் உணர்ந்து கொண்டார்.



ஒரு சமயம் அவனுடைய வகுப்பில் ஹிந்தி ஆசிரியர் வயதுவந்த மாணவியைக் கைநீண்டிக் கன்னத்தில் அடித்து விட்டார். இதைக் கண்டு சீறி எழுந்தான் ரங்கமணி. வகுப்பிலேயே ஆசிரியரைக் குற்றம் சாட்டினான்.

“வயது வந்த பெண்ணைத் தீண்டியது குற்றம். அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்” என்றான். ஆசிரியர் சீறினார்.

“உன்னுடைய சகோதரியா, பரிந்து பேச வந்து விட்டாய்?” என்றார் அலட்சியமாக.

“என்னுடைய சகோதரியாக இருந்தால் அவளைத் தீண்டிய கை இதற்குள் முறிந்திருக்கும்” என்றான் ரங்கமணி. மற்ற மாணவர்கள் ஆரவாரம் செய்து ரங்கமணியை உற்சாகப்படுத்தினார்கள். கடைசியில் அந்தப் பள்ளியிலிருந்து அவன் நீக்கப்பட்டதுதான் அவன் கண்ட பலன். அதற்காக அவன் வருந்தவில்லை. “இந்தப் பள்ளிக்கூடத்தை நம்பியா நான் பிறந்தேன்? இது இல்லையென்றால், இன்னொன்று” என்று தலைமை ஆசிரியரிடமே கூறிவிட்டு வெளியேறினான். இதற்கெல்லாம் வருந்திக் கண்ணீர் வடித்தவர் கிழவர்தாம்.

“யார், யாரை அடித்தால் உனக்கென்னடா? உன் வேலையை மட்டும் நீ கவனித்தால் போதாதா?” என்றார் கிழவர்.

“தாத்தா, இப்படியே அவனவன் தன் துருத்தியை மட்டுமே ஊதிக் கொண்டிருந்தால், அந்த ஹிந்தி வாத்தியார் மாதிரி பலர் புறப்பட்டு விடுவார்கள். பிறகு தெருவில் பெண்கள் நடமாட முடியுமா?” என்றான் ரங்கமணி எரிச்சலுடன்.


ரங்கமணியின் வயதுக்கு மிஞ்சிய வாய்த்துடுக்கும், துணிச்சலும் கிழவருக்கு வேதனையைக் கொடுத்தன. பிறகு, எவ்வளவோ கஷ்டப்பட்டு வேறொரு பள்ளியில் அவனைச் சேர்த்தார்.

சிறு வயதில் தந்தையுடன் ரங்கமணி பல இடங்களுக்குச் சென்றிருந்தான். பல தலைவர்களைச் சந்தித்திருக்கிறான். அவனுடைய தந்தையின் மரணத்துக்குப் பிறகு அவனால் அஹிம்சை என்ற வார்த்தையைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. காந்தியடிகளின் சந்திப்பு அவனுள் எந்த மாறுதலையும் ஏற்படுத்தி விடவில்லை. ஏதோ அவரைச் சந்தித்த நினைவுக்காக மட்டும் அவர் கொடுத்த தந்தச் சிலுவையைப் பத்திரமாக வைத்திருந்தான். ஆரம்பத்திலேயே காந்தியின் அஹிம்சைத் தத்துவமும் சத்தியாக்கிரகமும், அவனுக்குக் கசந்தன. விறுவிறுப்பும் பரபரப்பும் இல்லாத சாத்விகப் போரில் ரங்கமணிக்கு நம்பிக்கையும் இல்லை; அவனுடைய துடிதுடிப்புக்கு அது ஏற்றதாயுமில்லை.



ரங்கமணியின் எண்ணம், செயல் அனைத்தும் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டன.

இளமைப் பருவத்தின் துடிப்பும் வெறியும் தேச பக்தியாகவே மாறி விட்டன. வெள்ளைக்காரனைப் பழி வாங்க வேண்டுமென்ற வெறி தணியவே யில்லை. எந்த அளவுக்கு வெள்ளையர்களின் இரத்தம் இந்த மண்ணில் பெருகுகிறதோ, அவ்வளவுக்குச் சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதுதான் அவனுடைய தத்துவம்.



இரண்டு மூன்று முறை போலீஸ் அதிகாரிகள் அவனை எச்சரிக்கும் அளவுக்கு அவனுடைய நடவடிக்கைகள் தீவிரமாயின. கல்லூரித் தலைவர் அவனைக் கூப்பிட்டுக் கண்டித்தார். ''ஒழுங்காகப் படித்து முன்னேறப் போகிறாயா, இல்லையென்றால் சீரழியப் போகிறாயா?'' என்று கோபத்துடன் கேட்டார், கல்லூரித் தலைவர்.

''அடிமையாக இருந்து முன்னேறுவதைவிடத் தாயின் விலங்கை முறிக்கும் பணியில் சீரழிவதே மேல் சார். என்ன பெரிய படிப்பு? நீங்கள் சொல்லித் தருவதெல்லாம் வெறும் குமாஸ்தா வேலைக்குத்தானே? உங்களால் ஒரு சிதம்பரம் பிள்ளையை உருவாக்க முடியுமா? சுபாஷ் சந்திர போஸை உருவாக்க முடியுமா? அவர்கள் தியாகம் செய்யக் கற்றது இந்தக் கல்லூரிக் கட்டிடத்துக்குள் அல்ல'' என்றான் ரங்கமணி.

''உன்னால் என்னப்பா தியாகம் செய்துவிட முடியும்? தியாகம் செய்ய உன்னிடம் என்ன இருக்கிறது?'' என்று ஏளனமாகக் கேட்டார் கல்லூரித் தலைவர்.

''என்னிடம் என்ன இருக்கிறது? என்னிடம் எல்லாவற்றுக்கும் மேலாக நான் இருக்கிறேனே. இது புரியவில்லையா?'' என்றான் ரங்கமணி ஆவேசத்துடன். கல்லூரித் தலைவர் பிரமிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவனுடைய தீவிரமும், துணிவும், தன்னம்பிக்கையும் அவர் நெஞ்சை நெகிழச் செய்துவிட்டன.

ரங்கமணியின் சுதந்திர இயக்க வெறி, சட்டக் கல்லூரியில் சேர்ந்த பிறகு தீவிர

மாகிவிட்டது. சென்னையில் நடந்த பல சதிகளில் அவனும் ஈடுபட்டிருந்தான். போலீஸின் கண்களிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பி வந்தான். திடீரென்று சட்டப் படிப்பை நிறுத்தி விட்டு ஊர் திரும்பியதும், அவனால் சும்மா இருக்க முடியவில்லை. சட்டைக்குள் மறைந்திருக்கும் மூட்டைப் பூச்சி கடித்துக் கொண்டிருப்பது போலத்தான் அவனுடைய லட்சியங்கள், அவனைத் தட்டி எழுப்பிக் கொண்டேயிருந்தன. திரும்பவும் சென்னைக்கு அவன் புறப்பட்ட போது, அவனுக்குத் துணையாக தீக்ஷிதரை அனுப்பி வைத்தார், நெல்லையப்ப பிள்ளை. தீக்ஷிதரோ எப்படியாவது ரங்கமணியின் போக்கை மாற்றி, அஹிம்ஸைப் பாதையில் திருப்பி விடத்தான் முயன்றார். ரங்கமணியும் தீக்ஷிதரும் ஒரே இடத்தில் தங்கியிருந்தார்கள்.

நல்ல வேடிக்கைதான்! நீரும் நெருப்பும் ஒரே இடத்தில்! ஒன்றை ஒன்று விழுங்கிவிட முயன்றது. ஆனால் அந்த முயற்சியில் நீரும் வற்றவில்லை, நெருப்பும் தணியவில்லை! அது அது, தன் போக்கில் பெருகிக்கொண்டிருந்தது. ரங்கமணிக்கும் தீக்ஷிதருக்கும் இருந்த தொடர்பில் நெருக்கம் அதிகரித்ததே தவிர, கீறல் விழவில்லை.

ஒரு சமயம் தீக்ஷிதர், வார்தாவுக்குச் சென்று மகாத்மா காந்தியடிகளைச் சந்தித்து விட்டுத் திரும்பினார்.

''என்ன தீக்ஷிதர்வாள், தீர்த்த யாத்திரை நடந்ததாக்கும்?'' என்று கேட்டான், ரங்கமணி சிரித்துக் கொண்டே.

''உன்னைப் பற்றி மகாத்மாவிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தேன். சென்னையில் ஆங்கிலேய போலீஸ் அதிகாரி மீது குண்டு வீசியதில் உனக்கும் பங்கு உண்டு என்பதை அறிந்தபோது மகாத்மா மனம் நொந்து போனார். முன்பு அவர் உனக்குக் கொடுத்த தந்தச் சிலையை மறக்கவே இல்லை! 'அதைப் பக்கத்தில் வைத்துக் கொண்டா இப்படியெல்லாம் நடக்கிறான்?' என்று வேதனையோடு கேட்டார். உன்னைக் கட்டாயம் நேரில் சந்திக்க வேண்டும் என்றார். நீ இஷ்டப்படாவிட்டாலும் மகாத்மாவின் விருப்பத்தை நிறைவேற்றித் தானாக வேண்டும்'' என்றார் தீக்ஷிதர்.

''வேண்டாம், வேண்டாம்'' என்றான் ரங்கமணி.

''நான் உன்னைக் கட்டாயம் அழைத்து வருவதாக மகாத்மாவிடமும் மகாதேவ தேசாயிடமும் வாக்குக் கொடுத்து விட்டேன். என் வாக்குறுதியை நிறைவேற்றவாவது வர மாட்டாயா?'' என்று தீக்ஷிதர் கெஞ்சினார்.

''என்னைத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தி விட்டீர்களே!''

''வார்தாவை மிதிப்பதால் உனக்கு ஒரு தீங்கும் வந்து விடாது. அந்தச் சூழ்நிலையும் ஆசிரமத்தின் வாழ்க்கை முறையும் உன்னை மயக்கத்திலிருந்து தெளிவிக்கும். எனக்காகவாவது மறுக்காமல் வா.''

''உங்கள் இஷ்டம். ஆனால் ஒரு நிபந்தனை. வார்தாவின் சூழ்நிலை எனக்குப் பிடிக்கவில்லையென்றால் உடனே திரும்பி விடுவேன். சம்மதமா?''

''வார்தாவைப் பிடிக்காதவர்களே கிடையாது. அங்கு வந்துவிட்டால் பிறகு, ஆசிரமத்தையும், மகாத்மாவையும் விட்டுப் பிரியவே மாட்டாய்'' என்றார் தீக்ஷிதர்.

ஒரு மாதத்துக்குப் பிறகு தீக்ஷிதரும், ரங்கமணியும் சென்னையிலிருந்து வார்தாவுக்குப் புறப்பட்டார்கள். வார்தா போய்ச் சேர்ந்ததும், ரங்கமணிக்குச் சேவா கிராமத்தின் சூழ்நிலை ரம்மியமாகத்தான் இருந்தது. இவர்கள் போய்ச் சேர்ந்தபோது, காந்தியடிகள் அங்கில்லை. அவரது அந்தரங்கக் காரியதரிசியாகப் பணியாற்றிய மகாதேவ தேசாயைக் கண்டதும், ரங்கமணிக்கு அவர் மீது பக்தி தோன்றியது. அவருடைய பேச்சும், பண்பும் அவனைக் கவர்ந்தன. தேசாய் ரங்கமணியிடம் இனிமையாகப் பேசினார். வியப்புடன் அவனைப் பார்த்தார். அவனுடைய தீர்மானமான கொள்கையும், அதை எவராலும் தகர்க்க முடியாது என்ற தன்னம்பிக்கையும் அவன் பேச்சில் தொனித்ததை உணர்ந்து விட்டார்.

''எனக்குத் திருப்பி அடிக்கத்தான் தெரியுமே தவிர, அடிபட்டுக் கொண்டிருக்கத் தெரியாது. தாயிடம் அடிபடலாம். எதிரியிடம் படலாமா?'' என்றான் ரங்கமணி.

''எதிரியையும் தலை குனிய வைத்தவராயிற்றே, பாபுஜி.''

''மகாத்மாக்களால் சாதிக்கக் கூடியது அது. ஒரு கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தையும் காட்டுவது மகாத்மாக்களால்தான் முடியும். நான் மகாத்மா அல்ல. வெறும் ரங்கமணிதான். இந்த ரங்கமணிகள் தாம் இந்தியா முழுதும் நிறைந்திருக்கிறார்கள்'' என்றான் ரங்கமணி, சற்றுப் படபடப்புடன்.

''அதைப் பாபுஜி ஒப்புக் கொள்வதில்லையே. இந்தியா முழுதிலும் நாற்பது கோடி மகாத்மாக்களைத்தான் அவர் காண்கிறார்!''

''நான் நாற்பது கோடி ரங்கமணிகளையல்லவா தினமும் கண்டு கொண்டிருக்கிறேன்'' — வெடுக்கென்று பதில் சொன்னான் ரங்கமணி. இதைக் கேட்டுத் தேசாய் சிரித்தார். அவனுடைய திசையை மாற்ற முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். ''இன்னும் இரண்டு தினங்களில் பாபுஜி வந்து விடுவார். அவருடைய சந்திப்பு உன்னிடம் மாறுதலை ஏற்படுத்தலாம். தம்பி, இந்த ஆசிரமத்தை நன்றாகச் சுற்றிப் பார். மனத்துக்கு ஆறுதலாயிருக்கும்'' என்று கூறி விட்டுச் சென்றார் மகாதேவ தேசாய்.

தீக்ஷிதருடன் ஆசிரமம் முழுவதையும் சுற்றிப் பார்த்தான், ரங்கமணி. சூழ்நிலை நன்றாகத்தான் இருந்தது. ஆனால், ஆசிரமவாசிகளின் நடவடிக்கை ...! ராமபஜனை செய்வதும், இதோபதேசம் கேட்பதும், மரத்தடிகளில் உட்கார்ந்து, ராட்டை சுற்றுவதும் — இதற்காகவா ரங்கமணி அங்கு சென்றான்?

ஆனால், அந்த இடத்தின் மகிமை?

எத்தனை எத்தனை தலைவர்கள் வந்து செல்கிறார்கள்! காந்தியடிகள் அங்கு வருவதற்கு முன் அலகாபாத்துக்கு அருகில் சபர்மதி என்ற ஆசிரமத்தில் இருந்தார்.

உப்புச் சத்தியாக்கிரகத்துக்காகச் சபர்மதியி லிருந்து புறப்பட்டபோது, ''சுதந்திரம் பெறுமல் இந்த ஆசிரமத்துக்குத் திரும்ப மாட்டேன்'' என்று கூறிவிட்டார். அன்று சபர்மதியை விட்டு வெளியேறிய காந்தி யடிகள் வார்தாவுக்குப் பக்கத்தில் சேவா கிராமத்தில் ஆசிரமம் அமைத்தார். அது வரை சேவா கிராமத்தைப் பற்றி யாரும் கேள்விப்பட்டதில்லை. மகாத்மா காந்தி வந்த பிறகு இந்த இடம் பிரபலமாகி விட்டது. ராமன் இருக்கும் இடம் அயோத்தி. காந்திஜி யின் சேவாகிராமம் உலகம் முழுவதற்கும் தெரிந்த இடமாகி விட்டது. வார்தாவின் ஒவ்வொரு அசைவையும் உலகம் கூர்ந்து கவனித்தது.

அந்த இடத்தின் பெருமையும், புனிதமும் ரங்கமணிக்கு ஒரு வித பக்தியைக் கொடுத் தன, பயத்தையும் கொடுத்தன.

காந்தியடிகள் வருவதற்கு முந்தின நாள் மாலை, ரங்கமணி ஆசிரமத்தைச் சுற்றி வந்த போது, ஒரு மரத்தடியில் பஞ்சாபி இளைஞன் ஒருவன், ராட்டினத்தில் நூற்றுக் கொண் டிருப்பதைக் கண்டான். அவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

பயங்கரவாதியான பகத் சிங்கின் கூட்டத் தைச் சேர்ந்தவன் அந்த இளைஞன் என்பதை யும், அந்தக் கூட்டத்தாருக்கு எதிராக நடந்த சதி வழக்கில் தகுந்த சாட்சி இல் லாததால் அந்த இளைஞன் தண்டனையின்றித் தப்பினன் என்பதையும் தெரிந்துகொண்ட தும், ரங்கமணி மிகுந்த உற்சாகமடைந்தான்.

''இந்தச் சாதுக்களின் மத்தியில் எப்படி நீ வந்து சேர்ந்தாய்?'' என்று பரிதாபத்துடன் கேட்டான், ரங்கமணி.

''இங்குதான் எனக்குச் சாந்தி கிட்டு கிறது. என்னுடைய கடந்த காலத்தின் நினைவு கசக்கிறது. அதெல்லாம் மறந்துவிட வேண்டிய நிகழ்ச்சிகள். மகாத்மாவைச் சந் தித்த பிறகுதான் என் இரத்த வெறி அடங்கியது. இந்த ராட்டினத்தின் சுழற்சி யிலேயே சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது'' என்றான் பஞ்சாபி இளைஞன். ரங்கமணி திகைத்தான். அவனுள் பரபரப்புத் தோன்றி யது. ஒருவித பயம் உள்ளத்தில் கனித்தது.

இந்தியாவையே அதிசயத்தில் ஆழ்த்திய பகத்சிங்கின் பயங்கரக் கூட்டத்தைச் சேர்ந்த இந்தத் தீவிரவாதியே இப்படிப் பெட்டிப் பாம்பாக அடங்கி, இந்த ஆசிரமத்துக்குள் முடங்கிவிட்டானே! கடவுளே, இந் நாட்டை வார்தா ஆசிரமத்தின் பிடியிலிருந்து நீதான் காப்பாற்ற வேண்டும் — என்று தனக்குள் ளேயே முனகிக் கொண்டான். பஞ்சாபி இளைஞனிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய இடத்துக்குத் திரும்பி வந் தான். அங்கு தீக்ஷிதரும், மகாதேவ தேசா யும் பேசிக் கொண்டிருந்தார்கள். ரங்கமணி குழம்பிய மனத்துடன் உள்ளே நுழைந்தான்.

''ஆசிரம வாழ்க்கை எப்படி இருக்கிறது?'' —மகாதேவ தேசாய் ஆவலோடு கேட்டார்.

''பயமாயிருக்கிறது'' என்றான் ரங்கமணி.

''இந்த இடத்திலா பயம்? அச்சத்துக்கே இடமிருக்கக் கூடாத இடத்திலா உனக்கு அச்சம் தோன்றியது?''



மலைச் சரிவில் கார் வேகமாக இறங்கிக் கொண் டிருக்கிறது. டிரைவர் :''ஐயையோ! பிரேக் பிடிக்க வில்லையே என்ன செய்வேன்?''

புதுப் பணக்காரர்: ''வண்டியை நிறுத்து: நான் இறங்கிக் கொள்கிறேன். நிதானமாக வண்டியை நன்றாக ரிப்பேர் செய்து கொண்டு வா, போகலாம்.''

''என்னை இழந்து விடுவேனே என்ற பயம் தான். இளம் துடிப்புகளை யெல்லாம் ஆறை யாடி, உணர்வற்ற உயிரற்ற பொம்மை களைப் படைக்கும் பட்டறையாக அமைந்து விட்டதே, இந்த ஆசிரமம்'' என்றான் ரங்கமணி, மிகுந்த வருத்தத்துடன்.

''நீ தவருகப் புரிந்து கொண்டிருக்கிருய். இந்திய சுதந்திரப் போருக்கு வீரர்களை அனுப்பி வைக்கும் படைவீடு இது'' என்ருர் தேசாய், பெருமிதத்துடன்.

''இருக்கலாம். ஆனல், நிராயுதபாணி களாகக் களத்தில் இறங்கி என்ன செய்ய? எதிரி வாளை வீசிக் கொண்டிருக்கிருன். நாம் தத்துவம் பேசுகிறோம். ஆயுதம் இல்லாத வீரனும், உயிரில்லாத உடலும் ஒன்று தானே?'' என்றான் ரங்கமணி படபடப்புடன்.

''கத்தியை விடச் சத்தியத்தைத்தான் நாங்கள் நம்புகிறோம். தோள் வலியை விட மன வலியைத்தான் விரும்புகிறோம். எதிரி யிடமிருந்து நாங்கள் விரும்புவது இரத்த மில்லை; அவர்களுடைய கண்ணீரைத்தான். தம்பி, இதனுடைய சக்தி பெரிது. இதைப் பூரணமாக உணர்ந்தவர் பாபுஜி ஒருவர்தாம். உன்னுடைய சந்தேகங்களையும் மயக்கத்தை யும் அவரால்தான் தெளிவிக்க இயலும்'' என்ருர் தேசாய். ரங்கமணி ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

''நாளை மத்தியானம் மகாத்மாவிடம் இவனை அழைத்து வருகிறேன்'' என்ருர் தீக்ஷிதர்.

''பாபுஜி இவனைக் காண ஆவலாக இருக் கிருர். இன்று வந்த கடிதத்தில் கூட இவனை விசாரித்திருக்கிருர். அவர் வரும்வரையில் இவனை இங்கேயே இருக்கச் சொல்லும்படி


White
det
whitens
while it washes
clean

யும் எழுதியிருக்கிறார். நானே சந்திக்கலாம்'' என்று கூறிவிட்டுத் தேசாய் சென்றார்.

அன்று இரவு தீக்ஷிதர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். ரங்கமணி தூங்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். மனம் அலைந்து கொண்டிருந்தது. இரவு முழுதும் தூங்கவில்லை. அதிகாலையில் மூன்று மணிக்கு ஓசைப்படாமல் எழுந்தான். ஏற்கனவே எழுதி வைத்திருந்த ஒரு கடிதத்தை மேஜையின் மீது வைத்து விட்டு, தன்னுடைய பெட்டியை எடுத்துக் கொண்டு ஆசிரமத்தை விட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டான்.

காலையில் கண் விழித்த தீக்ஷிதர், மேஜையின் மீது இருந்த கடிதத்தைத்தான் முதலில் கண்டார். அதில் ரங்கமணி ஆங்கிலத்தில் எழுதியிருந்தான்.

''மதிப்புக்குரிய தீக்ஷிதருக்கு,

பெரிய சோதனையிலிருந்து தப்பிவிட்டேன். வெற்றி பெற்றேன் என்று கூறத் தயாராயில்லை. தோற்று விடுவேனோ என்ற பயத்தில் தான் தப்பிச் செல்கிறேன். என்னுடைய பாதை வேறு. வாழ்க்கையில் அவனவன் தனக்கென்று லட்சியத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். எனக்கும் ஒரு லட்சியம் உண்டு. எனக்கும் ஒரு கடமை இருக்கிறது. சென்னை வீதியிலே என் தந்தை உயிரிழந்த காட்சியை நான் மறந்து விடவில்லை. அதை நீங்களும் என்னோடு சேர்ந்துதான் அன்று பார்த்தீர்கள். உங்கள் நண்பருக்காக நீங்கள் பழி தீர்க்கா விட்டாலும், என் தந்தைக்காக நான் பழி தீர்க்க வேண்டிய கடமையை உணருகிறேன். வெள்ளையன் இந்த மண்ணிலிருந்து என்று ஓடுகிறானோ அன்றுதான் என் தந்தையின் ஆன்மா சாந்தியடையும்.

காந்திஜியின் லட்சியமும் என் லட்சியமும் ஒன்றுதான். அதை எட்டிப் பிடிக்கும் பாதை தான் வித்தியாசம். நான் குறுக்குப் பாதையில் செல்லுகிறேன். மகாத்மாவோ, கற்பனைக்கும் அடைபடாத மிக நீண்ட பாதையில் சென்று கொண்டிருக்கிறார். என்னுடைய பாதை பயங்கரமானதுதான், கரடு முரடானதுதான், இருளடைந்ததுதான். அதற்காக என் வழியிலிருந்து விலகி, மகாத்மாவின் வழிக்கு நான் செல்ல வேண்டும் என்று நினைப்பது மலடி வயிற்றில் குழந்தையை எதிர்பார்ப்பது போலத்தான்.

மகாத்மாவை நேரில் சந்தித்தால், அவருடைய காந்த சக்தியில் என்னை மறந்து, என் வழியை மறந்து, என் கடமையை மறந்து, என் தந்தையைக் கூட மறந்து, காந்திஜியின் நிழலைத் தொடர்ந்து சென்று விடுவேனோ என்ற அச்சத்தால்தான் சொல்லிக்கொள்ளாமலே நழுவி விட்டேன். சென்னையில் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்.

அன்புடன்,
ரங்கமணி''

ரங்கமணி சென்னைக்குத் திரும்பிய இரண்டு நாட்களுக்குப் பிறகு, தீக்ஷிதரும் திரும்பி வந்து சேர்ந்தார்.

''நீ செய்தது பெரிய தவறு'' என்றார் தீக்ஷிதர், வருத்தத்துடன். ''மகாத்மா என்ன சொன்னார் தெரியுமா?''

''என்ன சொன்னார்?'' — ஆவலுடன் கேட்டான், ரங்கமணி.

'' 'தாயை விட்டுக் குழந்தை எவ்வளவு நேரம் ஓடும், எவ்வளவு தூரம் ஓடிவிடும்' என்றார். பிறகு சொன்னார், 'அவன் என்னைப் பாராமல் போயிருக்க வேண்டியதில்லை. என்னைச் சந்திக்கப் பயந்து இப்படி ஓடி விட்டானே! இவனை எப்படி வீரன் என்று ஏற்பது? இவன் எப்படி விடுதலைப் போரில் துணிந்து நிற்பான்?' என்றார் மகாத்மா!

''உன்னைச் சந்திக்க அவர் ஆவலுடன் இருப்பதாக உன்னிடம் கூறும்படி என்னிடம் சொன்னார். ஒருமுறை நீ அவரைச் சந்திப்பது நல்லது'' என்றார் தீக்ஷிதர் தொடர்ந்து.

''நான் அவரைச் சந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. கத்தியின்றி, ரத்தமின்றி அவருடைய வேடிக்கையான சுதந்திரப் போரை நடத்திப் பொழுதைக் கழிக்க நான் தயாராயில்லை. அந்தக் கேலிக் கூத்துக்கு ஆளாவதை விட ஒரு வெள்ளையனின் தலையைப் பறித்துப் பந்தாடும் விளையாட்டில் என்னையே வேண்டுமானாலும் இழக்கத் தயார்'' என்று உணர்ச்சி வேகத்துடன் பேசினான், ரங்கமணி. தீக்ஷிதர் அவனை உற்றுப் பார்த்தார். தம் எதிரே பசியெடுத்த புலி ஒன்று இரத்த வெறி கொண்டு உறுமுவது போலிருந்தது அவருக்கு. எனினும் தீக்ஷிதர் நம்பிக்கையை மட்டும் இழந்து விடவில்லை. என்றாவது ஒரு நாள் ரங்கமணி, காந்தியடிகளின் நிழலில் ஒதுங்குவான் என்ற நம்பிக்கை அவர் உள்ளத்தில் ஒட்டியிருந்தது.

ரங்கமணியும், தீக்ஷிதரும் சென்னையில் தங்கியிருந்த இந்தச் சமயத்தில்தான் சர்தார் சொக்கலிங்கத்தின் தொடர்பு ரங்கமணிக்குக் கிடைத்தது. இதை அறிந்ததும் தீக்ஷிதர், அதிர்ச்சி அடைந்து விட்டார். தம்முடைய நம்பிக்கையெல்லாம் சிதறி விட்டதாக உணர்ந்தார். ஆனால், ரங்கமணியோ, சொக்கலிங்கம் பிள்ளையின் தொடர்பில் மிகுந்த உற்சாகம் அடைந்தான். வெகுநாட்கள் பட்டினி கிடந்தவனுக்கு ஒரு பிடி சோறு கிடைத்த மாதிரிதான், ரங்கமணி ஆனந்தம் அடைந்தான். சொக்கலிங்கம் பிள்ளையை ரங்கமணி சந்தித்ததுமே விசித்திரமானது தான்.

ஒரு நாள் மாலை தீக்ஷிதரிடம் சொல்லிக் கொள்ளாமலேயே ரங்கமணி வெளியே கிளம்பி விட்டான். வெகு நாட்களாக மனத்தில் முடிவு செய்திருந்த திட்டத்தை நிறைவேற்றத் தனியே புறப்பட்டு விட்டான். செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் அரசாங்க அலுவலகத்தின் மீது குண்டு வீசித் தகர்க்கத் திட்டமிட்டிருந்தான். செம்புதாஸ் தெருவிலிருந்த ஓர் இரகசிய கிட்டங்கியில் தயாரிக்கப்பட்ட சக்தி வாய்ந்த கைகுண்டுகளில் இரண்டை வாங்கிக் கொண்டு இருட்டிய பிறகு திட்டத்தை நிறைவேற்றக் கிளம்பினான். தம்புச் செட்டித் தெரு காளி கோயிலுக்குப் பக்கத்தில் அநாதையாக நின்று கொண்டிருந்த ஒரு கைவண்டியை இழுத்துக்

கழுதை ரஸித்தது!



ஸ்பெயினில் கவிஞர் ஒருவர் தமது வீட்டுக்காரர் மீது வழக்குத் தொடுத்தார். பிரசுரிப்பதற்காக வைத்திருந்த கையெழுத்துப் பிரதிக் கட்டுக்களை வீட்டுக்காரரின் கோவேறு கழுதை திருட்டுத்தனமாக நுழைந்து சாப்பிட்டு விட்டதாம்!

— ஏ. கே. கந்தசாமி

கொண்டு கூலிக்காரனைப் போல் கோட்டை வாசலை அடைந்தான்.

வாசலில் காவலிருந்த இரண்டு சிப்பாய்கள், ரங்கமணியின் வண்டியை மறித்துக்கொண்டனர். கோட்டையின் உள் பக்கம் காவலிருக்கும் ஒரு சிப்பாய்க்குச் சாராயம் கொண்டு போவதாகக் கூறினான். சாராயம் என்றதும், அந்தக் காவலாளிகள் இருவரும் பங்கு கேட்டனர். தயாராக வைத்திருந்த நாலைந்து சாராயப் புட்டிகளில் ஒன்றை எடுத்து, அவர்களிடம் கொடுத்துவிட்டு, சாராயப் புட்டிகளிருந்த சிறு பையை மாத்திரம் எடுத்துக் கொண்டு கோட்டைக்குள் நுழைந்துவிட்டான், ரங்கமணி! வடக்கு திசையில் சென்று உள் வாசலை அடைந்தபோது, கட்டிடத்தை ஒட்டி இருட்டில் நின்றிருந்த ஒரு சிப்பாயை ரங்கமணி கவனிக்கவில்லை. சிப்பாய் பாய்ந்து வந்து ரங்கமணியைப் பிடித்துக் கொண்டான். அவனிடமும் சாராயக் கதையை அளந்தான். ஆனால், அந்தச் சிப்பாய் சந்தேகம் கொண்டான். பேசியே சமாளிக்க முயன்றான் ரங்கமணி. முடியவில்லை. சிப்பாய், அவனை அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தான்.

ரங்கமணி ஒரு கணம் திகைத்தான். சிப்பாயைத் தொடர்ந்து சென்றால், ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டான். தீவிரமாக அவன் மூளை வேலை செய்தது. சிப்பாயைத் தொடர்ந்து சிறிது தூரம் சென்றதும், ரங்கமணி திடீரென்று சிப்பாயின் மீது பாய்ந்து, அவனைக் குப்புறத் தள்ளிவிட்டு எதிர்த் திசையில் ஓடத்தொடங்கினான். மறுகணம் சிப்பாயின் விசில் சத்தம் காதைத் துளைத்தது. அதைத் தொடர்ந்து பலப்பல விசில்கள் நாலாபுறமும் அலறின. பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. வெளி வாசலுக்கு வந்தபோது ஒரு சிப்பாய் அவனை மறித்துத் துப்பாக்கியால் குறி பார்த்தான். ரங்கமணி இரண்டு கைகளையும் உயரத் தூக்கிப் பேசாமல் நின்றான். துப்பாக்கியை நீட்டிக் கொண்டே சிப்பாய் அவனை நெருங்கியதும் திடீரென்று ரங்கமணி கையிலிருந்த சாராயப் புட்டிகளுடன் கூடிய பையைத் துப்பாக்கி மீது வீசி யெறிந்தான். அதிர்ச்சியில் சிப்பாயின் கையிலிருந்த துப்பாக்கி கீழே விழுந்தது. மறு கணம் சிப்பாய் மீது பாய்ந்து கீழே தள்ளி விட்டுத் தெருவுக்கு ஓடி வந்தான். பின்னால் சற்றுத் தூரத்தில் பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. பீச் ரோட்டில், நகர சபை விளக்குகள் அழுது வடிந்து கொண்டிருந்தன. லைட்ஹவுஸ் பக்கம் திரும்பிப் பார்த்தான் ரங்கமணி. சற்றுத் தூரத்தில் நாலைந்து சிப்பாய்கள் அவனைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தது தெரிந்தது. திடீரென்று சிப்பாய்கள் துப்பாக்கிகளால் சுடத் தொடங்கினர். ரங்கமணி தன் மடியிலிருந்த வெடிகுண்டு ஒன்றை எடுத்து அவர்கள் மீது வீசியெறிந்து விட்டு லைவல் கிராஸிங்கை நோக்கி ஓடினான். குண்டு தரையில் விழுந்து அதிர்ந்தது. ரங்கமணி லெவல் கிராஸிங்கைக் கடந்து மேற்குப்புறமாக மறைந்து நின்று கொண்டு கவனித்தான். சிப்பாய்கள் அவனைத் துரத்தி வருவது தெரிந்தது. மடியிலிருந்த மற்றொரு குண்டையும் எடுத்துச் சிப்பாய்களை நோக்கி வீசியெறிந்து விட்டு ஓடுவதற்காகத் திரும்பினான். அந்தச் சமயம் அவன் பின்னே ஒருவர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான். ''பயப்படாதே. இந்தக் காருக்குள் ஏறு, சீக்கிரம். தப்பி விடலாம்'' என்றார் அந்தப் புது மனிதர். ஒன்றும் சிந்திக்காமல் ரங்கமணி பாய்ந்து காருக்குள் நுழைந்தான். மறு கணம் கார் கடும் வேகத்தில் புறப்பட்டு மேற்கு நோக்கிச் சென்றது. மன்ரோ சிலைப் பக்கமாகச்சென்று, மவுண்ட்ரோடைக் கடந்து மயிலாப்பூரை நோக்கி விரைந்தது. கடைசியில் மயிலாப்பூர் தெப்பக்குளத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறு வீட்டின் முன்னால் கார் வந்து நின்றது.

''இறங்கு'' என்றார் அந்த மனிதர். ரங்கமணி மௌனமாக இறங்கினான். இறங்கியதும் திடீரென்று ஓட முயன்றான். ஆனால் அந்த மனிதர் அவன் சட்டையை இறுகப் பற்றிக் கொண்டார்.

''ஓடாதே. இன்னுமா பயம்? என்னோடு வா!'' என்றார். இருட்டில் அவர் முகம் தெரியவில்லை. அவனை முன்னால் தள்ளிக் கொண்டு வீட்டு வாசலுக்கு வந்தார். அவனிடம் ஒரு சாவியைக் கொடுத்துக் கதவைத் திறக்கச் சொன்னார். ரங்கமணி கதவைத் திறந்ததும் அவனை உள்ளே தள்ளிக் கதவை உள்பக்கமாகப் பூட்டிவிட்டு மின்சார விளக்கை ஏற்றினார்.

ரங்கமணி திகைப்புடன் அவரைப் பார்த்தான். அவருக்கு அறுபது வயதிருக்கும். கிழவர்தான் என்றாலும் அவருடைய உடும்புப் பிடியில் ரங்கமணி திணறிவிட்டானே!

என்ன பலம்! கம்பீரமான உடற்கட்டு. கூர்மையான பார்வை. முகத்தில் முறுக்கி விடப்பட்ட சிறு மீசை. அது நரைத்திருந்தாலும் அழகிருந்தது. பரந்த முகம், விரிந்த மார்பு.

அவரையே வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றான். அவனை மாடிக்கு அழைத்துச் சென்று ஒரு சோபாவில் இருத்தினார். அவரும் உட்கார்ந்து கொண்டார். **(தொடரும்)**

இதோ! புத்தம் புதிய

ராசி டூ-டோன் (Two-Tone)

புதிய ராசி வண்ணச் சேர்க்கை...மகிழ்ஊட்டும் நிறங்கள், கவர்ச்சியான பார்டர் டிசைன்கள், நுண்ணிய புட்டாவொர்க் இப் புதிய டூ-டோன் புடவை அணிந்து மகிழ்வுடனும், பெருமிதத்துடனும் திகழுங்கள்.

ஜுவல் டோன் ராசியின் மற்றுமொரு புதிய வண்ணச் சேர்க்கை. ஒப்பில்லா ராசி படைப்புகளை நீங்கள் விரும்பிப் பாதுகாப்பீர்கள். அவைகளை இன்றே பாருங்கள்.

ராதா சில்க் எம்போரியம்
14, சன்னதித் தெரு,
மைலாப்பூர், மதறாஸ்-4

ராதா சில்க்ஸ்
'தன் பில்டிங்ஸ்',
மவுண்ட்ரோடு, மதறாஸ்-2

ராதா சில்க் எம்போரியம்
பம்பாய் சுதேசி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி கட்டிடம்,
வெஸ்டர்ன் இந்தியா ஹவுஸ்,
ஸர். பி. எம். ரோடு, பம்பாய்-1.

ராசி



வெண்ணிலவுப் பெண்ணரசி

அத்தியாயம் 6

சூழ்ச்சிப் பின்னல்

இரவோடு இரவாகச் சிவிகைகளும் குதிரைகளும் மற்கூடத்திலிருந்து சென்று மறைந்த நிகழ்ச்சி நாகமல்லனுடைய உள்ளத்தில் கொந்தளிப்பைக் கொடுத்தது. அவன் எதிர்பார்த்தது ஒன்று, நடந்தது ஒன்று. ஏமாற்றமும், சீற்றமும், நாகமல்லனுடைய இதயத்தில் புகை கிளப்பின!

ஆம்; நாகமல்லன் வேறு வகையாக எதிர்பார்த்தான்; இளவரசி இளநன்விக்கு ஆதனாருடைய நிலவறையிலேயே தொடர்ந்து சிகிச்சை நடைபெறும், அழலாடி அங்கேயே இருப்பான், அவனை எளிதில் விடக் கூடாது என்றெல்லாம் ஏதேதோ சூழ்ச்சி வலைகளைப் பின்னிக் கொண்டிருந்தது அந்த நாகர் சிலந்தி! இப்போது மனத்தில் அவமான உணர்ச்சியும் ஆத்திரமும் ஆணவ வெறியும் தலைவிரித்து ஆடின!

''இருக்கட்டும் எங்கே போய் மறைந்தாலும் என்ன! ஒரு கை பார்த்து விடுகிறேன், என்னைத் தூக்கித் தலைக்கு மேல் கொண்டு போய்த் தரையில் அடிக்க முயன்ற அந்தக் கைகளை!'' என்று வஞ்சினம் கூறிக் கொண்டே அந்த மற்கூடத்திலிருந்து புறப்பட்டான் நாகமல்லன்.

ஆதனாரும், இளவரசியும், அழலாடியும் மிருந்த பாதுகாவலோடு தென்மேற்குப் பக்கமாகச் சென்றார்கள். என்றால், நாகமல்லனும், அவனுடைய நண்பர்கள் இருவரும் வடமேற்குப் பக்கமாக வேறு குதிரைகளில் புறப்பட்டார்கள்.

இரண்டு காத தூரம் இந்தக் குதிரைகள் விரைந்து ஓடின. ஓடி ஏழில் மலை அடிவாரத்துக்கு வந்தன. வந்து நன்னனுடைய தங்கள் அரண்மனையின் தலைவாசலுக்கு முன்னால் நின்றன அந்தக் குதிரைகள்!

நன்னனுடைய அரண்மனை அப்போது எந்த நிலைமையில் இருந்தது? மன்னனுடைய அரசச் சுற்றத்தார்கள் அனைவரும் ஒரே பதற்றத்தில் இருந்தார்கள்! தங்கள் அரண்மனைக்குள்ளே உடலும் உள்ளமும் பதறியவாறு பணி



சோமு

யாளர்களும் காவலாளர்களும் ஓடுவதும் சாடுவதும் அங்குமிங்கும் விரைந்து செல்வதுமாக ஒரே குழப்பம் குடிகொண் டிருந்தது அந்தச் சூழலிலே!

அரசப் பள்ளியறையின் பலகணிக் கண் வழியாக யாரோ உள்ளே குதித்து வந்து ஏதோ மாயம் செய்து இள



வரசியைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள் என்று அரசப் பணியாளர்கள் எல்லாம் கூடிக் கூடிப் பேசிக் குமைந்து கொண்டிருந்தார்கள்.

மிஞிலி என்ற துளு நாட்டுத் தானைத் தலைவனை மணக்கும்படி நன்ன வேந்தன் தனது மகளை வற்புறுத்தி வந்தான் என்றும், மகள் அந்த வற்புறுத்தலுக்கு இம்மியும் இசையவில்லை என்றும், இதையறிந்த மிஞிலியின் பகைவர்கள் ஏதோ சூழ்ச்சி செய்து அரசகுமாரியை எடுத்துச் சென்று விட்டார்கள் என்றும் சிலர் பேசிக் கொண்டார்கள். அரச குமாரிக்கே ஒரு காதலன் இருந்தான் என்றும், அவன் மிஞிலியின் பிடியிலிருந்து இளவரசியைக் காப்பாற்றித் தானே மணந்து கொள்வதற்காக இப்படி ஓர் ஆபமான செயல் செய்தான் என்பதாகவும், இந்தச் செயலில் இளவரசியும் உடந்தையாக இருந்தாள் என்பதாகவும் அரண்மனை மன்றத்தார்களில் இரண்டொருவர் சொன்னார்கள்.

துளு நாட்டு அரண்மனையிலே இலைமறைவு காய் மறைவாகப் பணிபுரிந்து வந்த ஆதனாரின் மாணவர்களுக்கு நாகமல்லனுடைய இப்போதைய மனப் போராட்டமும் சூழ்ச்சிகளும் எப்படித் தெரியும்? அவர்கள் நாகமல்லனுக்கு உதவி செய்தார்கள். அவர்களுடைய ஒத்துழைப்போடு துளு நாட்டுத் தானைத் தலைவனை — மிஞிலியைச் சந்தித்தான் நாகமல்லன்.

''தானைத் தலைவரே! இந்த அரண்மனையிலே நடந்துள்ள அதிர்ச்சி தரும் நிகழ்ச்சி என் உள்ளத்தைச் சிதற அடித்து விட்டது. ஆனால் ஆபமான செய்திகளோடு வந்திருக்கிறேன் நான்'' என்று தொடங்கினான் நாகமல்லன். மிஞிலி அவனுடைய பேச்சை ஆர்வத்தோடு கேட்டான்.

''வீரர் திலகமே! நடந்துள்ள அநீதியை நேருக்கு நேராகப் பார்த்த பிறகு ஒரு விநாடியும் என்னால் தாங்க முடியவில்லை. உடனே குதிரையில் காற்றாகப் பறந்து வருகிறேன். அந்த அழலாடியைப் பிடித்து அரசகுமாரியைத் தொட்ட அந்த இரண்டு கைகளையும் தங்களுடைய வாளால் வெட்டி வீழ்த்தினால்தான் என் ஆத்திரம் அடங்கும்!''

இவ்வாறு சொல்லி வஞ்சக் கண்ணீர் வடித்தான் நாகமல்லன்.

''வீரனே! நடந்தது என்ன? யார் அந்த அழலாடி? வருத்தத்தை அடக்கிக்கொண்டு தெளிவாகச் சொல்வாயாக!'' என்று கட்டளை இட்டான் துளு நாட்டுத் தானைத் தலைவன்!

''வீரர் பெருமானே! கானகத்தின் தென் கோடியிலே இளவரசியைத் தூக்கி எடுத்துக் கொண்டு அழலாடி ஒரு கருங் குதிரையிலே ஓடிச் சென்றான். அவனுக்குத் துணையாக யாரோ இரண்டு கோசர் வீரர்கள் சென்றார்கள். எல்லாரும் முல்லை மூதூர் மக்கள்! நான் தனி மனிதன்தான். ஆனாலும் வழி மறித்துப் போராடிப் பார்த்தேன். முடியவில்லை. திமிறிக் கொண்டு ஓடி விட்டார்கள்!'' என்று சொல்லி ஒரு பதற்ற நடிப்பு நடித்தான் நாகமல்லன்.

''இளவரசி எப்படி இருக்கிறாள்?'' என்று ஆவல் பொங்கக் கேட்டான் மிஞிலி.

''அதை ஏன் கேட்கிறீர்கள் பெருமானே! மயக்க மருந்து எதையோ கொடுத்துக் கிறங்க வைத்திருக்கிறான், நமது இளவரசியை! அதைப் பார்க்கவே கண் கலங்குகிறது!'' என்று சொல்லிக் குரலிலே உருக்கம் கொடுத்தான் நாகமல்லன்.

''மல்லா, நானும் நினைத்தேன். அப்படி ஏதாவது ஒரு சூழ்ச்சிதான் நடந்திருக்க வேண்டும் என்று! மனம் ஒப்பி நம்முடைய இளவரசி எப்படி வெளியேறுவாள்!'' என்று சொல்லித் தனக்குள்ளேயே ஒரு நிம்மதி கண்டு கொண்டு முகம் மலர்ந்தான் மிஞிலி! இளவரசியிடம் அத்தனை மோகம் அவனுக்கு. இதை நன்றாகப் புரிந்து கொண்டிருந்த நாகமல்லன் உண்மையையும் கற்பனையையும் கலந்து பேசினான். குருவுக்கு மட்டும் துரோகம் செய்யப் போவதில்லை என்றான் அல்லவா? குரு பக்தியோ அல்லது குரு பயமோ, ஆசிரியர் ஆதனாரின் பெயரையே கொண்டு வராமல், தனது முறையீட்டைக் கள்ளக் கண்ணீரோடு அழுது நடித்தான் நாகமல்லன்!

''யாரந்த அழலாடி? யாரவன் அந்த முல்லை மூதூர் அழலாடி?'' என்று கொதித்தான் மிஞிலி. அவனுடைய மீசை துடித்தது. கண்களில் தீப்பொறிகளைக் கக்கினான்.

''அழலாடி என்பவன் முல்லை மூதூர்த் தலைமகனுடைய மகளை மாலையிட்டவன்.''

''நாகமல்லா, முல்லை மூதூரில் இப்போது யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் மிஞிலி.

''நம்முடைய நன்னர் மரபுக்கே முழு வைரிகளான கோசர் குலத்தாரின் தலைவன் சூலபாணி இருக்கிறான்.

அவன்தான் முல்லை மூதூரின் தலை மகன். கிழவன். அவனுடைய மகள் பொன்மணி. அந்தப் பொன்மணியின் கணவன்தான் அழலாடி!''

இப்படி நாகமல்லன் சொன்னதும் இமைகளைக் கைவிரல்களால் நெருடிக் கொண்டே சற்றுச் சிந்தனை செய்தான் மிஞிலி. பிறகு கேட்டான்:

''தம்பி, அந்த அழலாடி நம்முடைய இளவரசியைத் தூக்கிக் கொண்டு முல்லை மூதூருக்குச் சென்றிருப்பான் என்று நினைக்கிறாய் நீ? மனைவியும் மாமனும் இருக்கும் இடத்துக்கா ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போவான்? எனக்குத் தோன்றவில்லையே அப்படி!''

இந்த ஆணித்தரமான கேள்விக்கு மறு விநாடியே ஆணி அடித்தாற் போல் மறுமொழி கூறினான் நாகமல்லன்!

''ஐயனே! அழலாடி நேரே முல்லை மூதூருக்குச் சென்றிருக்கலாம் அல்லது திருட்டுத்தனமாக வேறு எங்காவது சென்றும் இருக்கலாம். எது எப்படியானாலும் அழலாடியின் இளம் மனைவி மூதூரில்தானே இருக்கிறாள். பொன்மணி என்ற அந்த எழில் மிக்க பேரழகியும் நமது அரச குலத்தின் முழு எதிரியான சூலபாணியும் கோசர் குலத்தின் வீரர்களும் அங்குதானே வாழ்கிறார்கள்! பழிக்குப் பழி வாங்க வேண்டிய இடம் நமக்கு முல்லை மூதூர்தானே! தங்களுக்குத் தெரியாத யோசனை அல்லவே பெருமானே!'' என்று சொற்களை இழுத்தான் நாக மல்லன்!



ஆசிரியை: உன் பெயர்?

மாணவி: சரோஜினி தேவி.

ஆசிரியை: சரோஜினிதேவியா? மிகவும் பிரசித்தமான பெயர் ஆயிற்றே?

மாணவி: இருக்காதா பின்னே, இந்த வகுப்பிலேயே மூன்று வருஷங்களாக இருக்கிறேனே !

— ஏ.கே. சுந்தரசாமி

''பழிக்குப் பழி! பழிக்குப் பழி! நன்றாக உரைத்தாய்! அழகாகச் சொன்னாய் நாகமல்லா! உனது கருத்தை மெச்சினேன். இந்தா, இந்தப் பொன்னாரத்தை நான் தரும் இந்தப் பொன்மணியை, எனது முதலாவது பரிசாகப் பெற்றுக் கொள். ஒரு வாரம் கழித்து வந்து என்னைப் பார் மீண்டும்! இப்போது நான் மன்னரிடம் விரைந்து செல்கிறேன்!''

ஃ ஃ ஃ



நாக மல்லனுடைய முதலாவது வேலை, அறத்தின் பெயரால் அவன் செய்ய முனைந்த முதலாவது அறமற்ற செயல் இப்படி முடிந்தது. இனி அடுத்த பணியை முன்னிட்டு மீண்டும் கிளம்பினான் நாகமல்லன். அந்த மூன்று குதிரைகளும் இப்போது முல்லை மூதூரை நோக்கி மிகவும் விரைவாகப் பறந்தன!

முல்லை மூதூர்! வளமும் திருவும் நிரம்பி நீதியும் நேர்மையும் வழி வழியாக வளர்ந்து எழிலும் அறமும் செழிப்புற்று ஓங்கிய பழம்பெரும் மூதூர். அந்தப் புண்ணிய மண்ணிலே மூன்று கருங் குதிரைகளின் காலடி பட்டது. முல்லை மூதூர்த் தலைமகன் சூலபாணியின் அமைதியான இல்லத்தின் அறம் வளர்ந்த முகப்பிலே வந்து படபடத்து நின்றன அந்த மறக் குதிரைகள்.

''யார் நீங்கள்? தெரியவில்லையே! இதற்கு முன் உங்களைப் பார்த்திருப்பதாக நினைப்பில்லையே எனக்கு!'' என்று திகைத்தார் சூலபாணி, பொன்மணியின் அருமைத் தந்தை.


''நாங்கள் துளு நாட்டிலிருந்து வருகிறோம். கோசர் குலத்தின் புகழிலும் அதன் மறு வாழ்விலும் எல்லையற்ற ஆர்வம் கொண்ட பழைய மரபைச் சேர்ந்த வீரர்கள் நாங்கள்!''

''சரி; இப்போது—''

''உங்கள் மகளைக் கைப்பிடித்த அழலாடி உங்களுக்கும் கரம் பற்றிய மனைவிக்கும் மிகப் பெரிய வஞ்சகம் இழைத்து விட்டான். அதைக் கண்டு பொறுக்காமல் ஓடோடியும் வருகிறோம் நாங்கள்!''

நாகமல்லன் இவ்வாறு சொன்னதும் கிழவருடைய முகத்தில் ஒரு துணுக்கம் ஏற்பட்டது. என்றாலும் அதை உட்கொண்டு பேசினார் அவர்.

''என்ன நடந்தது சொல்லுங்கள். புதிர் போடாதீர்கள். அதையெல்லாம் தாங்குகிற வயதில்லை எனக்கு.''



இப்படிக் கிழவர் சொன்னதும் பக்குவமாகப் பேச்சிலே தனது வஞ்சத்தைப் பொதிந்தான் நாகமல்லன்.

"ஐயா, நீங்களும் உங்கள் அருமை மகளும் இந்த அழலாடி உங்கள் குலப் பழியைத் துடைத்து வருவான் என்று ஆவலோடு காத்திருக்கிறீர்கள். ஆனால் அவனோ இரவுக்கிரவே திருட்டுத்தனமாக அரண்மனையிலே புகுந்து இளவரசியைக் கடத்திக் கொண்டு போய் விட்டான். ஏற்கனவே இளவரசிக்கும் இவனுக்கும் ஏதோ நட்பு இருந்திருக்க வேண்டும் என்று கூடப் பேசிக் கொள்ளுகிறார்கள்!"

இவ்வாறு நாகமல்லன் சொன்னதும் இந்தச் சொற்களை உள்ளறைக்குள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த பொன்மணி ஒரு விநாடி தயங்கினாள். "அப்பா!" என்று தந்தையை உள்ளே அழைத்தாள் அவள்.

"அப்பா, கண்ட கண்ட மனிதர்களையெல்லாம் ஏன் வீட்டுக்குள் விடுகிறீர்கள். நாமோ எத்தகைய ஆதரவும் இல்லாமல் எப்படியோ இருந்து வருகிறோம். துளு நாட்டு அரசனுக்கும் நம் குலத்துக்கும் இருந்து வந்துள்ள பகையைப் பற்றியே நான்தானே அவருக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னேன். அதன் பிறகு அல்லவா அவர் புறப்பட்டார். இந்த மனிதன் சொல்லுவதோ முற்றிலும் மாறுபாடாக இருக்கிறதே. இதில் ஏதோ வஞ்சகம் இருக்கிறது. அவராவது இளவரசியைக் கடத்திக் கொண்டு செல்வதாவது! எல்லாம் வம்பான பேச்சு!"

மகள் இப்படிச் சொன்னதும் சூலபாணி வெளியே வந்தார்.

"சரி தம்பி, நீங்கள் சென்று வாருங்கள். நான் எல்லாச் செய்திகளையும் ஆராய்ந்து முடிவுக்கு வருகிறேன்."

இப்படிச் சொல்லிக் கைகூப்பினார் பெரியவர்.

நாகமல்லன் எழுந்தான். அவனுக்குத் தெரியும். தான் சொன்ன மொழிக்கு ஒரு மறுமொழியாக ஏதோ பேசினாரே தவிர, அவன் ஊன்றிய நஞ்சு விதை எப்படியாவது முளைக்கும் என்று அவனுக்குத் தெரியும்! அந்த நம்பிக்கையோடு அங்கிருந்து அகன்றான் நாகமல்லன்.

ஆம்; நாகமல்லன் நினைத்ததில் தவறில்லை. தந்தையிடம் ஏதோ சொல்லிச் சமாதானம் செய்த போதிலும் பொன்மணிக்கு உள்ளத்தின் ஆழத்திலே நச்சு முள் தைத்து விட்டது.

"யாரோ ஒருவன் நம்மிடம் வந்து இந்தச் செய்திகளைச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இது பொய்யான வஞ்சகச் செய்தி என்றால், இப்படி ஒரு செய்தியை நம்மிடம் சொல்லி நம்மிடமிருந்து என்ன பயனை அடைய 'போகிறான் இந்த மனிதன்! துளு நாட்டுக்கு இவர் சென்ற பிறகு ஒருவேளை இளவரசியை இவர் சந்தித்து அதிலிருந்து இவர்களுக்குள் ஒரு நேசம் ஏற்பட்டிருக்கலாமோ? ஆனால் அப்படி இருக்குமா? நம்மிடம் எத்தனை உறுதியோடு சபதம் செய்தார்? அதற்கு மாறாக நடப்பாரா? ஏன் நடக்க மாட்டார்? கரம் பற்றிய திருமண இரவிலே அந்தக் கைகளைத் தொடக் கூடாது என்று உதறியவள்



மார்க் ட்வெயின் நியூயார்க் நகரிலிருந்த ஒரு புத்தகக் கடைக்குள் நுழைந்தார். அங்கிருந்த நூலொன்றை எடுத்துக் கொண்டு "என்ன விலை இது?" என்று கேட்டார். கடைக்காரன் அதன் விலையைச் சொன்னான்.

"நானும் ஒரு பதிப்பாளன்தானப்பா! பதிப்பாளர்களுக்கான 50 சத விதக் கழிவு ஏன் தரக் கூடாது?" என்றார் ட்வெயின்.

"சரி" என்றான் ஊழியன்.

"அதுமட்டுமல்ல! நான் ஒரு எழுத்தாளன். அதற்காக 50 சதவிதம் கழிவு கொடு!"

"சரி!"

"மறந்து விட்டேன் பார்! உங்கள் கடை முதலாளி என் நண்பர். அதற்காக ஒரு 25 சதவிதம் கழிவு கொடுக்கக் கூடாதா?" இதற்கும் "சரி" என்றான் கடைக்கார ஊழியன்.

"நல்லது நான் எவ்வளவு தர வேண்டும்? கணக்குப் பார்த்துக் கூறு!" என்றார்.

"நீங்கள் ஒன்றும் தரவேண்டியதில்லை. கணக்குப்படி நாங்கள்தான் உங்களுக்கு முப்பத்தேழரை செண்ட் தர வேண்டும்" என்றதும், "சரி! நான் நூலை எடுத்துக் கொள்ளுகிறேன். முப்பத்தேழரை செண்டை முதலில் என்னிடம் வை!" என்றார் மார்க் ட்வைன்.

— இ. முத்துக்குமரன்

தானே நான்? அன்பை நாடி வந்தவருக்கு ஒரு பெரிய அரசச் சிக்கலை அல்லவா உண்டாக்கினேன் நான்? அன்புக்கு அன்பை வழங்கவில்லையே!''

இவ்வாறு உள்ளத்தைக் குழப்பிக் கொண்டே படுக்கையில் புரண்டாள் பொன்மணி. உறக்கம் வரவில்லை.

கண்களை மீண்டும் மீண்டும் மூடி உறங்க முயன்றாள் பொன்மணி. இமைகள் பொருந்தவில்லை. இதயத்தில் மென்மை தணியவில்லை. அவள் படுக்கையிலிருந்து எழுந்தாள்.

தந்தையின் படுக்கையறைக்கு வந்து பார்த்தாள் பொன்மணி. கிழவர் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். காவலாளிகள் எல்லாம் கண்ணயர்ந்து கிடந்தார்கள். எத்தகைய ஓசையும் எங்கும் இல்லை. இரவுப் பொழுதே ஓரே அமைதியாக அதுவும் உறங்கிக் கொண்டிருந்தது.

போர்வையை இழுத்துப் போர்த்தி உடம்பை மூடிக் கொண்டு பொன்மணி ஓசைப்படாமல் கூடத்துக்கு வந்தாள். திண்ணைக்கு வந்தாள். வாசற்கதவை மெதுவாகத் திறந்தாள். வீதியிலே இறங்கினாள் பொன்மணி!

வானம் அவளுடைய இதயத்தைப் போல் இருண்டிருந்தது. நம்பிக்கை தரக்கூடிய நட்சத்திர ஒளிகூட இல்லை. நடந்தாள் பொன்மணி. நடக்க நடக்க எங்கோ தொடு வானத்தில் தொங்கிய ஒரு விண் மீன் மினு மினுப்பது தெரிய ஆரம்பித்தது. அந்த நம்பிக்கை ஒளியை நோக்கி நடப்பவளைப் போல முல்லைமூதூர்க் கானகத்துக்குள்ளே நடந்தாள் பொன்மணி.

ஆம்; அந்தக் கானகத்தின் தொலை தூரத்தில் உள்ள ஒரு மனித நடமாட்டமில்லாத இருட் கோடியிலேதான் நேரிழையின் தந்தைக்கு நடுகல் நின்றது. நன்னனைக் கொன்று தீர்த்து அந்த வாளின் இரத்தத் துளிகளைத் தெளிக்க வேண்டிய இடம் அல்லவா அந்த நடுகல்! அதைச் செய்யப் போவதாக உறுதி கூறிவிட்டுத்தானே சென்றான் தன் கணவன்!

நடந்தாள் பொன்மணி. நேரே அந்தக் கானகத்துக்குள்ளே நடந்தாள். பல ஆண்டுகளுக்கு முன்பு எப்போதோ ஒரு முறை தன் தந்தையுடன் இங்கே வந்திருக்கிறாள், பொன்மணி. பலப் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரே ஒரு முறை! இப்போது பாதை நினைவில்லை. வழி தெரியவில்லை. தட்டுத் தடுமாறிக் கல்லிலும் முள்ளிலும் இடறிக் கால் தடுமாறி, வட்டம் சுற்றி வழி தப்பி இங்கும் அங்குமாக அலைந்து திரிந்து கடைசியில் ஒரு மட்டும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தாள் பொன்மணி. ஆனால் நீண்ட நாழிகை கடந்து விடியும் தருணம் ஆகி விட்டது. நடுகல்லை முறையிட்டு செய்துவிட்டு, இரவுக்கு இரவே வீடு திரும்பிவிட வேண்டும் என்று எண்ணி வந்தவளுக்கு இப்பொழுது குழப்பம் அதிகமாயிற்று. தந்தை தன்னைக் காணாமல் என்ன பாடு படுவாரோ!

நடுகல் வீரனிடம் குறைகளைச் சொல்லி வேண்டுவது என்பது தமிழ்க் குலத்துப் பண்டைய மரபு. அதைச் செய்து முறையிட்டுப் போக வந்தவள் பொன்மணி. ஆனால் வந்த நேரம் இப்படி ஆயிற்றே!

'ஐயோ! ஏன் இத்தனை ஆத்திரப்பட்டேன் நான்! விடிந்த பிறகு தந்தையிடம் சொல்லி அவரையும் அழைத்துக் கொண்டு இங்கு வந்திருக்கலாமே! என்ன தவறு செய்தேன்!'

இவ்வாறு அங்கலாய்த்தவாறே நடுகல்லுக்கு முன்னே விழுந்து கதறியழுதாள் பொன்மணி.

''கோசர் குல தெய்வமே! கோசர் குலவிளக்கே! என் குடும்ப விளக்கை அணைத்து விடாதே என் அப்பனே! நீ இந்த நடுகல்லில் இருந்து எங்களுக்கு வழிகாட்டுவாய் என்று நம்பியே அவரைத் துளு நாட்டுக்கு அனுப்பினேன். வஞ்சகம் புரிய இடம் கொடுத்து விடாதே தெய்வமே!''

இப்படிச் சொல்லித் தேம்பித் தேம்பி அழுதாள் பொன்மணி!

அதே வேளையில் முல்லை மூதூரில் என்ன நடந்தது?

விடியற்காலையில் எழுந்து மகளைக் காணாமல் உள்ளமும் உடம்பும் பதறிய நிலையிலே ஒவ்வொரு அறையாகத் தேடியவாறு, 'பொன்மணி, 'பொன்மணி' என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே வந்தார் சூலபாணி. வீதிக்கு வந்து அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தி, நிலத்திலும் வானத்திலுமாக மறுகி மறுகி நோக்கினார் கிழவர். ஆனால் அது என்ன? ஓரே புழுதிப் படலம் கிளம்புகிறதே!

வீதியின் கோடியைத் தாண்டி இப்போது அந்தப் புழுதிப் படலம் கிழவரின் கண்களிலே வந்து படர்ந்து போர்த்தியது. அடுத்த விநாடி குதிரைகளின் காலடி ஓசை, நூறு நூறு புரவிகளின் குளம்பொலி, படபட என்று கேட்டது. அரசப் படை ஒன்று முல்லை மூதூரை நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருந்தது ! (தொடரும்)



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப் சலவையின் எல்லைமீறிய வல்லமை! கரைகடந்த நுரைவளம்! கேட்பானேன். சேலை, சிற்றுடை முதல் சிறுவரின் ஆடைவரை ... எதற்கும் நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை! கைப்பட விட்டிலே துணி வெளுக்க ஒரே வழி: கைகண்ட ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை


இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 38-140 TM

காங்கிரஸ் ஆட்சியில்....

அரசியல் சாஸனம்
பன் முறை மீறப்
பட்டது;
ஆட்சியாளரின்
மனம் போனபடி
திருத்தப்பட்டது!





விலைவாசி உயர்வும்,
கடும் நேர்முக மறைமுக
வரிகளும் பாமர மக்க
ளின் அன்றாட வாழ்க்
கையைச் சிரமசாத்திய
மாக்கி விட்டன.

பாகிஸ்தான், சீனா
இவற்றின் எதிர்ப்
பிலிருந்து பாது-
காத்துக் கொள்ளத்
தென் கிழக்கு
ஆசிய நாடுகளுடன்
பரஸ்பரப் பாதுகாப்பு
உடன்படிக்கை
செய்து கொள்ளத்
தவறிவிட்டது.



சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால்....

அரசாங்கத்தின்
செலவினத்தைக்
குறைக்கும்..





நேர்முக மறைமுக
வரிகளைக்
குறைக்கும்,
நிலவரியை நீக்கும்.

விலை உயர்வைத்
தடுக்கும்; வயல்-
ஆலைகளில் உற்பத்தி
பெருகப் பாடுபடும்.






விவசாயம், தொழில்,
பஞ்சாயத்துக்கள்,
கூட்டுறவுச் சங்கங்கள்
ஆகியவற்றை
அரசாங்கத் தளைகளி
லிருந்து விடுவிக்கும்.

இன்றே இப்பொழுதே
மக்களுக்கு நல்
வாழ்வு நல்கப்
பாடுபடும்.



B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1967 மார்ச் 5 — 1967 மார்ச் 28

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி புரொப்ரைட்டர்: குட்டி டிராவல் சர்வீஸ் 38, அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை-1	மெஸர்ஸ் கோனா டிராவல்ஸ் மாஸ்காட் ஹோட்டல் திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1967 மார்ச் 6 — 1967 மார்ச் 29

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டென்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.** முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

கோவாவின்
சரித்திரத்தில்
ஓர் ஏடு







.......ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இருபதாம் தேதி. மக்கள் நகரசபைக் காரியாலயத்தின் வாசல் கதவை உடைத்து நொறுக்கிக் கொண்டிருந்தார்கள். உடனே பஞ்சிமுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அங்கிருந்து முந்நூறு ராணுவ வீரர்கள் மார்காவுக்கு வந்தார்கள். அவர்கள் வந்த சமயம் தேவாலயத்தில் பிரார்த்தனை முடிவுறும் தருணம். ராணுவ வீரர்கள் மக்கள் மீது பாய்ந்தார்கள். அவர்களைத் துப்பாக்கி முனை சுட்டியினும் குத்தினார்கள்; சுட்டுந் தள்ளினார்கள். மாதா கோயிலின் எதிரேயே மைதானத்தில் ரத்தம் குபுகுபுவென்று பெருகியது. உயிரற்ற உடல்களிலிருந்து.

இந்த அக்கிரமத்துக்குக் காரணமானவன் கவர்னர் கஸ்ஹார்டோ. புதிய வரிகள் பல விதித்து மக்களைக் கொடுமைப் படுத்திய இவனை உணர்ச்சிகளற்றவன், எருமை மாட்டைப் போன்றவன் என்கிறது ஒரு கோவானிய நாட்டுப் பாடல்.

ராணுவத்தினரைத் தருவிக்கும் அளவுக்கு மக்கள் புரட்சி செய்யக் காரணம் என்ன? தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளத்தான் அவர்கள் போராடினார்கள். போர்ச்சுகலில் உள்ள பார்லிமெண்டுக்குக் கோவாவிலிருந்து ஆறு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவது வழக்கம்.

இந்த அறுவரும் போர்ச்சுகீசியரின் கைப் பாவையராக இருந்துவிடக் கூடாது என்பதில் மக்கள் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஆனால் ஆட்சியில் இருந்தவர்களோ மக்களைப் பயமுறுத்தி அதன் மூலம் தங்களுக்குச் சாதகமானவர்களே தேர்ந்தெடுக்கப்பட வழிவகுக்க எண்ணினர். இதன் விளைவு தான் புரட்சி, துப்பாக்கிச் சூடு எல்லாம். அன்று வரையில் கோவா கண்டறியாத பயங்கர நிகழ்ச்சி இது.

ஆக, சமீபத்தில் கோவாவில் அபிப்பிராயத் தேர்தல் என்று நடந்து அது உலகத்தின் கவனத்தையே கவர்ந்த போதிலும் கோவானிய மக்களுக்குத் தேர்தல் என்பது புதுமையான விஷயமல்ல என்று தெரிகிறது. கோவானியருக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் போர்ச்சுகீசியர் எப்போது வழங்கினர்? கோவாவின் சரித்திரம் இதையும் கூறுகிறது. போர்ச்சுகீசியரின் கொடுமைகளை விவரிப்பது போல் அவர்களின் பெருந்தன்மையையும் உண்மையுடன் பதிவு செய்துள்ளது.

1820-ஆம் ஆண்டிலேயே வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது எனினும், கிறிஸ்தவர்கள்மட்டுமே கோவானியரின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துப் போர்ச்சுகலுக்கு அனுப்பி வைக்க முடியும் என்று சட்டமியற்றி யிருந்தார்கள். செல்வந்தரும் மக்களிடம் செல்வாக்கு உள்ளவரும் சமூகத்தின் அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டவருமான பெருந்தகையாளர் புருஷோத்தம் பாபா கென்க்ரே என்பவர்தான் ஹிந்துக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று போராடி வெற்றி கண்டவர். இவர் முதலில் பல ஹிந்துக்களின் கையொப்பங்களுடன் போர்ச்சுகீசிய மன்னருக்கு ஒரு மகஜர் அனுப்பி வைத்தார். இவரது கோரிக்கையை ஆராய மன்னர் ஒரு கமிட்டி அமைத்தார். அக்கமிட்டியில் புருஷோத்தம் பாபாவும் இடம் பெறச் செய்திருந்தார் மன்னர். கமிட்டி நிலைமையை ஆராய்ந்தது. பாபா ஒருவரைத் தவிர மற்ற அனைவருமே கோவானிய ஹிந்துக்களுக்கு வாக்குரிமை வழங்கக் கூடாது என்று தீர்ப்பளித்தனர். ஆனால் பாபா இதை மறுத்து அறிக்கை சமர்ப்பித்தார் மன்னரிடம். புருஷோத்தம் பாபாவின் வாதங்களில் உள்ள நேர்மையை உணர்ந்த மன்னர் கமிட்டி அறிக்கையை அப்பால் ஒதுக்கிவிட்டுக் கோவானியர் அனைவருக்கும் ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் என்ற பேதமின்றிச் சம உரிமைகள் வழங்க உத்தரவு பிறப்பித்தார். ஆக, 1840ஆம் ஆண்டிலேயே—''வாக்குரிமை'' என்ற சொல்லே பிரிட்டிஷ் இந்தியாவில் கேள்விப்படாத அதிசயமாக விளங்கிய நாட்களில் — போர்ச்சுகீசிய கோவாவில் மதச் சார்பின்றி அனைவருக்கும் வாக்குரிமைகள் வழங்கப்பட்டு மக்களிடம் ஜனநாயக உணர்ச்சிகள் பரவவும் வளரவும் வழி உண்டாகி யிருந்தது!

சிவனருட் செல்வர்



திருமுருக கிருபானந்த வாரியார்

41. நீரா? நெய்யா?

திருவாரூருக்குத் தெற்கில் திருத்துறைப் பூண்டி செல்லும் சாலையில் ஆறு கல் தொலைவில் ஏமப் பேறூர் என்ற தலம் உள்ளது. (இப்பொழுது இத்தலம் திருமப் பற்று என்று வழங்கப்படுகிறது.) இங்கு வாழ்வோர் பொய் கடிந்து, மெய்மையைக் கூறும் வேத நெறிப்படி நின்று புகழ் பெற்றவர்கள். அத்தலத்தின் திருவீதிகளில் தோரணங்கள் அழகாக விளங்கும். அந்தத் தோரணங்களின் இடையிடையே நறுமலர் மாலைகள் ஒழுங்காகக் கட்டப்பட்டிருக்கும். மேகங்கள் கடல் நீரை முகந்து வந்து உயர்ந்த மாட மாளிகைகள் மீது உலாவும். சோலைகளில் குளிர்ந்த நிழல் எப்போதும் இன்பம் தரும். பாக்குமரங்களில் வண்டுகள் இருந்து ஒலிக்கும். நிறைந்த நீர் வயல்களில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து அழகு செய்யும்.

அவ்வூரின் வயல்களில் விளைந்த வெண்மையான நெற் பயிர் பரந்த இடங்களிலே இடையிடையே ஒளிவிட்டுத் திகழும் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. முப்புரிநூல் அணிந்த வேதியர்கள் வேள்விச் சாலையில் அழகிய வேதிகை மீது வெண் மணலைப் பரப்பி, இடையிடையே செந்தீயை வளர்ப்பது போல் அவை காட்சியளிக்கின்றன.

பெருமை மிக்க அத்திருப்பதியில் சைவ நெறியில் ஒருமைப்பட்ட அந்தணர் குலத்திலே அவதரித்தவர் நமிநந்தியடிகள். அவர் சொல்லுலகம், பொருளுலகம் என்ற இரு உலகத்திலும் சிவபெருமானுடைய திருவடியை இடையறாது வாழ்த்தி வணங்கி வழிபட்டு வருவார். சத்திய மொழியாகிய வேதநூல்கள் கூறும் ஒழுக்கத்தால் வளர்க்கும் சிவந்த அழற் பிழம்பு போன்றவர். தூய திருநீற்றின் சார்பே மெய்ப்பொருள் என்று அறியும் துணிபுடையவர்.

நமிநந்தியடிகள் அடிக்கடி திருவாரூர் சென்று,



அடியார் இடர்களையும் புற்றிடங் கொண்ட புனிதரை வழிபடுவார். ஒரு நாள் திருவாரூர் சென்ற அடிகள், பூங்கோயிலில் புற்றிடங் கொண்ட திருமூல நாதரை நினைந்து, அணைந்து தாழ்ந்து, பணிந்து மகிழ்ந்து வெளியே வந்தார். திருவாரூர் கோயிலின் திருமதிலுக்கு அருகில் அரனெறி என்று ஒரு தனிக் கோயில் உண்டு. அக்கோயிலையும் வணங்க விரும்பினார் அடிகள். ஆகவே, அத்திருக் கோயிலுட் புகுந்து, நிறைந்த அன்பினால் கண்ணீர் சொரிந்து, மிகவும் பரிந்து தொழுதார், துதித்தார்.

அத்திருக்கோயிலில் விளக்குகள் பல ஏற்றி வழிபட வேண்டுமென்று விரும்பினார் அடிகள். அவர் இவ்வாறு எண்ணிய வேளையில் கதிரவன் மேற்கடலில் சாய்ந்து கொண்டிருந்தான். பொழுதுபோய் விட்டபடியால், ஆறு நாழிகை தொலைவில் உள்ள தமது ஊர் போய்த் திருவிளக்கு எரிக்க நெய் கொண்டு வருவதற்குப் போதிய நேரம் இல்லை என்பதைக் கண்டார். எனவே, கோயிலுக்கு வெளியே அருகில் இருந்த ஒரு வீட்டுக்குச் சென்று நெய் வேண்டுமெனக் கேட்டார். அவர் சென்றது ஒரு சமணருடைய வீடு. ''கையில் நெருப்பை ஏந்திய உங்கள் கடவுளுக்கு விளக்கு பஞ்சமாகி விட்டதோ? இங்கு நெய் கிடையாது. விளக்கு எரிக்க வேண்டும் என்ற விருப்பம் உமக்கு இருந்தால் தண்ணீரை விட்டு விளக்கை எரிய விடும்'' என்று இகழ்ந்து கூறிப் பரிகாசம் செய்தனர் அமணர்.

நமிநந்தியடிகள் தாங்க முடியாத வேதனையுடன் திருக்கோயிலுட் சென்று ''எந்தையே! அமணர் கூறிய ஏளன மொழிகளைக் கேட்பதற்கு அடியேன் என்ன பாவம் செய்தேனோ?'' என்று அழுது இறைவர் முன் வீழ்ந்தார்.

அப்பொழுது ஞான வானில் ஓர் இனிய திருவாக்கு ஒலித்தது. ''அன்பனே! வந்த கவலையை மாற்றுக! மாறாத விளக்குப் பணி செய்ய,





"இதோ இங்குள்ள குளத்து நீரை முகந்து கொண்டு வந்து எரிப்பாயாக" என்ற அருள் வாக்கு அந்திவண்ணர் திருவருளால் எழுந்தது.

எல்லையில்லாத மகிழ்ச்சி யடைந்த அடிகள் நல்ல நீர் நிறைந்த திருக்குளத்தில் இறங்கினார். ஐந்தெழுத்தை ஓதித் தண்ணீர் முகந்தார். முகந்த நீரை அரநெறிக் கோயிலில் கொண்டு வந்து, அகில உலகமும் அதிசயிக்க அகலில் திரியிட்டு விளக்கு ஏற்றினார். விளக்குகள் பரமமங்களமாகப் பிரகாசித்தன. கோயில் முழுவதும் மகிழ்ச்சியுடன் பலப் பல விளக்குகள் ஏற்றினார். தண்ணீரே நெய்யாக எரிவதைக்கண்ட அடியார்கள், "ஹர ஹர" என்று முழக்கம் செய்தனர்.

அமணர்கள் நாணித் தலைகுனிந்தனர்.

சோதி விளக்கொன் றேற்றுதலும்
சுடர்விட் டெழுந்த(து) அதுநோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார்
கோயில் அடைய விளக்கேற்றி
ஏதம் நினைந்த அருகந்தர்
எதிரே முதிரும் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு
நீரால் எரித்தார் நாடறிய

திருவிளக்குகள் விடியும்வரை எரிய வேண்டும் என்று எண்ணிய அடிகள், நீர் குறைகின்ற அகல்களில் எல்லாம் நிரம்பத் தண்ணீரை நிரப்பினார். அவர் தமது வீட்டில் நடுயாம வழிபாடு புரிவது வழக்கம். அந்த நியதி வழுவா திருக்கும் பொருட்டு, அவ்விரவிலேயே தமது வீடு சென்றார். வீடு சென்றதும் உம்பர் பரவும் நம்பரை நியதியுடன் பூசித்தார். உணவு உண்டு பள்ளி கொண்டார்.

பொழுது புலர்ந்தது. நமிநந்தி அடிகள் மீண்டும் திருவாரூரை யடைந்தார். அரனெறிக் கோயிலை வலம் வந்து வணங்கினார். கோயிலின் உள்ளும் புறத்தும் செய்யத் தக்க திருத்தொண்டுகளைப் பகல் முழுவதும் செய்தார்.

மாலை நேரம் வந்தது. நமிநந்தியடிகள் முன்போல் நீரால் விளக்குகள் எரித்தார். இவ்வாறு பல நாட்களும் பணி செய்து வந்தார். நற்பண்பு இல்லாத அமணர் அழிந்து ஒழிந்தனர்.

மன்னனுடைய ஆதரவினால், வீதி விடங்கப் பெருமானின் திருவிளையாடல்களையும், பங்குனி உத்தரப் பெரு விழாவையும் சிறப்பாக நடத்துவித்தார் நமிநந்தியடிகள்.

மணலி என்ற ஊர் திருவாரூருக்கு அருகில் உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை தியாகேசப் பெருமான் அங்கு எழுந்தருளுவது வழக்கம். அவ்வழக்கத்தின் படி தியாகேசர் ஒரு நாள் மணலிக்கு எழுந்தருளினார். எல்லாக் குடும்பத்தினரும் பிரிவு இன்றி ஒன்றுபட்டு எம்பிரானைச் சேவித்துக் கொண்டு சென்றார்கள். நமிநந்தியடிகளும் அவர்களுடன் கலந்து திருவோலக்கக் காட்சியில் இறைவரைக் கண்டு இன்புற்றார். மாலை நேரத்தில் தியாகேசப் பெருமான் மீண்டும் திருவாரூருக்குத் திரும்பிக் கோயிலுக்குள் புகுந்தருளினார்.

இறைவர் ஆலயத்தினுட் புகுந்தருளியபின், நமிநந்தியடிகள் தமது ஊராகிய ஏமப் பேறூர் வந்தார். வீட்டை அடைந்த அவர், வீட்டினுள் செல்லாது, இருள் நிறைந்த அந்த இரவில் வாயிற்கடையில் அயர்ந்து தூங்கி விட்டார். அவரது மனைவியார், வீட்டினுள்ளிருந்து வாயிற்கடைக்கு வந்தார். அங்கே தம் கணவனார் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

கணவனாரை நோக்கி, "ஏன் இப்படி இங்கே படுத்திருக்கின்றீர்கள்? வழக்கம் போல் உள்ளே வந்து நடு யாமத்தில் செய்யும் சிவபூசையைச் செய்து, ஓமத் தீ வளர்த்து, உணவு அருந்திப் பள்ளி கொள்ளுங்கள்" என்று அழைத்தார்.


"பெண்ணே! இன்று தியாகேசப் பெருமான் மணலிக்கு எழுந்தருளினார்.

அமெரிக்காவில் ஒவ்வொரு நாளும் இருபத்தாறு கோடி ரூபாய் மதிப்புள்ள டாலர் நோட்டுகள் கொளுத்தப்படுகின்றன. பயன்படாத, சேதமுற்ற பழைய நோட்டுகளைத்தான் இவ்வாறு தினமும் கொளுத்துகின்றனர். ஆண்டுதோறும் 6,750 கோடி ரூபாய் மதிப்புள்ள நோட்டுகள் சாம்பலாகின்றன.

தகவல்: வி. சம்பத் குமார்

ஆதாரம்: "அமிர்தபஜார் பத்திரிகா"

தினமும் கொளுத்தப்படும்



ரூபாய்
26,00,00,000


மிட்லண்ட், அகஸ்தியா, மகாலக்ஷ்மி மற்றும் தமிழ்நாடெங்கும்
பிப்ரவரி 24உ முதல்
மனோகர் பிக்சர்ஸ் (மதறாஸ்)
பாமா விஜயம்
நகைச் சுவை மிகுந்த சமூகச் சித்திரம்
கதை, வசனம், டைரக்ஷன்
K. பாலசந்தர்
இசை: M.S. விஸ்வநாதன்
தயாரிப்பு: M.S. காசி
ஜெமினி ரிலீஸ்

நமது
கலாசார
ஒழுக்கத்திற்குப்
புத்துயிரளிக்க
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா
வாசியுங்கள்

ஸ்ரீ அஹோபில மடத்தின்
தமிழ் மாதப்பத்திரிகை

இந்த நவ நாகரீக உலகத்தில் நம் சமூகமும் பண்பும் மாறிக்கொண்டே வருகிறது. இந்த சூழ்நிலையில் நமது பண்புமிக்க வாழ்வில் தொடர்ந்து சிரத்தை காட்ட வேண்டுமென்று உங்களுக்கும் விருப்பமிருக்குமல்லவா?

வேதம், உபநிஷதம் மற்றும் புராணங்களிலுள்ள கதைகளை அவ்வப்போது சொல்லி, நம் தாத்தா பாட்டிகள் நமக்கு உற்சாகமூட்டி, நமது கலாசார வாழ்க்கையை காத்து வந்தனர். அவர்கள் தற்போது நகர்புறங்களில் வசிக்காததால் நம் கலாசார வாழ்வும் மங்கி வருகிறது.

அந்த குறையை நீக்கவே ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா, மேன்மை தங்கிய ஸ்ரீ அஹோபில மடத்தின் ஆதரவில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. நம் குடும்பத்திலுள்ள பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வேதம், உபநிஷதம் மற்றும் புராணங்களிலுள்ள கதைகளை எளிய தமிழில் சொல்லி நன்மை பயக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் கீழ்க்கண்ட விசேஷ அம்சங்களுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மாதப் பத்திரிகையாக வெளி வந்துக் கொண்டிருக்கிறது.

*ஸ்ரீவிஷ்ணு புராணம்
*ஆழ்வார்கள், ஆசாரியர்களின் சரிதம்
*ஸ்தல புராணங்கள்
*பஞ்சதந்திரக் கதைகள்
*வேதம், புராண சிறுகதைகள்
*அழகிய சிங்கரின் அருள் மொழிகள்
*விசிஷ்டாத்வைதம் (ஆங்கிலம்)

இன்றே சந்தாதாரராக சேருங்கள்
ஒரு வருஷம் ரூ. 10. ஆறு மாதம் ரூ. 5
தனிபிரதி ரூ. 1



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
7, டாக்டர் ரங்காச்சாரி ரோட்
சென்னை-18



''எனக்கும் என் மனைவிக்கும் சண்டை. அதனாலே, நான் ரெண்டு நாளாக வீட்டில் உண்ணாவிரதமும், ஹோட்டலில் உண்ணும் விரதமும் பூண்டிருக்கிறேன்!''

அந்த நல் விழாவில் எல்லோரும் வர நானும் உடன் கலந்து சேவித்தேன். அதனால் என் தூய்மை குன்றிவிட்டது. ஆகவே, குளித்துத் தூய்மை செய்து கொண்டு மனைபுகுந்து சிவ பூசை செய்ய வேண்டும். குளிர்ந்த நீர் கொண்டு வா'' என்று கட்டளையிட்டார். கணவனார் கட்டளைப்படி தண்ணீர் கொண்டு வர அம்மையார் உள்ளே சென்றார்.

தியாகேசப் பெருமான் திருவருளாலோ அன்றி, காலை தொடங்கி மாலைவரை திருவிழாவில் நடந்து சேவித்ததால் ஏற்பட்ட அயர்வாலோ, மனைவியார் நீர் கொண்டு வருமுன் உறக்கம் வந்து அழுத்த, சிவமூர்த்தியின் திருவடியைச் சிந்தித்துத் துயில் புரிந்தார் அடிகள்.

பிறப்பு இறப்புக்களால் வரும் ஆசௌசம், மகளிர்க்கு வரும் தீண்டாமை முதலியவைகளால் ஆலயத்துக்குச் சென்று வழிபட முடியாத மக்கள் அனைவரும் சேவித்து உய்வு பெற இறைவர் திருவீதி உலா வருகின்றார். அவ்வாறு வரும் விழாவில் சேவிக்க வருவோர் அனைவரும் சிவனடியார்கள். அவர்களை வேறாக நினைத்தல் கூடாது என்பதை நமிநந்தியடிகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கருதிய கண்ணுதற் கடவுள், அடிகளாரின் கனவிலே வந்தருளி, ''அன்பனே! திருவாரூரில் பிறந்தார் அனைவரும் ஞான மறையோராய நமது கணங்களே. அதனை நாம் காட்ட நீ காண்பாயாக'' என்று அருளிச் செய்து மறைந்தருளினார்.

மேன்மை விளங்கும் திருவாரூர்
வீதி விடங்கப் பெருமான்தாம்
மான அன்பர் பூசனைக்கு
வருவார் போல வந்தருளி
"ஞான மறையோர் ஆரூர்ப்
பிறந்தார் எல்லாம் நம்கணங்கள்
ஆன பரிசு காண்பாய்"என்
றருளிச் செய்தங் கெதிரகன்றார்.


கனவு தெளிந்து எழுந்த அடிகளார் திடுக்கிட்டார். ''அந்தோ! திருவிழாவில் சேவித்து வந்த திருத்தொண்டர்களின் கலப்பினால் தூய்மை குன்றியது என்று குற்றம் நினைந்தேன். இறைவன் திருவருள் இதுவோ? 'உய்ந்தேன்' என்று எழுந்தபடியே உட்சென்றார். முழுகாமலே சிவபூசை செய்து நிவர்த்தார். இறைவர் அருளிய அருள் மொழியை மனைவியாருக்கும் உரைத்தார்.

விடியற்காலையில் அடிகளார் தமது ஊரினின்றும் திருவாரூருக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது திருவாரூரில் பிறந்து வாழும் எல்லோரும் சிவ சொரூபம் உடையவர்களாகவும், ஒளிப் பிழம்பாகவும் விளங்கும் அரிய காட்சியைக் கண்டார்; சிரமேற்கரமலரைக் கூப்பித் தொழுதார்; மண் மேல் வீழ்ந்து பணிந்தார்; மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். அவர் கண்ட தோற்றம் மாறிப் பழையபடியே நிகழவும் கண்டார். பரமபதியின் திருமுன் வீழ்ந்து, ''அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டினார். பின்னர், ஏமப் பேறூரை விடுத்துத் திருவாரூரையே தமது இருப்பிடமாகக் கொண்டு திருவாரூர் மேவும் தேவ தேவருடைய திருத் தொண்டு களைப் புரிந்து கொண்டிருந்தார். திருநீறும் கண்டிகையும் பூணயும் அடியவர்க்கு நியதியாகப் பலசிறப்புட்ட தொண்டுகள் புரிந்து, வேண்டுவன எல்லாம் நல்கி வந்தார். அதனால், திருநாவுக்கரசர் இத் திருவாளரை, ''தொண்டர்க்கு ஆணி'' என்று சிறப்பித்துப் பாடியருளினார்.

'' ஆராய்ந் தடித்தொண்ட ரானிப்பொ னாரூ
ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்தரம்
பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாதனடித் தொண்ட
னம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே''

பல காலம் இவ்வாறு சென்றபின் நமிநந்தியடிகள், தியாகேசப் பெருமானுடைய திருவடி நிழலில் விளங்கும் அருட்ஜோதியில் கலந்து பேரின்பப் பெரு வாழ்வு பெற்றார். (தொடரும்)

விரைந்து செல்லும் காருக்கு முன்னால் விழவிருக்கும் பணக்கார வனிதையைக் காப்பாற்றப் போனால் கிடைப்பது...



கார சோமாஸ்!

தோட்டக்கார விசுவநாதன்

ராமுவுக்குக் கோபம் கோபமாக வந்தது. வேணுவைவிட அவன் பல அம்சங்களில் சிறந்தவன். அழகிலும் சரி; படிப்பிலும் சரி; நடை தொடி பாவனைகளிலும் சரி; வேணு அவனைவிட எவ்வளவோ தாழ்ந்தவன்தான். அப்படியிருந்தும் அதிர்ஷ்ட தேவதை வேணுவையே நாடுவானேன் ?

அன்று சரசா காரில் மாட்டிக் கொள்ள இருந்த போது வேணுவும் ராமுவும் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். வேணு முந்திக் கொண்டு ஓடிப் போய் அவள் கையைப் பிடித்து இழுத்து அவளைக் காப்பாற்றினான். அவள் வேணுவின் தீரச் செயலை வாயாரப் புகழ்ந்தாள். தானும் அவளைக் காப்பாற்றியிருக்கக் கூடும்; அவளுக்குச் சமீபமாக வேணு இருந்ததால் அவன் முந்திக் கொண்டான் என்று ராமு எவ்வளவோ எடுத்துச் சொன்னான். அவளுக்கு அது புரிந்தால்தானே ! அவன் கோழையாம், வேணு தன்னிகரற்ற தீரனும். எப்படி? அது மட்டுமா? வேணுவை வீட்டுக்கு அழைத்துச் சென்று அவன் தீரப் பிரதாபங்களை ஒன்றுக்குப் பத்து மடங்காக வர்ணித்து, அவனைத்தான் கல்யாணம் கட்டிக்கொள்வேன் என்று பிடிவாதம் செய்து அவனையே திருமணமும் செய்து கொண்டாள்.

இன்று வேணு கொழுத்த பணக்காரன். புத்தம் புதிய காரிலே சரசாவோடு பவனி வருகிறான். ராமுவை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இதை நினைக்கும்போது ராமுவுக்குக் கோபம் பொங்கி எழாமல் என்ன செய்யும்?

தன் நண்பன் குமாரிடம் இதைப் பற்றி அவன் சொல்லி அழாத நாளே கிடையாது. குமார் எவ்வளவு ஆறுதல் சொல்லியும் ராமுவின் மனம் கொந்தளித்துக் கொண்டேயிருந்தது.

''குமார், என்றாவது நானும் ஒரு பணக்காரப் பெண்ணைக் காப்பாற்றி அவளையே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேனா இல்லையா பார்!'' என்று அவனிடம் ராமு கூறாத நாளும் கிடையாது. இப்படி இள நங்கையர்களைக் காப்பாற்றும் நோக்கத்தோடு அவன் நடமாடாத சாலை மதராசில் கிடையாது. ஆனால் அவன் அதிர்ஷ்டம் கிழவிகளும் குருடர்களும் காரில் மாட்டிக் கொள்ளப் பார்த்தார்களே தவிர ஒரு யுவதியாவது அவன் மீது கருணை வைத்துக் காரின் கீழே விழ முன் வரவில்லை. கொடுமையிலும் கொடுமை.

''ராமு, அதிர்ஷ்டத்தை நீ தேடிப் போனால் அது இன்னும் தொலைவில் போய்க் கொண்டே இருக்கும். அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வர வேண்டும். அதுவரை நீ பொறுத்திருக்க வேண்டும்'' என்று குமார் ஒரு நாள் அவன் நிலையைக் கண்டு இரங்கிப் புத்திமதி கூறினான். ராமு ஒருவாறு ஆறுதலடைந்து சாலைகளை முற்றுகையிடுவதை நிறுத்தலாம் என்ற முடிவுக்கு வந்தான். ஆனால் அந்த நேரம் பார்த்தா அந்தப் பாழாய்ப் போன வேணு புதுக் காரில் சரசாவோடு வரவேண்டும் ? அவர்களைப் பார்த்ததுதான் தாமதம், ராமுவுக்கு வயதுப் பெண்களைக் காப்பாற்றும் ஆர்வம் முன்பைவிட இரட்டிப்பாகக் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது. ஏதாவது கார் வராதா, ஒரு பணக்காரப் பெண் அதன் கீழே விழமாட்டாளா என்று ஏங்கியபடி சாலையே கதியென்று தவம் கிடக்க ஆரம்பித்தான் ராமு.

''ஏண்டா, இப்படிக் கிடந்து தவிக்கிறாய்? இந்த மாதிரி சுற்றுவதைவிடக் கடவுளை வேண்டிக் கொள். அவருக்காவது உன் மீது தயை பிறக்கட்டும்'' என்று ஆலோசனை கூறினான் குமார்.

உடனே ராமுவுக்குப் பக்திக் கண் திறந்தது. வடபழனியாண்டவனுக்கு வெள்ளிக்கிழமை தோறும் அர்ச்சனை செய்து, ''ஆண்டவனே, நானும் ஒரு பணக்காரப் பெண்ணைக் காப்பாற்றிக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அந்த வேணுப் பயலுக்கு நான் எந்த விதத்திலும் சோடையில்லை என்று நிரூபித்துக் காட்ட வேண்டும்'' என்று முறையிட ஆரம்பித்தான். ஆனால் இவன் அறைகூவலுக்கு ஆண்டவன் செவி சாய்ப்பதாகக் காணவில்லை.

''குமார்! ஆண்டவன் ஏன் இப்படிச் சதி செய்கிறார் என்று புரியவில்லை. இந்த ஊரிலே பணக்காரப் பெண்களே இல்லாமல் போய் விட்டார்களா ? அல்லது கார்கள் தான் இல்லையா? கார்க்காரர்கள் பயந்து ஜாக்கிரதையாக ஓட்டலாம் என்று வைத்துக் கொண்டாலும், டாக்ஸிகளுக்கும், லாரிகளுக்கும்கூடவா பஞ்சம் ஏற்பட்டுவிட்டது? ஆண்டவன் மனசு வைத்தால் ஒரு பணக்காரப் பெண்ணை ஓர் 'ஆட்டோ ரிக்ஷா'வின் கீழாவது தள்ளலாமே! நான் அவளைக் காப்பாற்றிக் கல்யாணம் செய்து கொள்வேனே !'' என்று விசித்துக் கொண்டான் ராமு குமாரிடம்.



இதற்கு என்ன பதில் சொல்வது என்று தோன்ற வில்லை கருமாருக்கு. ஒருவாறு சமாளித்த படி, "ராமு! ஒரு பெண்ணைக் காரின் கீழே தான் தள்ள வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பதைப் பார்த்துத்தான் ஆண்டவன் அஞ்சுகிருர் என்று நினைக்கிறேன். உன் விருப்பப்படி அவளைக் காரின் கீழே விழ வைக்கிருர் என்று வைத்துக் கொள்வோம். அவளைக் காப்பாற்றும் தைரியம் உனக்கு அச்சமயத்தில் வராமல் போனல் கார் அவள் மேல் ஏறி விடுமல்லவா? அநியாயமாக ஒரு பெண்ணைக் கொலை செய்த பாவம் ஆண்டவனைச் சூழ்ந்து கொள்ளாதா?" என்ருன் கருமார்.

"காரின் கீழே தள்ளித்தான் பார்க்கட்டுமே, நான் காப்பாற்றுகிறேனு இல்லையா என்று தெரியும்!" என்ருன் ராமு.

"ஏண்டா, காப்பாற்றும் வக்கு உனக்கிருந்தால் சரசாவையே காப்பாற்றியிருக்கலாமே!" என்ருன் கருமார்.

"அதுவும் உண்மைதான். என் உயிருக்கு ஆபத்தில்லாமல் அவள் உயிரைக் காப்பாற்றும் ஓர் எளிய வழியை ஆண்டவன் யோசிக்கிருர் போலிருக்கிறது. கருமார்! பாங்கியில் இரண்டாயிரம் ரூபாய் போட்டிருக்கிறேன். அதை வாங்கிப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைக்கப் போகிறேன். எந்த நிமிஷம் ஆண்டவன் என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிருறே அன்றே அதைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப் போகிறேன்!" என்ருன் ராமு.

சொன்னதைச் செய்கையில் காட்ட இரண்டாயிரம் ரூபாயைப் பாங்கியிலிருந்து எடுத்து வந்து தன் பெட்டியில் வைத்துப் பூட்டிஞன்.

அன்று பகல் உணவருந்திவிட்டுச் சாய்வுநாற்காலியில் அமர்ந்துகொண்டவாறே உறங்கலாஞன் ராமு.

டெலிபோன் மணி அடித்தது. தூக்கக் கலக்கத்தோடு ரிஸீவரை எடுத்து ''ஹலோ!'' என்றான் ராமு கொட்டாவி கலந்தபடி.

''நல்ல காலம். வீட்டில் இருக்கிறீர்கள். உடனே புறப்பட்டு வரவேண்டும்'' என்று ஓர் இளநங்கையின் குரல் வெகு பதற்றத்தோடு ஒலித்தது.

அந்தக் குரலில்தான் என்ன இனிமை! தேவகானம் போலல்லவா இருக்கிறது! ஆனால் தன்னைச் சுந்தர் என்கிறாளே! தான் சுந்தர் இல்லை என்று சொன்னாலும் ஒரு வேளை டெலிபோனைப் போட்டென்று வைத்துவிடுவாளோ? ஒரு கணம் திகைத்தான் ராமு.

''என்ன சுந்தர் பதில் இல்லை?'' என்றாள் அவள்.

''நான் வந்து.... அதாவது....'' என்று இழுத்தான் ராமு, தான் சுந்தர் இல்லை என்று சொல்லத் தைரியம் வராதவனாக.

''என் உயிருக்கு ஆபத்து சுந்தர். உடனே புறப்பட்டு வாருங்கள். நாச்சியப்பன் தெரு. நாற்பதாம் நம்பர் வீட்டில் ஒரு மிட்டாய்க் கடை இருக்கிறது. அந்த மிட்டாய் வியாபாரியிடம் கார ஸோமாஸ் வேண்டும் என்று கேளுங்கள். உங்களை வீட்டுக்குள்ளே அனுமதிப்பார். என்னைச் சந்திக்கலாம்!'' என்றாள் அவள்.

''கார ஸோமாஸா!'' என்றான் ராமு மிகுந்த வியப்புடன்.

''ரகசிய சந்திப்புக்கு அந்த வியாபாரி இடம் தருவது வழக்கம். கார ஸோமாஸ் என்று யார் சொல்கிறார்களோ அவர்களை மட்டும் உள்ளே அனுப்புவான். அதனால் கார ஸோமாஸை மறக்காதீர்கள். மாணிக்கம் எந்த நிமிஷமும் வரக் கூடும். அதனால் தாமதிக்காமல் உடனே புறப்பட்டு வாருங்கள்!'' என்று கூறி டெலிபோனை வைத்து விட்டாள் அம்மங்கை.

ராமுவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன்னை நேரில் பார்த்துத் தான் சுந்தர் அல்ல என்று தெரிந்ததும் அவள் தன்னிடம் எப்படி நடந்து கொள்வாளோ என்ற அச்சம் வேறு. ஆபத்தில் இருக்கிறாள். சுந்தர்தான் வந்து காப்பாற்ற வேண்டும் என்று இருக்கிறதா, என்ன? தான் காப்பாற்றினால் அவள் தன்னையே மணக்கக்கூடும் அல்லவா?

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ராமு நல்ல உடை அணிந்தான். ஒரு டாக்ஸியில் ஏறி நாச்சியப்பன் தெருவை விரைவில் அடைந்து டாக்ஸிக்காரனிடம் பத்து ரூபாய்த் தாளை நீட்டினான். ''சில்லறை இல்லை சார்!'' என்றான் டாக்ஸிக்காரன். ''மீதியை நீயே வைத்துக் கொள்!'' என்றான் ராமு. திகைப்புடன் நகர்ந்தான் டாக்ஸிக்காரன்.

மிட்டாய்க் கடைக்காரன், ''வாங்க சார், என்ன வேண்டும்?'' என்று வினயமாகக் கேட்டான் ராமுவை.

அந்தக் கடையில் எல்லாம் இனிப்புப் பண்டங்களே இருந்தன. கார தினுசுகள் ஒன்றுமே இல்லை. அப்படி இருக்கும் போது காரஸோமாஸ் வேண்டும் என்று எப்படிக் கேட்பது என்று தயங்கிய ராமு, ''லட்டு என்ன விலை?'' என்றான்.

''கிலோ பன்னிரண்டு ரூபாய். அசல் நெய். ரெண்டு கிலோ தரட்டுமா?'' என்றான் கடைக்காரன்.

''அரைக் கிலோ போதும்'' என்றான் ராமு, விலை கேட்டு விட்டு வாங்காவிட்டால் அவன் என்ன நினைப்பானோ என்று நினைத்து. கார ஸோமாஸைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதற்குள் மேலும் ஒரு கிலோ பாதாம் ஹல்வா, கால் கிலோ காசி ஹல்வா, ஒரு கிலோ ஜிலேபி, அரைக் கிலோ டில்லி பாதுஷா இவைகளைப் பொட்டலம் கட்டி நாற்பத்தைந்து ரூபாய் பெற்றுக் கொண்டு விட்டான் வியாபாரி.

''எல்லாம் ஒரே இனிப்பாக இருக்கிறதே, இவைகளுக்குத் துணையாகக் காரஸோமாஸ் இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்'' என்றான் ராமு, சற்றுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு.

''என்ன சொன்னீர்கள்?'' என்றான் வியாபாரி.

'' ஒன்றுமில்லை. காரஸோமாஸ்தான் வேண்டும். உங்களைக் கேட்டால் கிடைக்கும் என்று ஒருவர் சொன்னார்'' என்றான் ராமு.

''இதை முந்தியே சொல்லியிருக்கலாமே, உள்ளே போங்கள்'' என்றான் வியாபாரி முக மலர்ச்சியோடு.

தூக்க முடியாமல் இனிப்புப் பொட்டலங்களைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் ராமு.

மிக நவநாகரிகமாய் உடையணிந்த நங்கை ஒருத்தி இவனைக் கண்டதும் புன்முறுவல் பூத்தவண்ணம் விரைந்து வந்து அவன் கைகளைப் பற்றி, ''என்ன சுந்தர்! ஏன் இவ்வளவு தாமதம்?'' என்றாள் கொஞ்சியபடி.

ராமுவுக்கு உடலெல்லாம் குபீர் என்று வியர்த்தது. ஒரு மங்கை அவனைத் தொட்டுப் பேசியது இதுதான் முதல் தடவை.

அவள் மிக அழகாக இருந்தாள். அவள் அணிந்திருந்த வைர நகைகள் 'ஜிலுஜிலு' என்று அவன் கண்களைப் பறித்தன. வடபழனியாண்டவனை மனதார வாழ்த்தியபடி அவளிடம் பேச யத்தனித்தான். ஆனால் என்ன பேசுவதென்று தெரியவில்லை.

''என்ன சுந்தர்? ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள்?'' என்றாள் அவள் அவன் நெற்றி வியர்வையைத் துடைத்தபடி.

தன்னைப் பார்த்த பிறகும் அவள் தன்னைச் சுந்தர் என்று அழைப்பது அவனுக்கு வியப்பாக இருந்தது.

''நான்வந்து...அதாவது....நீங்கள்வந்து... அதாவது ஒன்றும் இல்லை'' என்றான் ராமு.

''ஏன் சுந்தர் இப்படி இருக்கிறீர்கள்? அந்த முரடன் மாணிக்கத்திடமிருந்து தப்பி வர நான் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? அவன் இங்கு வந்தாலும் வரக்கூடும்'' என்றாள் பதற்றத்தோடு.

''வந்து பார்க்கட்டுமே, அப்புறம் தெரியும்'' என்றான் ராமு, அவள் தன் தைரியத்தை மெச்ச வேண்டும் என்ற நோக்கத்தோடு.

''மாணிக்கத்தை நீங்கள் பார்த்ததில்லை சுந்தர். அதனால்தான் இப்படிப் பேசுகிறீர்கள். போன வாரம் இரண்டு மல் யுத்தக்காரர்களை மல்லாக்காகக் கிடத்தி அவர்கள் முட்டி எலும்

யைத் தன் கையால் குத்திக் குத்திப் பொடிப் பொடியாக்கி விட்டான் தெரியுமா?'' என்று கூறினான் அவன். ராமுவுக்கு உள்ளூற உதறல் எடுத்தது.

''எந்த நிமிஷமும் மாணிக்கம் வந்து விடலாம். அதனால் இருவரும் ஊரைவிட்டே ஓடி விட வேண்டும்'' என்றாள் அம்மங்கை.

''அதுதான் நல்ல முடிவு.... ஆனால்...'' என்று இழுத்தான் ராமு, தான் சுந்தர் இல்லை என்று தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு.

''போதிய பணம் இல்லை என்ற பயமா? அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.... இதோ, இந்தப் பெட்டியில் ஐம்பதினாயிரம் ரூபாய் இருக்கிறது'' என்று தான் கொண்டு வந்திருந்த சிறிய பெட்டி ஒன்றைக் காட்டினாள். ''என் நகைகள் ஓர் ஐம்பதினாயிரத்துக்கு விலை போகும்'' என்றாள் அவள்.

''பழனியாண்டவா ! இவ்வளவு பெரிய உதவியை நீ எனக்குச் செய்வாய் என்று நான் கனவிலும் கருதவில்லை. நாங்கள் தப்பித்து ஓடும் வரை அந்த மாணிக்கத்தை இங்கே வராமல் செய்யப்பா'' என்று வேண்டிக் கொண்டான் ராமு.

வெளியே காலடிச் சத்தம் கேட்டது. ராமுவின் இதயம் வேகமாகத் துடித்தது.

''அதோ, மாணிக்கம்தான் வருகிறான் போலிருக்கிறது. உங்களிடம் கத்தியிருக்கிறதா? இல்லையா? இதோ என்னிடம் இருக்கிறது. ஓடிப் போய் ஒரே குத்தாகக் குத்தி விடுங்கள்'' என்று கத்தியைப் பரபரப்பாக எடுத்து அவனிடம் கொடுத்தாள் அம்மங்கை.

''கொலையா செய்ய வேண்டும்? இதை விடக் 'காரே' பரவாயில்லை போலிருக்கிறதே!'' என்றான் ராமு நீட்டிய கத்தியைப் பற்றியவனாக, மலேரியாக் குரலில்.

''காரா? என்ன சுந்தர் இது! யோசிக்கிறீர்கள். அதோ வந்து விட்டான். குத்தி விடுங்கள்!'' என்றாள் பதற்றத்தோடு.

இதற்குள் காலடிச் சத்தம் மனித உருவெடுத்து அவர்கள் அறைக்குள் நுழைந்தது.

துப்பாக்கியும் கையுமாக அவர்கள் எதிரில் ஒரு போலீஸ் அதிகாரி நின்றுகொண்டிருப்பதைக் கண்டான் ராமு.

''இவரா மாணிக்கம்?'' என்றான் ராமு, அதிர்ச்சி மேலிட்டவனாக.

''இவரில்லை சுந்தர்'' என்றாள் அம்மங்கை ராமுவின் பின்புறமாகப் போய் நின்றபடி.

''கத்தியைக் கீழே போடு. இல்லாவிட்டால் சுட்டுவிடுவேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

உயர்த்திய கத்தியைத் தணிக்காமல் தான் நின்றுகொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்த ராமு பொட்டென்று கத்தியைக் கீழே போட்டான்.

''சுந்தர்! மாணிக்கத்தைக் கொலை செய்ததற்காக உங்களை அரெஸ்ட் செய்கிறேன்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''மாணிக்கம் இறந்து விட்டானா?'' என்று சந்தோஷமாகப் பெருமூச்சு விட்டாள் அம்மங்கை.

''என்ன நாடகமாடுகிறாய், ராணி ! சுந்தருக்கு உடந்தையாக இருந்த மாணிக்கத்தைக் கொலை செய்ததற்காக உன்னையும் கைது செய்கிறேன்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''நான் சார்.... வந்து.... நான் சுந்தர் இல்லை சார். இவள் யாரென்றே எனக்குத் தெரியாது'' என்றான் ராமு விலவிலத்தவனாக.

''யாரிடம் கதை அளக்கிறாய்? வம்பு செய்யாமல் என்னுடன் வா'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''என்ன ராணி இது?'' என்றான் ராமு.

''இவளைத்தான் தெரியாது என்றாயே, பிறகு இவ்வளவு பரிவுடன் ராணி என்று அழைக்கிறாயே?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''நான் சார்.... அதாவது இவள் சார்... இல்லை சார்.... அதாவது நான் இங்கே வந்த பிறகுதான் எனக்கு இவளைத் தெரியும். இல்லையா ராணி?'' என்றான் ராமு.

''சுந்தர்! நான் டெலிபோன்....'' என்று அவள் வாக்கியத்தை முடிக்குமுன்பு இடைமறித்து ராமு, ''ஐயோ, நான் சுந்தர் இல்லையே !'' என்றான்.

''இதென்ன பார்சல்?'' என்றபடி இன்ஸ்பெக்டர் ராமு வாங்கி வந்த இன்பண்டப் பார்சலைப் பிரித்தார். ''அடடே, ஒரே இனிப்புப் பதார்த்தங்கள். மாணிக்கத்தைக் கொலை செய்ததைக் கொண்டாட இனிப்பு பரிமாறிக் கொள்கிறீர்களா?'' என்று குத்தலாகக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

''முதலிலேயே காரணமாமல் கேட்க வெட்கமாக இருந்தது சார். அதனால் இதெல்லாம் வாங்க வேண்டி வந்தது.''

''கார சோமாஸா?''

''அதெல்லாம் பெரிய கதை சார் !'' என்றான் ராமு.

''எனக்கு நேரமாகிறது. என்னோடு வந்து கொண்டே கதையை ஜோடிக்கலாம். புறப்படுங்கள்!'' என்று இன்ஸ்பெக்டர் விரட்டினார்.

''நீங்கள் சுந்தர் இல்லை என்று அப்போதே ஏன் சொல்லவில்லை?'' என்றாள் ராணி ராமுவைப் பார்த்து.

''என்னை எங்கே சொல்ல விட்டாய் ?'' என்று எரிந்து விழுந்தான் ராமு.

ஊழலும் நீரும் ஒன்றுகும்!

''ஊழல் என்பது தண்ணீரைப்போல, மேலிடத்திலிருந்துதான் கீழிடத்துக்குச் செல்லுகிறது.''

— பால்ராஜ் மதோக் (ஜனசங்கத் தலைவர்)

ஆதாரம்: நிம்மதி

தகவல்: எறும்பு

"இவன் சுந்தர் இல்லை என்று இதற்கு முன் தெரியாது என்கிறாயா ராணி?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"தெரியாது சார்!" என்றாள் ராணி.

"அதாவது இவன் சுந்தர் இல்லை என்று சாதித்து விட்டால் நீயும் இவனுமாகச் சேர்ந்து மாணிக்கத்தைக் கொலை செய்ததாக 'ரூஜு' ஆகாது என்று நினைத்து இப்படிக் கதையை ஜோடிக்கிறாயா? சரி, புறப்படுங்கள்" என்று விரட்டினார் இன்ஸ்பெக்டர்.

வேறு வழியின்றி இருவரும் வெளியே வந்து காரில் ஏறினார்கள். இன்ஸ்பெக்டர் முன்ஸீட்டில் அமர்ந்தார். கான்ஸ்டபிள் காரை ஓட்டிச் சென்றான்.

"நான் சுந்தர் இல்லை என்று தெரிந்தும் என்னைச் 'சுந்தர் சுந்தர்' என்று சொல்லி ஏன் கழுத்தை இப்படி அறுத்தாய்?" என்றான் ராமு அடித்தொண்டையில்.

"நான் சத்தியமாகச் சுந்தரைப் பார்த்தது கிடையாது. என் சிநேகிதி சகுந்தலாவுக்குச் சுந்தர் என்று ஓர் அண்ணன் இருக்கிறாராம். அவர் இக்கட்டான நிலையில் அகப்பட்டுக் கொண்ட பல பெண்களைக் காப்பாற்றியிருக்கிறாராம். சகுந்தலா சுந்தரின் டெலிபோன் நம்பரைக் கொடுத்து ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் அவருக்கு டெலிபோன் செய்யச் சொன்னாள். மாணிக்கத்திடம் அகப்பட்டுக் கொள்ளவே சுந்தர் நினைவு வந்தது. உடனே 72223க்கு டெலிபோன் செய்தேன்" என்றாள்.

"என் நம்பர் 73332 ஆயிற்றே. எனக்கு ஏன் டெலிபோன் செய்து இப்படிச் சித்திரவதை செய்தாய்?" என்று கடிந்தான் ராமு.

"என் மனக் குழப்பத்தில் 72223க்குப் பதிலாக 73332க்குத் தவறுதலாக 'டயல்' செய்தேன் போலிருக்கிறது!" என்றாள்.

"நாசமாய்ப் போனாய்!" என்று ஆசீர் வதித்தான் ராமு.

"என்ன சுந்தர்? என்ன ரகசியம்? வேறு ஏதாவது திட்டம் போட்டுப் போலீசை ஏமாற்றப் பார்க்கிறீர்களா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இந்த மகாபாவி சுந்தருக்கு டெலிபோன் செய்வதாக நினைத்துக் கொண்டு தவறுதலாக எனக்குச் செய்து விட்டாள். என் பெயர் ராமு. நான் 110, வினைதீர்த்த பிள்ளையார் கோவில் தெருவில் இருக்கிறேன். இன்றுதான் பாங்கிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வாங்கினேன். இதோ பாஸ் புக். அதில் என் பெயர் இருக்கிறது. பாருங்கள்" என்று பாஸ்புஸ்தகத்தை இன்ஸ்பெக்டரிடம் தந்தான் ராமு.

புஸ்தகத்தைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். "இந்தப் பாஸ் புஸ்தகம் உன்னுடையது என்று எனக்கு எப்படித் தெரியும்? இதை ராமு என்பவரிடமிருந்து நீ ஜேப்படி செய்திருக்கலாமல்லவா?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர், பாஸ் புத்தகத்தை அவனிடம் திருப்பித் தந்தபடி.

"என் புஸ்தகத்தை நானே எதற்கு சார், ஜேப்படி செய்ய வேண்டும்?"

"சரி, இப்போது நாம் திருவல்லிக்கேணியில் போய்க் கொண்டிருக்கிறோம். இங்கே உங்களுக்குத் தெரிந்த நண்பர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"என் சிநேகிதன் குமார், 210 பிள்ளையார் கோவில் தெருவில் இருக்கிறான் சார்!" என்றான் ராமு ஆத்திரத்தோடு.

"அப்படியானால் அந்த வீட்டின் முன் வண்டியை நிறுத்தச் சொல்கிறேன். காரில் இருந்தபடியே அவரைக் கூப்பிடுங்கள். உங்கள் குரலைக் கேட்டு உங்களை அவர் அடையாளம் பிடித்து இறங்கி வந்து உங்களோடு பேசட்டும். உங்களை விட்டு விடுகிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

ராமு சம்மதித்தான். கார் குமார் வீட்டு வாசலண்டை நிறுத்தப்பட்டது. கார் தீப் பிடித்துத் தான் அதில் சிக்கிக் கொண்டு கத்துபவன் போல் ராமு, "குமார்! குமார்!" என்று கூவினான்.

வீட்டின் கதவைத் திறந்து கொண்டு குமார் வெளியே வந்து வண்டியில் இருக்கும் ராமுவைப் பார்த்தான். "டேய், ராமு! என்னடா ஆயிற்று? இது என்ன போலீஸ் இன்ஸ்பெக்டர் சகிதம் வந்திருக்கிறாய்? இவர்கள் யார்?" என்று கேட்டான் குமார் ராணியைச் சுட்டிக்காட்டி.

அவனுக்குப் பதில் சொல்லாமல் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "பார்த்தீர்களா, சார். இப்போது நான் ராமு என்று நம்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"சரி, நீங்கள் போகலாம். ஆனால் நாங்கள் சொல்லும் வரை நீங்கள் ஊரை விட்டுப் போகக் கூடாது!" என்று கூறியபடி காரை ஓட்டிச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

ராமு நடந்த விஷயங்களைப் பற்றி ஆதியோடந்தமாகக் குமாரிடம் சொன்னான். "பணக்காரப் பெண்ணைக் காப்பாற்றிக் கல்யாணம் செய்து கொண்டது போதுமப்பா. இனி எனக்கு அந்த ஆசையே இல்லை. முதல் வேலையாக அந்த இரண்டாயிரம் ரூபாயைப் பாங்கியில் கட்டி விடப் போகிறேன்" என்று சொன்னான் ராமு.

குமாரின் வீட்டில் உணவருந்திய பிறகு தன் வீடு திரும்பினான் ராமு.

தன் வீட்டில் நுழையும் போது டெலிபோன் மணி அடித்தபடி இருந்தது. ரிஸீவரை எடுத்து, "ஹலோ!" என்றான் ராமு.

"நான்தான் ராணி" என்ற பதில் வந்தது.

"ராணியா? போலீஸில் உன்னை விட்டு விட்டார்களா?" என்றான் ஆச்சரியத்தோடு.

"கார சோமாஸ் எப்படி இருந்தது?" என்றாள் ராணி.

"கார சோமாஸா?" என்று கேட்டான் ராமு ஒன்றும் புரியாமல்.

"ஆமாம், நானும் இன்ஸ்பெக்டர் போல வந்த என் அண்ணனுமாக உங்களை ஏமாற்றியதற்கு என்னை மன்னிக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் பெட்டியிலிருந்த இரண்டாயிரம் ரூபாய் எங்களுக்குக் கிடைத்திருக்காது!" என்று டெலிபோனை வைத்து விட்டாள்.

அதிர்ச்சி அடைந்த ராமு, பணம் வைத்திருந்த பெட்டியை ஆத்திரத்தோடு திறந்தான். கார சோமாஸ் ஒன்று அவன் கண்களை உறுத்தியது!

இளமேனியருக்கு இணங்கிய உறவு பியர்ஸ்...













இப்போது, புதிய புள்ளிக்கோல மேலுறையோடு உமக்கே!

லின்டாஸ்-PS. 158-140 TM

மென்மை கொஞ்சும் தூய கிளிசரின் சோப்

பச்சிள மேனிக்கும் இணங்கிய மென்மையுள்ளது பியர்ஸ். வரண்டிடாமல் உங்கள் சருமத்தை இளங்கொழுந்து போல் புதுமையோடு போற்றுவது பியர்ஸ் சோப்பிலுள்ள கிளிசரின். தூய்மையானது பியர்ஸ்...மாணிக்கம் போல் படிகத் தன்மை படைத்தது. உங்கள் மேனியிது இளமை கொஞ்சிடவே: பியர்ஸ்


தன் தூய்மையைக் கண்கூடாக உணர்த்துவது பியர்ஸ்

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு

கடைசிவரை யாரோ...!

துருக்கியில் தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்ற கைதிகளைத் தேற்றுவதற்காகச் சில ஆட்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் வேலை அந்தக் கைதிகள் தூக்குமேடை ஏறும் வரை அவர்கள் கூடவேயிருந்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லி இறப்பதற்கு அவர்களைத் தயார் செய்ய வேண்டியது. இதற்காகும் செலவை அந்தக் கைதிகளின் உறவினர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். உறவினர்களின் பண வசதிக்கும், அந்தஸ்துக்கும் தக்கபடி ஒன்றுக்கு மேற்பட்ட இத்தகைய ஆறுதலாளர்கள் நியமிக்கப்படுவதுண்டு.


— ''அணி''



டிஸ்னி ஒப்புக்கொண்ட உண்மை

அமெரிக்காவில் உள்ள ''பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம்'' தன் நூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போது, இனி ஒவ்வொரு நூற்றாண்டு விழாவிலும் பிராணிகள் நலத்துக்காகப் பாடுபடும் ஒருவருக்குப் பதக்கம் அளித்துச் சிறப்பிப்பது எனத் தீர்மானித்தது. அதன்படி இந்த ஆண்டில் கொடுக்கப்பட்ட முதல் தங்கப் பதக்கம், ''மிக்கி மௌஸ்'', ''டொனல்ட் டக்'' போன்ற சலனப் படப் பிராணிகளைச் சிருஷ்டி செய்தவரும், அண்மையில் காலம் சென்றவருமான ''வால்ட் டிஸ்னி''க்குக் கிடைத்தது. பதக்கத்தைப் பெற்றுக் கொள்ளும்போது வால்ட் டிஸ்னி கூறியது: ''நான் சிறுவனாக இருந்தபோது ஓர் ஆந்தையைப் பிடித்தேன். அது என் கையைக் கீறி விட்டது. கோபத்தில் அதைக் கீழே போட்டு மிதித்து விட்டேன். இப்பொழுதுகூட அந்த ஆந்தை அலறுவதுபோல் கனவு கண்டு பயந்து நள்ளிரவில் விழித்துக் கொள்கிறேன்.''

—''அ. ரா.''



என்ன பொருத்தம்?

தாங்கள் கட்டியிருக்கும் புடவை நிறத்திலேயே பெண்கள் செருப்பு, சோளி முதலியன அணிவதையும், கைப்பை கொண்டு செல்வதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் அமெரிக்காவில் பாஸ்டன் நகர ஹோட்டல் ஒன்றில் பெண்களின் உடை என்ன நிறத்தில் இருக்கிறதோ, அதே நிறத்தில் சோடா, குளிர்பான வகைகள் முதலியவற்றைப் பரிமாறுகிறார்களாம்!

—''அணி''

பேனா வேட்டை!

கவியரசர் ரவீந்திரநாத் தாகூரிடம் கையெழுத்து வேட்டைக்காக வருபவர்கள், ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்வதற்கென்று அவர் பேனாவையும் தட்டிக் கொண்டு போய்விடுவதுண்டு. இப்படிப் பல பேனாக்களை இழந்துவிட்ட கவிஞர், ஒரு தடவை கையெழுத்துக் கோரி வந்த ஒருவருக்குக் கீழ்க்கண்ட கவிதையை (வங்க மொழியில்) எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாராம்:



"எல்லாப் பறவைகளும்தான் மீனைத் தின்கின்றன; ஆனால் பாவம் மீன்கொத்திப் பறவை மட்டும்தான் குற்றம் சாட்டப்படுகிறது!

''எல்லோரும் பேனா இரவல் வாங்குகிறார்கள். ஆனால் நான்மட்டும்தான் காசு கொடுத்துப் பேனா வாங்க வேண்டியிருக்கிறது!''



ஆதாரம்: ''ஸ்டேட்ஸ்மன்'' தகவல்: துராம்

சூதும், வாதும்!

''சூதாட்டத்தில் பழகிப் போனவன் 'நிச்சயமாக இன்று நான் ஜெயித்து விடுவேன்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு சூதாடும் இடத்துக்கு விரைந்து செல்கிறான். சூதாட்டக் காய்களைக் கண்டவுடன் அவனுடைய ஆவல் அதிகரிக்கிறது. சக சூதாடிகள் நெருப்பிலே நெய்யைப்போல அவன் ஆர்வத்தை வளர்க்கின்றனர். வெகு விரைவில் அவன் மனைவி வறுமையில் தள்ளப்படுகிறாள்; சொல்லொணாத் துன்பங்களை அநுபவிக்கிறாள். வயதான அவன் தாய் கவனிப்பாரற்றுத் திரிகிறாள். அவனோ தான் பட்ட கடன்களைக் கொடுக்க முடியாமல் கடன்காரர் கண்ணில் படாமல் மறைய முயல்கிறான்.......''

சூதாட்டத்தின் கொடுமை இப்படி உருக்கமாக வர்ணிக்கப்படுவது எங்கே தெரியுமா - ரிக்வேதத்தில்!

ஆதாரம்: 'மெயில்' கட்டுரை
தகவல்: கோடை



பசு கண்டு பிடித்த மருந்து!

இங்கிலாந்தில் எப்சம் என்ற ஊரில் மாடு மேய்ப்பவன் ஒருவன் தன் பசுவை ஒரு பழைய கிணற்றடிக்குத் தண்ணீர் காட்டுவதற்காக ஓட்டிச் சென்றான். ஆனால் அந்தக் கிணற்றில் இறைத்துக் கொடுத்த நீரைக் குடிக்கப் பசு மறுத்து விட்டது. அந்தத் தண்ணீரை அவன் குடித்துப் பார்த்த போது அது ஒரே கசப்பாக இருந்தது. அதில் ஏதாவது மருந்துச் சத்து இருக்க வேண்டும் என்று நினைத்து ஊர்ப் பெரியவர்களிடம் விஷயத்தைத் தெரிவித்தான். தண்ணீர் கடைசியாகப் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பப்பட்டது.



அந்தத் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டதுதான் இன்றும் உபயோகத்திலிருக்கும் பேதி மருந்தான ''எப்சம் உப்பு'' என்பது.

—'மலிக்'

ஒரு நிமிடத்தில் கோடிக்கணக்கான ரூபாய் இலாபம்!

''சோவியத் யூனியனில், ஒரு நிமிடத்தில் 180 டன் உருக்கும், 10 இலட்சம் கிலோவாட் மணி மின்விசையும், 70 டன் செயற்கை உரமும், 1000 செருப்புக்களும் உற்பத்தியாகின்றன.

''ஒரு ஷிப்டின்போது, ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு நிமிடத்தை வீணாக்கினால், நம் நாட்டிற்கு ஓராண்டில் கோடிக்கணக்கான ரூபிள் நஷ்டம் உண்டாகிறது. இந்தப் பணத்தால், 10,000 குடியிருப்புக்களைக் கட்டி விடலாம்! எனவே, கட்சி ஸ்தாபனங்கள் வேலை நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் பிரச்னையில் அதிக கவனம் செலுத்த வேண்டும்'' என்று எழுதுகிறது. 'பிராவ்தா'

இது ருஷ்ய நாட்டுக்கு மட்டுமென்ன, உலகிலுள்ள ஒவ்வொரு தேசத்துக்குமே சிறந்த அறிவுரைதான். 'சோம்பலுக்கு இடம் கொடேல்' என்று சும்மாவா சொன்னார்கள்!

தகப்பன்சாமி!



ஒரே பொருளைப் பற்றி இரு விஞ்ஞானிகள் நேர் எதிர் மாறான உண்மைகளைக் கண்டுபிடித்து, இருவருமே நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

ஜே. ஜே. தாம்ஸன் என்ற விஞ்ஞானி தமது ஆராய்ச்சியின் மூலம், ''மின் அணு''க்கள் என்பவை சிறு சிறு துணுக்குகள் என்று கண்டு, அதற்கான நோபல் பரிசை 1906ஆம் ஆண்டு பெற்றார். ஆனால் ஜார்ஜ் தாம்ஸன் என்பவர் ''மின்னணுக்கள்'' என்பவை சிறு துணுக்குகள் அல்ல என்றும் அவை 'அலைகள்' என்றும் நிரூபித்து அதற்கான நோபல் பரிசை 1937ஆம் ஆண்டு பெற்றார். இதில் மற்றோர் ஆச்சரிய மென்னவெனில் முதலில் பரிசு பெற்றவர் தந்தை. பிறகு அதைத் தவறு என்று நிரூபித்துப் பரிசு பெற்றவர் அவருடைய மகன்!

ஆதாரம்: ''ஸயன்ஸ் டுடே''
தகவல்: வி. சம்பத்குமார்

படுகாயத்தின் நோவு பொறுக்க முடியாமல் துடிதுடித்துக் கொண்டிருக்கும் நோயாளியின் காதுகளில் அகிலாவின் வருகையை அறிவிக்கும் காலடிச் சத்தம் கந்தர்வ கீதமாக ஒலிக்கும். இனிய புன்னகை தவழும் அவளது முகத்தைப் பார்த்ததுமே நோவெல்லாம் பறந்து விட்டது போல் தோன்றும். அளப்பரிய அன்புடன் அவள் கூறும் ஆறுதல் வார்த்தைகள் சோர்வுற்ற நரம்புகளில் புத்துயிரூட்டிப் புதிய சக்தி பரவச் செய்யும். அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வருவோருக்கு உடற்பிணியகற்றி உரமூட்டும் தந்தையாக



மேஜர் ரகுநாத் இருந்து வந்தாரென்றால் உள்ளத்தின் சோர்வை நீக்கி உற்சாகமூட்டும் சகோதரியாக டாக்டர் அகிலா தன் பங்கைச் செய்து வந்தாள். அங்கிருந்து குணமாகிச் செல்லும் ஒவ்வொரு ஜவானும், ''ஸிஸ்டர்! ஸிஸ்டர்!'' என்று அன்பு ததும்ப அழைத்தவாறு அவளைத் தேடி வந்து அவளுக்கு நன்றியஞ்சலி செலுத்தி விட்டுப் போவதைக் குமரன் எவ்வளவு தடவைகள் பார்த்திருக்கிறான்! அப்போதெல்லாம் அகிலாவின் முகத்தில் தோன்றும் மலர்ச்சிக்கு ஈடேது! அத்தகைய உள்ள நிறைவை நாடித்தானே அவள் அங்கு வந்து சேர்ந்திருக்கிறாள்!

''என்ன காப்டன்! கொஞ்ச நேரத்துக்கு உங்கள் தனிமையை நான் கலைக்கலாமா?'' என்று கேட்டவாறு அவன் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டாள் அகிலா.

''தனிமையைக் கலைப்பதாவது? நல்ல கேள்வி!'' என்று சிரித்தான் குமரன்.

''உங்களைப் பார்த்தால் அப்படித் தான் தோன்றியது.''

''எப்படி?''

''தனிமையிலேயே இன்பம் காண்பவராக....''

குமரன் சிரித்தான். சற்றுப் பொறுத்து ஒருபெருமூச்சுடன் கூறினான்: ''நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் சரியாகக்கூட இருக்கலாம். தனிமையில் நான் இன்பம் காண்கிறேனோ இல்லையோ — ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தனிமையைத் துன்பமாக நான் என்றுமே கருதியது கிடையாது. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து தனிமைக்கே பழக்கப்பட்டுப் பட்டு அந்தத் தனிமையுணர்ச்சியே என்னுடைய இயல்பாக மாறி விட்டதோ என்னவோ!''

அகிலாவின் முகத்திலிருந்த மலர்ச்சி சட்டென்று மறைந்தது. அவளையும் மீறி ஒரு நீண்ட பெருமூச்சு அவள் நெஞ்சிலிருந்து எழுந்தது.

''மன்னிக்க வேண்டும். அனாவசியமாக உங்கள் மனம் நோகும்படி ஏதாவது சொல்லியிருந்தால்...''

''இல்லை, இல்லை. என்னைப் பற்றி ஓரளவுக்கு நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நினைவு தெரிந்த நாளிலிருந்து மனம் ஒருவிதமான நிலை



மைக்குப் பழக்கப்பட்டு விட்டால் அதை மாற்றிக் கொள்வது கடினம் தானே. ஆனால் வாழ்வில் நான் தன்னந் தனியாக ஆகிவிட்டாலும் என் தனிமையுணர்ச்சி என்னைச் செயலற்றவனாக ஆக்கி விடுவதற்கு ஒருநாளும் இடம் கொடுத்தது கிடையாது. என் மனத்தில் எங்கோ அந்தக் தனிமை உணர்ச்சி பதுங்கிக் கிடக்கிறதென்ற உண்மையை யாரும் கண்டு கொள்ளாத விதத்தில்தான் நான் மற்றவர் எதிரில் நடந்து கொள்ளப் பாடுபட்டு வருகிறேன். என்னையும் மீறி அது தலைதூக்கும்போது, எனக்கு அது வேதனை யளிப்பதை விட, மற்றவருக்கு அதனால் ஏற்படக் கூடிய வேதனையை நினைத்துத்தான் என் மனம் நோகிறது.''

சற்று நேரம் அமைதியான மௌனத்தில் ஆழ்ந்திருந்த அகிலா சட்டென்று கேட்டாள்.—''உங்கள் தனிமையுணர்ச்சியை மறப்பதற்காகத்தான் ராணுவ சேவையில் சேர்ந்தீர்களா?''

''இருக்கலாம். ஏதோ ஆவேசத்தில் நான் செய்த தீர்மானம் அது. நாட்டுப் பற்று எவ்வளவு தூரம் அதற்குத் தூண்டுகோலா யிருந்தது என்று என்னால் சொல்ல முடியாது. வாழ்வுக்கு வேறு எந்தப் பற்றுக்கோடும் இல்லாதபோது நாட்டுப் பற்று தீவிரமாகத் தலை தூக்கியதோ என்னவோ. ஆனால் ராணுவ வாழ்க்கையினால் என் தனிமை உணர்ச்சியை மறக்கடித்து விட்டதாக நினைத்தால் என்னை நானே ஏமாற்றிக் கொள்வதாகத்தான் அர்த்தம். சென்ற மூன்று வருஷங்களாக ராணுவ வாழ்க்கையின் நெரிசல்களுக்கும் பரபரப்புகளுக்கும், போர்த் திருப்பங்களுக்கும் மத்தியில்கூட என் தனிமையுணர்ச்சி மாறாமலே இருந்து வந்திருக்கிறது என்பதுதான் உண்மை. நூற்றுக் கணக்கான சகாக்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று உயிரைப் பணயம் வைத்துக் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையில்கூட நான் தன்னந் தனியன் என்ற உணர்வை என்னால் மாற்றிக் கொள்ள முடியவில்லை என்பதுதான் நான் வருத்தத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டிய விஷயம்'' என்று ஏதோ தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் குமரன் பேசிக் கொண்டு போனபோது அகிலா



அவன் முகத்தையே பார்த்தவாறு கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் ஏனோ கண்ணீர் துளித்து நின்றது.

குமரன் தொடர்ந்து கூறினான்: ''இங்கே நான் உட்கார்ந்திருந்தபோது எதிரே தெரிந்த இந்த இமயச் சிகரங்களின் தனிமையைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் சமதளப் பரப்பிலிருந்து வெகு தூரம் விலகி ஏதோ ஓர் உன்னத லட்சியத்தைப் பிடிப்பது போல் வானை முட்டி நிற்கும் இந்தச் சிகரங்கள் கண்டதெல்லாம் தனிமையைத் தவிர வேறென்ன? அந்தத் தனிமையின் ஜில்லிப்புத்தான் யாரையும் நெருங்கவொட்டாத பனித்திரளாக அவற்றைப் போர்த்தியிருக்க வேண்டும் என்று நினைக்காலும் தப்பில்லையல்லவா?''

அகிலா பெருமூச்செறிந்தாள்: ''இமயத்தின் அந்த நெருங்க முடியாத தனிமை அதற்குப் பாதுகாப்பாக இருந்து வந்த காலம்தான் இப்போது மாறி விட்டதே. மூன்று வருஷங்களாக இந்தப் பனிச் சிகரங்களில் இருந்து வந்திருக்கும் படை நடமாட்டத்துக்குக் கணக்கேது? பீரங்கிகள் கக்கிய நெருப்புக்குக் கணக்கு எது? எத்தனையோ ஆயிரக் கணக்கான வருஷங்களாக மாசு மறுவில்லாமல் துல்லியமாக விளங்கிய பனிப் போர்வையில் எவ்வளவு ரத்தக் கறை படிந்து விட்டது இந்த மூன்று வருஷங்களில்!''

''இதையெல்லாம் பார்க்கும்போது நமது உன்னதப் பண்புகளுக்கும், லட்சியங்களுக்கும் இதே கதி ஏற்பட்டு விடக் கூடாதே என்று எனக்குக் கவலை தோன்றுவது இயற்கைதானே!''

''சீனர்களின் வெறியாட்டம் தணிந்ததென்று நிம்மதியாயிருந்த வேளையில் பாகிஸ்தான் கிளப்பிவிட்ட புதிய போராட்டம் இப்போது தோன்றியிருக்கிறது. இது இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்குமோ? கவிதை நிறைந்த இந்தக் காஷ்மீரத்தை இன்னும் எப்படியெல்லாம் உருக்குலைக்குமோ!'' என்றாள் அகிலா மிகுந்த கவலையுடன்.

''அதையெல்லாம் நினைத்துப் பார்க்க நமக்கு நேரம் ஏது? கடமையின் அழைப்பு எங்கிருந்து வந்தாலும் சரி, அது எவ்வளவு கடுமையானதாயிருந்தாலும் சரி, அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதில் மற்ற நினைவையெல்லாம் நாம் மறந்து விட முடிகிறதே'' என்றான் குமரன்.

ஆஸ்பத்திரி வாசலில் ஒரு ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

''மறுபடியும் ஒரு புதிய கேஸா?'' என்று கேட்டவாறு குமரன் சற்று முன்னுக்கு நகர்ந்து எட்டிப் பார்த்தான். ''அடடே, வந்திருப்பது என் கமாண்டரல்லவா?'' என்று கூறினான்.

அகிலாவும் எட்டிப் பார்த்தாள். குமரன் பணிபுரிந்து வந்த எஞ்சினீயரிங் அணியின் பிரதான அதிகாரிதான் ஜீப்பிலிருந்து இறங்கி ஆஸ்பத்திரிக்குள் சென்று கொண்டிருந்தார்.

''உங்கள் உடல் நிலையைப் பற்றித்தான் விசாரிக்க வந்திருக்கிறார் போலிருக்கிறது'' என்றாள் அகிலா.

''என்னை நேரில் பார்த்தால் அவரே புரிந்து கொள்வார். உடனடியாக எனக்கு ஏதாவது பொறுப்பைக் கொடுத்து இங்கிருந்து அனுப்பி வைக்கும்படி அவரிடமே கேட்டுக்கொள்ளப் போகிறேன்'' என்று குமரன் கூறிக் கொண்டிருக்கும்போதே, மேஜர் ரகுநாத்துடன் கமாண்டர் கன்னு மாடிப்படி ஏறி வரும் மிடுக்கான பூட்ஸ் ஒலி கேட்டது.

குமரனும் அகிலாவும் மரியாதையுடன் எழுந்து நின்றனர். கமாண்டருக்குக் குமரன் ராணுவ முறையில் வணக்கம் தெரிவித்ததும் அன்புடன் பதில் வணக்கம் தெரிவித்தவாறு அருகில் வந்த அவர் குமரனைத் தட்டிக் கொடுத்து, ''ஹலோ காப்டன், எப்படி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு நாற்காலியில் அமர்ந்தார். மேஜர் ரகுநாத்தும் அமர்ந்ததும் குமரனும் அகிலாவும் அவர்களெதிரே உட்கார்ந்து கொண்டனர்.

தலைத் தொப்பியைக் கழற்றி மடி மீது வைத்துக் கொண்டு பனிக் குவியலாக மின்னிய கேசத்தை ஒரு முறை தடவி விட்டவாறு குமரனைப் பார்த்த கமாண்டர், ''என்ன காப்டன், இங்கே இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையாமே!'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

''மன்னிக்க வேண்டும். பிடிக்கவில்லை என்று நான் சொன்னால் என்னைப் போல் நன்றி கெட்டவன் யாருமே இருக்க முடியாது. மேஜர் அவர்களும், அவருடைய குமாரியும் என்னிடம் காட்டும் அன்பும் பரிவும் சாமானியமானதா? நான் எவ்வளவு ஆரோக்கியத்துடன் இருக்கிறேன் என்று நீங்களே பார்க்கிறீர்களே. இவர்களுடைய இடைவிடாத கவனிப்பு இல்லாமல் இது சாத்தியமாக முடியுமா?'' என்றான்

குமரன் இதயம் நிறைந்த நன்றியுணர்வுடன்.

''உண்மைதான் மேஜர் ஸாஹுப். உங்களுக்கும் டாக்டர் அகிலாவுக்கும் நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்றார் கமாண்டர் கன்னு.

மேஜர் ரகுநாத் சிரித்தார். ''இதில் உபசார வார்த்தைகளுக்கு அவசியமே இல்லை. இங்கு வருபவர்கள் உல்லாசப் பொழுது போக்குக்கா வருகிறார்கள்? உயிரை ஒரு பொருட்டாக மதியாமல் போர் முனையில் படுகாயப்பட்டு நினைவிழந்த நிலையில் இங்கே வருகிறார்கள். அவர்களுக்கு எங்களாலான சேவையைச் செய்வதில் நாங்கள் எவ்வளவு பெருமை அடைகிறோம் தெரியுமா? மற்றவர்களைக் கவனித்துக் கொள்வது போலத்தான் காப்டன் குமரனையும் நாங்கள் கவனித்துக் கொண்டோம். இவருடைய கடமைத் துடிப்பு எப்படிப்பட்டதென்று எனக்குத் தெரியும், பழைய ஆரோக்கியம் முழுதும் திரும்புவதற்கு முன்னர் இவர் அவசரப்பட்டு ஏதாவது செய்துவிடக் கூடாதே என்றுதான் நான் இவருக்கு அதிக நம்பிக்கை கொடுக்காமல் காலம் கடத்தி வந்தேன்'' என்றார்.

''இன்னும் கூட என் பழைய ஆரோக்கியம் திரும்பவில்லை என்றுதான் சொல்கிறீர்களா? மேஜர் ஸார்...'' என்று கேட்டான் குமரன், சற்றுப் பொறுமை இழந்து.

''அப்படியில்லை. காப்டன். நீங்கள் நல்ல ஆரோக்கியத்தைத் திரும்பப் பெற்றுவிட்டீர்கள் என்று மேஜர் ஸாஹுப் எனக்கு டெலிபோனில் அறிவித்த பிறகுதான் நான் புறப்பட்டு வருகிறேன்'' என்று கமாண்டர் கன்னு கூறியதும் குமரனுக்கு மகிழ்ச்சி மிகுதியில் என்ன செய்வதென்றே புரியவில்லை.

''மேஜர் ஸார், நீங்கள்... நீங்கள்... என் தெய்வம்'' என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறிக் கொண்டே மேஜர் ரகுநாத்தின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''காப்டன்! ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொண்டு நீங்கள் இப்போதே இங்கிருந்து புறப்பட வேண்டியிருக்கிறது'' என்றார் கமாண்டர் கன்னு.

''சொல்லுங்கள் ஸார்!'' என்றான் குமரன் ஆர்வத்துடன்.

''இப்போது போர் நடக்கும் பகுதி இங்கிருந்து நேர் மேற்கே இருபது மைல் தூரத்தில் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமில்லையா? அங்கே



'' ஏன் சார் 'பட்டோடி' சினிமாவில் சேர்ந்து நடிக்கப் போகிறாராமே!''

''அந்தப் படமேனும் ஓடிச் சதம் போடுமோ?''


◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

எதிரிப் படை நம்மை விட அதிக வசதியுள்ள இடத்தில் நிலை கொண்டிருக்கிறது. நமது படை எவ்வளவோ உறுதியுடன் போராடியும் எதிரியைப் பின்னுக்குத் தள்ள முடியவில்லை. இதன் மத்தியில் எந்த நிமிஷமும் எதிரியின் உதவிப் படை அங்கு வந்து விடக் கூடும் என்று தெரிகிறது. அப்படி வந்துவிட்டால் பெருத்த சேதத்துடன் நம்முடைய படை பின்வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை.''

''அந்த நிலைமையைத் தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்!''

''எதிரிக்குத் தெரியாமல் வேறு வழியே முன்னேறிச் சென்று எதிரியை வளைத்துக் கொள்வதற்காக நம்முடைய இன்னொரு படை புறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த வழியில் முன்னேறத் தடையாயிருப்பது குறுகலான செங்குத்தான பள்ளத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு காட்டாறு. அதைக் கடப்பதற்கான பாலம் அமைந்தாலொழிய நமது படை முன்னேற முடியாது. அந்த வேலையைக் கவனிக்க ஓர் எஞ்சினியரிங் காப்டன் தேவை என்ற செய்தி எனக்குச் சற்று முன்புதான் தெரிய வந்தது. அதே சமயத்தில் உங்களைப் பற்றி மேஜர் ஸாஹுபிடமிருந்து போன் வரவே அந்தப் பாலம் அமைக்கும் பொறுப்பை உங்களிடமே விட்டு விடத் தீர்மானித்து விட்டேன்'' என்றார் கமாண்டர்.

'' நான் இப்போதே புறப்படத் தயார் '' என்றான் குமரன் மிகுந்த உற்சாகத்துடன்.


WATER SUPPLY
in rural or urban areas
is not a problem
when you install
MYERS Deepwell Ejecto Pump
For continuous supply of cool, fresh water under pressure Myers EJECTO Pump has no equal.
Consider these advantages :-
1. It supplies water directly from source to any desired point or points.
2. It can be installed at ground level.
3. It needs no overhead tank.
4. Its capacity of 300 to 5000 g.p.h. is suitable for most needs.
5. It works silently, efficiently, economically.
6. It is ideal for small industries, hotels, flats, etc.
4 good reasons why you should buy this pump:-
1. Compact and simple. Parts easily accessible for maintenance.
2. Robust construction. Pumps and parts guaranteed against faulty workmanship.
3. Motor above ground level. No danger of catching damp and burning out.
4. Elimination of noise. Noise-free operation is a great asset where large quantities of water have to be pumped daily.
There are other
Myers or Wasp
Power Pumps & Hand Pumps, too.
WATER SUPPLY SPECIALISTS PVT. LTD.
Kal-Ma, 330, Thambu Chetty Street, Madras-1
WS-53A

''காப்டன் குமரன் ராணுவத்தில் சேருவதற்கு முன்னால் மின் சார எஞ்ஜினியராகத்தானே இருந்தார்?'' என்று கேட்டார் மேஜர் ரகுநாத்.

''ராணுவ சேவையில் ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனியே எஞ்ஜினியர்களை வைத்துக் கொள்ள முடியுமா என்ன? எல்லாருக்கும் எல்லாவிதமான வேலைகளிலும் பயிற்சி கொடுக்கிறோம். முக்கியமாக நமது காப்டன் பால அமைப்பில் விசேஷமான பயிற்சியடைந்திருக்கிறார்'' என்று விவரித்தார் கமாண்டர்.

அடுத்த அரைமணி நேரத்துக்குள் குமரன் அங்கிருந்து புறப்பட்ட போது அகிலா ஜீப் அருகில் வந்து நின்று அவனை வழியனுப்பி வைத்தாள்.

''உங்களுக்காக நான் எப்போதும் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பேன்'' என்று நெஞ்சு தழுதழுக்க அவள் கூறிய போது அவளது கண்கள் கலங்கித் தோன்றின.

கமாண்டர் குறிப்பிட்ட இடம் ராணுவ ஆஸ்பத்திரியிலிருந்து வடமேற்கே இருபது மைல் தூரத்துக்குள் தான் இருந்தது. குமரன் அங்கு போய்ச் சேர்ந்த சமயம் அந்தப் படை வீரர்கள் தங்களுக்குத் தெரிந்த அளவுக்கு அந்தப் பாலத்தை அமைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். குமரன் அங்கங்கே சிறுசிறு திருத்தங்களை விளக்கிச் சொன்னதும் அந்த வேலை இன்னும் தீவிரமாகவும் சுறுசுறுப்பாகவும் நடக்க ஆரம்பித்தது.

புதர் மறைவிலிருந்த ''பங்கர்'' ஒன்றிலிருந்து வெளியே வந்த கம்பெனி காப்டன், குமரன் அருகே வந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.

''உங்கள் கமாண்டரைப் போல் நானும் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவன்தான். என் பெயர் கோஸ்லா'' என்றான் அவன் ஆங்கிலத்தில்.

''என் பெயர் குமரன். உங்களைச் சந்தித்ததில் எனக்கு மிகுந்த சந்தோஷம்'' என்று ஹிந்தியில் கூறியவாறு குமரன் அவனது கையைப் பற்றிக் குலுக்கினான்.

அதன் பிறகு கோஸ்லா பஞ்சாபிக் கொச்சை நிரம்பிய ஹிந்தியிலேயே பேச ஆரம்பித்தான். ''நீங்கள் சரியான சமயத்துக்கு வந்திருக்கிறீர்கள். இன்று பொழுது சாய்வதற்குள் பாலத்தைப் பூர்த்தி செய்தால்தான் திட்டமிட்டபடி இரவோடிரவாக இங்கிருந்து முன்னேறிச் சென்று எதிரியை வளைத்துக் கொள்ள முடியும்'' என்றான் அவன்.

படபடவென்று எங்கிருந்தோ யந்திரத் துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

''குப்புறப் படுத்துக்கொள்ளுங்கள்'' என்று கத்தினான் கோஸ்லா.

அந்த எச்சரிக்கைக்காக யாரும் காத்திருக்கவில்லை. யந்திரத் துப்பாக்கியின் சத்தம் கேட்டதுமே அவரவர் அந்தந்த இடத்தில் குப்புறப் படுத்து விட்டனர். துப்பாக்கியின் சத்தம் நிற்கும் வரையில் யாரும் எழுந்திருக்கவில்லை. அதன் பிறகு அவரவர் வேகமாக எழுந்து அவசரம் அவசரமாக வேலையைத் தொடர்ந்து கவனிக்க ஆரம்பித்தனர்.

''எதிர்க் கரையில் வசதியான ஒரு குன்றின் உச்சியிலிருந்து அந்த யந்திரத் துப்பாக்கி இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரே ஒரு எதிரி ஆள்தான் அங்கே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு தடவை இதே மாதிரி தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறான். இது வரை நம் ஆட்கள் நாலைந்து பேர் பலியாகி விட்டார்கள்'' என்று விவரித்தான் கோஸ்லா.

''ஆனால் அடிக்கொரு தரம் இந்தத் தொல்லை இருந்து கொண்டிருந்தால் பொழுது சாய்வதற்குள் இந்த வேலையை முடிக்க முடியாதே'' என்றான் குமரன் கவலையுடன்.

''என் கமாண்டருக்குப் போனில் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதற்குள் ஏதாவது ஏற்பாடு செய்திருப்பார் என்றே நம்புகிறேன்'' என்றான் கோஸ்லா.

பாலம் அமைக்கும் வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. நடு நடுவே யந்திரத் துப்பாக்கியின் படபடவென்ற ஒலி சிறிது நேரத்துக்கு வேலைக்குத் தடை போடும். ஓரிருவர் குண்டு பட்டு அந்தக் கிடுகிடு பாதாளத்தில் விழுவதும் நிகழும். ஒரு தடவை குமரனே ஒரு மயிரிழையில் தப்பினான். அனல் பறக்கும் குண்டு அவன் காதருகே உராய்வது போல் சென்றதை அவனால் உணரக்கூட முடிந்தது. அவ்வளவு ஆபத்தான நிலையிலும் அவனும் கோஸ்லாவும் அந்த இடத்தை விட்டு நகராமல் வீரர்களை ஊக்கப் படுத்திக் கொண்டிருந்தனர். வீரர்களும் உயிரைத் துரும்பாக மதித்துத் தங்கள் கடமையைச் செய்து கொண்டிருந்தனர்.

திடீரென்று யாரும் எதிர்பாராத அமைதி அங்கு நிலவியது போல் தோன்றியது. கொஞ்ச நேரமாக யந்திரத் துப்பாக்கியின் சத்தமே வரவில்லையென்பதை அப்போதுதான் எல்லோரும் உணர்ந்தனர்.



"ஊரிலிருந்து வந்திருக்கிங்களே! குழந்தை தின்பதற்கு என்ன வாங்கிட்டு வந்திங்க?"

"சும்மா வருவேனா? சாக்பீஸ், பலப்பம், செங்கல் கட்டி எல்லாம் பை நிறையக் கொண்டு வந்திருக்கேன்."

"துப்பாக்கியில் பழுது ஏதாவது ஏற்பட்டு விட்டதோ என்னவோ!" என்றான் குமரன்.

"அல்லது துப்பாக்கி ரவுண்டுகள் தீர்ந்து போயிருக்கலாம். யார் கண்டது?" என்றான் கோஸ்லா.

"எப்படியோ, நம்முடைய வேலை சுலபமாகி விட்டது" என்று உற்சாகத்துடன் கூறினான் குமரன்.

அதன் பிறகு எந்தத் தடங்கலுமில்லாமல் வேலை வேகமாக நடக்க ஆரம்பித்தது. பொழுது சாய்வதற்கு முன்னமேயே பாலத்தின் கடைசிக் கட்டை பொருத்தப்பட்டுப் பாலம் பூர்த்தியான நிலையை எட்டிவிட்டது. வெற்றி ஆரவாரத்துடன் நாலைந்து வீரர்கள் பாலத்தைக் கடந்து அக்கரையில் போய் நின்றனர். குமரன், கோஸ்லா இருவராலும்கூட அந்த மகிழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அவர்களும் பாலத்தின் மேல் நடந்து சென்று அக்கரையில் போய் நின்றனர்.

சட்டென்று கோஸ்லா கத்தினான்: "காப்டன், குமரன்! அதோ பாருங்கள்."

அவன் காட்டிய திசையில் பார்வையைப் பதித்த குமரன் குன்றின் சரிவுப் பகுதியில் மெதுவாக வந்து கொண்டிருந்த நாலைந்து வீரர்களைக் கண்டதும் திகைத்து நின்று விட்டான்.

"சுடாதீர்கள். அவர்கள் நம் வீரர்கள்" என்று கத்தினான் கோஸ்லா.

அந்த வீரர்கள் காயமுற்ற வீரன் ஒருவனை ஸ்ட்ரெச்சரில் தூக்கி வருவது தெரிந்ததும் குமரன், "வாருங்கள், நாம் அவர்களுக்கு உதவி செய்யலாம்" என்று கூறிக் கொண்டே முன்னே ஓடினான். கோஸ்லாவும் மற்றவர்களும் அவனைத் தொடர்ந்து ஓடினர்.

குன்றுச் சரிவிலிருந்து இறங்கி வந்த வீரர்களை நடு வழியில் சந்தித்து அவர்கள் கையிலிருந்த ஸ்ட்ரெச்சரைத் தங்கள் கையில் வாங்கிக் கொண்டதும் அந்த வீரர்களில் ஒருவன் கூறினான். "உங்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த எதிரி யந்திரத் துப்பாக்கியை வாயடைக்கச் செய்யவே கமாண்டர் எங்களை வேறு வழியாக அங்கே அனுப்பினார். எதிரி பாறைக்கு மத்தியில் வசதியான இடத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் கண்களுக்குத் தப்பி அவனைக் குறி வைப்பது சாத்தியமாயில்லை. மறைவில் பதுங்கியிருந்த எங்கள் காப்டன் திடீரென்று நேருக்கு நேரேயே அவன் மேல் பாய்ந்து அவனைச் சுட்டு வீழ்த்தினார். ஆனால் அதற்குள் எதிரியின் குண்டு அவர் மீது பாய்ந்து விட்டது."

"அட, பாவமே! ஸ்ட்ரெச்சரில் இருப்பது உங்கள் காப்டனா?" என்று கேட்ட கோஸ்லா, அந்தச் சடலத்தை மூடியிருந்த துணியை விலக்கினான். மறுகணம், "காப்டன் வீரமணி!" என்று கத்தி விட்டான்.

திடுக்கிட்ட குமரன், "யார்? வீரமணியா?" என்று கூவினான்.

வீரமணிதான்! அவன் ஆவி பிரியும் நிலையில் இருந்தது. குமரனின் குரல் கேட்டு மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான்.

"குமரன்!" என்று கூறுவது போல் அவனது இதழ்கள் அசைந்தன.

"வீரமணி...." என்று கதறியவாறு குமரன் கண்ணீர் பெருக்கினான்.

வீரமணியின் இதழ்களில் தெய்வீகமான புன்னகை அரும்பியது. அவன் கண்கள் தாமாகவே மூடின. அவன் கைகள் தொய்ந்து விழுந்தன. கடைசிக் கணத்தில் நண்பனைச் சந்திக்க முடிந்த நிம்மதியுடன் அவனது ஆவி உடலை விட்டுப் பிரிந்தது.

"வீரமணி... வீரமணி...!" என்று நெஞ்சு கிழிய அலறினான் குமரன்.

* * *

இதே நேரத்தில் வானுயர்ந்த வெண் பனிச் சிகரங்களின் கம்பீரமான எழிலையே விழிகளால் பருகியவாறு ராணுவ ஆஸ்பத்திரியின் மாடி பால்கனியில் நின்று கொண்டிருந்தாள் அகிலா.*

(தொடரும்)

---

*இக் காட்சியையே ஓவியர் கல்பனா இவ்விதழ் அட்டைப்படமாகப் புனைந்திருக்கிறார்



கயல் விழி

மதுரை மாநகர் சுந்தரேசுவரர் திருக் கோயிலில் பாண்டிய மன்னர்களின் கீர்த்தியை விளக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றில் பிற்காலப் பாண்டிய மன்னரான ஸ்ரீ சுந்தரபாண்டியன் கி. பி. 1216—1235 ஆண்டுகளில் 'சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணியருளிய' பெருமையை விளக்குகிறது. இந்தக் கல்வெட்டில் காணாது போனாலும், கலைஞர் அகிலனின் சொல்லோவியத்திலே அமர பாத்திரமாக இடம் பெறுகிறாள் கயல்விழி. இந் நூலுக்கு அவளே உயிரூட்டுகிறாள்.

அடிமைப்பட்டுக் கிடந்த பாண்டிய நாட்டுக்குப் புத்துணர்ச்சியும் சுதந்திர தாகமும் ஊட்டுகின்றனர் கவிஞர் பைந்தமிழ்க்குமரன் வேடத்திலிருந்த இளவரசர் சுந்தரபாண்டியனும், பாணர் குலப் பேரழகி கயல்விழியும்.

பாண்டிய நாடு கோசல நாட்டு மன்னன் வீரநரசிம்மனிடம் மறுபடியும் போரில் அடிமைப்பட்டு விடுமோ என்ற தருணத்தில் கயல்விழி வீர நரசிம்மனிடம் தூது சென்று, அவர் மகள் இளவரசி பாமினியைச் சுந்தர பாண்டியனுக்கு மணம் முடித்து வைத்துத் தன் காதலைத் தியாகம் செய்த விந்தையை என்னென்பது! 'அரசகுலத்தோரே! நாங்கள் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்கள். மக்களைச் சுமந்து, பெற்று, பாலூட்டிச் சீராட்டி, எறும்பு கடிக்கவும் பொறுக்காமல் பேணி வளர்த்து மனிதர்களாக்குகிறோம். உயிர்களை ஆக்கப் பிறந்தவர்கள் நாங்கள். உங்களால் அழிக்கப்படுவதற்காகவா நாங்கள் மக்களைப் பெற்று வளர்க்கிறோம்? உங்களைப் பெற்ற பெண் குலத்தை நீங்கள் எப்படியெல்லாம் இந்தப் போரினால் துன்புறுத்துகிறீர்கள், தெரியுமா ?'' என்று வீராவேசமாகப் பொழிந்து போரை நிறுத்திய இந்தப் பெண் திலகத்தின் வரலாறு படிக்கப் படிக்கத் தெவிட்டாதது.

இந்த நூலுக்கு முகவுரை வழங்கிய தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் அணிந்துரை இந்நூலின் சிறப்பை நன்கு விளக்குகிறது. ''கதைத் தலைவி கயல் விழி வரலாற்றுப் பாத்திரம் அல்ல; ஆனால் அவளைப் படைத்த அகிலனார் தமிழர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கனாக் கண்டு போற்றி வரும் பெண்மையையே படைத்து விட்டார்.......''

புத்தகம் கிடைக்குமிடம்: பாரி புத்தகப் பண்ணை, சென்னை—5; விலை: ரூ. 10.00.

தனி வழிப் பாதை

நம் முன்னே உலவுகிற ஒரு கதாபாத்திரத்தை நினைவூட்டுகிற மாதிரி ஒரு சிறு கதை அமைந்து விட்டால் அந்தக் கதையோடு நாம் ஒன்றி விடுகிறோம். 'அப்பாவி' என்கிற கதையிலே வருகிற கதாபாத்திரம் கோபு விசித்திரப் பிரகிருதி. அவர் எங்கும் இருப்பார். எங்கும் எந்த நேரத்துக்கும் போவார். மிக மிகப் பிரபலமான கல்யாணமா ?அவர் இல்லாவிட்டால் அது பருப்பு இல்லாத கல்யாணம் மாதிரிதான்! பிரபலமான சாப்பாடா? வான்கோழி மாதிரி அவர் தலையும் வழுக்கை முகமும்தான் நடு வாசலில் தெரியும். நையாண்டிப் பாணியிலே செல்லும் இந்தக் கதையைப் படிக்கும்போது கதை 'உத்தி' நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

இந்தத் தொகுதியில் வரும் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பாணியில் அமைந்திருக்கிறது. ஆர்வியின் ஆற்றொழுக்குப் போன்ற சரளமான நடை கதைகளைப் படிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. ஆர்வி கிராமப் பழக்க வழக்கங்களில் ஊறிப் போயிருக்கிறார் என்பதை 'நடை பாதை நாயகன்', 'கர்வ பங்கம்' கதைகளில் வரும் கிராமப்புற வர்ணனைகள், நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தத் 'தனி வழிப் பாதை' சிறுகதைத் தொகுதியில் சிறு கதையின் பல உத்திகளில் அமைந்துள்ள சிறுகதைகளைக் காண்கிறோம்.

பிரசுரம்: வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை—17; விலை: ரூ. 3.50.

சிறப்பு மலர்

பாரதியார் தமிழ் ஆசிரியராக இருந்து பணியாற்றிய ஒரே பள்ளியான மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி நிர்வாகஸ்தர்கள் சென்ற ஆண்டு இறுதியில் தங்கள் பள்ளியில் மகா கவி பாரதியாரின் உருவச் சிலை நிறுவியதுடன் ஓர் அழகிய மலரும் வெளியிட்டிருக்கின்றனர். அதில் பாரதியாரைப் பற்றிப் பல கட்டுரைகள் ஆங்கிலத்திலும், தமிழிலும் காணப்படுகின்றன. பல இளம் புலவர்களின் பாமாலைகளும் இருக்கின்றன.

இதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவெனில் பாரதியார் சரஸ்வதி மீது பாடியுள்ள ''வெள்ளைத் தாமரை பூவிலிருப்பாள்'' என்ற பாடலுக்கு ராஜாஜியின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பாடலையும் சேர்த்திருக்கிறார்கள். பாரதி பாடலுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் ராஜாஜி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'யங் இந்தியா'வில் வெளியிட்டிருந்தார். அந்தக் காலத்திலேயே ராஜாஜி பாரதியாரை எவ்வளவு தூரம் போற்றி வந்திருக்கிறார் என்பது தெரிகிறது. பேராசிரியர் பி.மகாதேவன், பேராசிரியர் கே. சுவாமிநாதன் ஆகியோரின் ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

பிரசுரம்: சேதுபதி உயர்நிலைப் பள்ளி, மதுரை; ஆசிரியர்: வி. ஜி. ஸ்ரீனிவாசன்.

மங்கையர் உள்ளம்

கே. ஜெயலக்ஷ்மி

சுகுமாரை ரயிலேற்றி விட்டு விட்டுக் கோபியும், முரளியும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

''எனக்கென்னமோ தெரிய வில்லை, முரளி! சுகுமாரை ரொம்பப் பிடித்திருக்கிறது'' என்றான் கோபி.

''எனக்கும்தான் அவனைப் பிடித் திருக்கிறது. ஆனால்....'' மேலே சொல்லத் தயங்கினான் முரளி.

''அவன் கருப்பாக இருப்பது தான் உனக்குப் பிடிக்க வில்லை. அப்படித்தானே?'' சிரித்துக் கொண்டே கேட்டான் கோபி.

''அவன் கருப்பாக இருந்தால் இருந்துவிட்டுப் போகிறான். அதைப் பற்றி நமக்கென்ன? அவனுக்குப் போய் உன் தங்கை பூரணியைக் கொடுக்கிறேன் என்று நீ சொல்கிறாயே. அதுதான் எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. பூரணி எங்கே? சுகுமார் எங்கே? சே! சே! இருவரையும் ஜோடி சேர்த்துப் பார்க்கவே பிடிக்கவில்லை எனக்கு.'' முரளியின் வார்த்தைகள் வெறுப்பில் மூழ்கியே வெளி வந்தன.

''உயர்ந்த குணம், சிறந்த படிப்பு, நிறைந்த வருமானம், பிக்கல் பிடுங்கல் இல்லாதவன். உடல் நிறம் கருப்பாக இருக்கிறது என்கிற ஒன்றைத் தவிர சுகுமாருக்கு ஈடு நீயோ — நானோ ஆக முடியாது. அது தெரியவில்லையே உனக்கு.''

''அது ஒன்றே போதுமே கோபி. அவர்களை இணைப்பதால் உன் தங்கையின் வாழ்க்கை மட்டும் பாழாகாது. சுகுமாரின் வாழ்வுமேகூட வீணாகத்தான் செய்யும். ஏதோ எனக்குத் தெரிந்ததை, என் அநுபவத்தில் கண்டதைச் சொன்னேன். பிறகு உன் விருப்பம். யோசித்துச் செய்.'' திடீரென்று பிடிப்பில்லாமல் பேசினான் முரளி.

கோபிக்குப் பொறி தட்டினாற் போன்ற உணர்வு. அவன் நடை தடைப்பட்டது. ''முரளி!'' என்று குரலிலே இனிப்பைப் பூசியவாறே அவன் கைகளைப் பற்றிக் கொண்டான் கோபி.

நண்பரின் கையிலே சிறைப்பட்டிருந்த முரளியின் கை படபடத்தது. முகத்திலே கருமை நிழலாடியது. இதழ்கள் துடிக்க, ''இவ்வளவு நாட்களும் உன்னிடம் மறைத்து வைத்திருந்த ஓர் உண்மையை இப்போது பூரணி சுகுமார் ஆகிய இருவரின் நன்மையைக் கருதி வெளியிடுகிறேன் கோபி. என் மனைவி சித்ரா எனக்கு நேர்மாறான உடல் நிறமுள்ளவள் என்பது உனக்குத் தெரியும். நான் அவள் மேல் அநுதாபம் கொண்டே ஏதோ பெரிய தியாகத்தைச் செய்வதாக எண்ணி அவளை மணந்து கொண்டேன். ஆனால்.... என்ன முயன்றும் என்னால்.... அவளை முழு மனத்துடன் விரும்பவே முடிய வில்லை கோபி. அவள் மேல் எனக்கு அன்பு இருக்கிறது; அநுதாபம் இருக்கிறது. ஆனால் காதல் என்பது துளிக்கூட இல்லை. என் மனத்தை மாற்றிக் கொண்டு அவளை விரும்பத்தான் நானும் முயற்சி செய்கிறேன். இன்னமும் ஏனோ எனக்கு அந்த முயற்சியில் வெற்றி கிட்டவேயில்லை. இதனால் என் வாழ்க்கை மட்டும் சாரமற்றதாக இருக்கிறது என்பதில்லை. சித்ராவின் வாழ்க்கையும் இதனால் வீணாகத்தானே செய்கிறது? யோசித்துப் பார், கோபி!'' என்றான் குரல் தழுதழுக்க.

வியப்பினால் செயலற்றுப் போய் நின்று விட்டான் கோபி.

''சொல்லு, கோபி! விருப்பும் வெறுப்பும் இரண்டு இனங்களுக்கும் பொதுவானது தானே? எனக்கே ஏற்பட்டிருக்கும் துன்பகரமான அநுபவம் உன் தங்கைக்கும் ஏற்படத்தான் வேண்டுமா?'' என்று கோபியின் தோளைப் பற்றிக் குலுக்கினான் முரளி.

''மனித இனம் முன்னேறிக் கொண்டே தான் வருகிறது. ஆனாலும் பலனில்லையே. மனிதனின் மனம் முன்னேறவேயில்லையே, முரளி! இந்த விஷயத்தை ஏன் என்னிடம் சொன்னாய்? எனக்கு உன் மீது வெறுப்பாக இருக்கிறது!'' என்றான் கோபி ஆத்திரம் பொங்க.

''நீ என்னை எவ்வளவு வேண்டுமானாலும் கோபித்துக் கொள்; வெறுத்துக் கொள். அதில் எனக்குக் கொஞ்சம்கூட வருத்தம் கிடையாது! என் மனசாட்சியே எனக்கு எதிராக இருக்கும்போது நான் என்ன செய்ய முடியும்? சரி, என்னை விட்டுத் தள்ளு. என் கதை நடந்துவிட்ட ஒன்று. ஆனால்.... உன் தங்கை பூரணியை — அவளுடைய அழகை மட்டும் அலட்சியப்படுத்தாதே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் கோபி!'' என்றான் முரளி இதயபூர்வமான குரலில்.

கோபியின் உள்ளம் குழம்பியது. கலங்கிய உள்ளத்தின் பிரதிபலிப்பான களையிழந்த முகத்துடன் வீட்டினுள் நுழைந்தான் கோபி.

நடு ஹாலில் குழுமியிருந்த குடும்பத்தினரின் பேச்சுக் குரல் அவனைச் சற்று வெளியிலேயே தாமதிக்க வைத்தது.

''வயது, குணம், வேலை எல்லாம் நன்றாக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஜாதகம் பொருந்தியிருக்கிறது. பேசாமல் பூரணியைக் கொடுத்து விடலாம் என்றால்... நிறம்தான் ஆனாலும் ரொம்ப மோசமாக இருக்கிறது. கொஞ்சம் மாநிறமாக இருந்தாலும் பரவாயில்லை.'' அம்மா தன் வார்த்தையை முடிக்கவில்லை.

''தொட்டால் ஒட்டிக் கொள்கிற கறுப்பு, அம்மா. பூரணிக்கும் அவருக்கும் கொஞ்சம்

கூட 'மாட்ச்' இல்லையம்மா! சே! சே!'' என்றான் தம்பி பாபு.

''பூரணிக்கு அழகு இருந்து என்ன செய்கிறது? கடுமையான செவ்வாய் தோஷ ஜாதகம் அல்லவா அவளுக்கு? எந்த ஜாதகமும் பொருந்தியிருக்கவே மாட்டேன் என்கிறதே! இந்தப் பையனின் ஜாதகம் ஒன்றுதான், அவளுடைய ஜாதகத்துடன் நன்றாகப் பொருந்தியிருக்கிறது. மற்ற விஷயங்களும் நமக்கு ஏற்றதாக இருக்கின்றன. நிறம்தான் கொஞ்சம் மட்டம். ஆண் பிள்ளைதானே? பரவாயில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.'' — இது அப்பாவின் சமாதான உரை.

''நிறம் கொஞ்சம் மட்டமாம். கேட்டுக்கோடா பாபு. அசல் நெய்வேலிக் கரியைப் பிடித்து....'' என்றாள் பூரணி கனீரென்ற குரலில்.

கோபியின் நெஞ்சில் முள்ளாகக் குத்தியது, பூரணியின் வார்த்தை.

''அப்படிச் சொல்லு! பாலீஷ் கறுப்பு அல்லவா அண்ணாவின் நண்பர். நீ சம்மதித்தால்கூட நான் சும்மாயிருக்க மாட்டேன்.'' இது பிரேமா. அவளே மாநிறம்தான். ஆனால் கொஞ்சம் வாய் அதிகம்.

''சரிதான். சும்மாயிருக்களடி! வர தட்சிணையே வேண்டாம் என்கிறான். இந்தக் காலத்தில் இப்படி ஒரு நல்ல வரன் கிடைக்கக் கூடியதா என்ன? பெண் குழந்தையாக லட்சணமாகப் பேசாமல் இருக்காமல் ஒவ்வொன்றுக்கும் வாயைப் பாரு, வாயை.'' அம்மாவுக்குக் கோபம் வந்து விட்டது.

''எனக்கென்னமோ தேவலை என்றே தோன்றுகிறது'' என்று அப்பா மெதுவாக ஆரம்பித்தார்.

''எனக்கு விருப்பமில்லை. இதுவே நான் கறுப்பாக இருந்து அவர் அழகாக இருந்திருந்தால் அவர் என்னை விரும்புவாரா?'' என்று கேட்டு விட்டுச் சடக்கென்று உள்ளே ஓடி விட்டாள் பூரணி.

கோபியின் நெஞ்சில் முதல் முள் குத்திய இடத்திலேயே இரண்டாவது முள்ளும் இறங்கியது. வலியால் துடித்தான் அவன். பாருடனும் பேசப் பிடிக்காமல் தன் அறைக்குப் போய் விட்டான்.

அவன் ஒரு வாரமாகக் கட்டிக் குவித்திருந்த ஆசைக் கோட்டைகள் யாவும் பூரணியின் கண்டிப்பான வார்த்தை வெடிகளால் தாக்கப்பட்டுத் தரை மட்டமாயின. அவனுக்குச் சுகுமாரின் கறுப்பு நிறம் ஒரு குறையாகவே தோன்றவில்லை. அவனைக் கோபிக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. அவனுடன் படித்தவர்கள் பலர். அதில் அவன் நண்பர்களாக ஏற்றுக் கொண்டது பொறுக்கி எடுத்தாற் போன்ற ஒரு சிலர்





தான். அவர்களிலெல்லாம் படிப்பாலும், பண்பாலும் மிக மிக உயர்ந்தவனாக இருப்பவன் சுகுமார்தான். அவன் தன் தங்கையை மணக்கச் சம்மதிப்பான், கேட்டுப் பார்க்கலாம் என்று மனத்தளவில்கூடக் கோபி எண்ணியதில்லை. ஏனென்றால், அந்த அளவுக்கு அவனுடைய குடும்பத்துக்கும் இவனுடைய குடும்பத்துக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வு இருந்தது! அதனால் சுகுமாரைப் பற்றிய நினைவேயில்லாமல் மூன்று வருடங்களாக வரன் வேட்டையாடிக் கொண்டிருந்தான் கோபி பூரணிக்காக.

அழகு, அறிவு, குணம் எல்லாம் இருந்தும் பூரணிக்கு வரன் கிடைப்பது ரொம்பவும் சிரமமாக இருந்தது. காரணம் அவளுக்குக் கடுமையான செவ்வாய் தோஷ ஜாதகம். வரனுக்காக அலைந்து அலைந்து உடலுடன் உள்ளமும் சோர்ந்து போனான் கோபி.

இச்சமயத்தில்தான் கொஞ்சமும் எதிர்பாராதவிதமாகக் கல்கத்தாவிலிருந்து ஒரு வார விடுமுறையில் வந்தான் சுகுமார். அவனுக்குக் கோபியின் கஷ்டம் புரிந்தது! உடனே தன்னுடைய ஜாதகத்தை எடுத்து நண்பனிடம் கொடுத்தான். 'எனக்கும் கடுமையான செவ்வாய் தோஷம்தான்.' ஜாதகத்தை வாங்கிக் கொண்ட கோபி, உடனே ஜோசியரிடம் ஓடினான். உற்சாகத்துடன் திரும்பி வந்தான்.

''ஜாதகம் பொருந்தியிருக்கிறது சுகுமார். உன் பெற்றோர்கள் நிறையக் கேட்பார்களோ என்னமோ....'' என்று இழுத்தான் கோபி.

''நீ ஒரு பைசாகூடக் கொடுக்க வேண்டாம். வரதட்சிணையாக'' என்று சுகுமார் சொன்ன போது கோபி சந்திர மண்டலத்துக்கே போய் விட்டான்; ஆம், ராக்கெட் இல்லாமல்தான்.

''ஊருக்குப் போய் அப்பாவை முறைப்படி கடிதம் எழுதச் சொல்கிறேன்...'' என்று கூறிக் கிளம்பினான் சுகுமார். அவனை ஒரு மாப்பிள்ளைக்குரிய தடபுடலுடன்தான் ரயிலேற்றிவிட்டான் கோபி.

வருகிற வழியில் பெரிய பாறாங்கல் ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கிப் பெருமையாலும், நிம்மதியாலும் பூரித்து நின்ற அவனுடைய நெஞ்சகத்தின் மேல் போட்டுச் சொற்சரங்களால் நன்றாக அமுக்கவும் செய்தான் முரளி. அது போதாதென்று வீட்டுக்கு வந்தவுடன் பூரணி வேறு தன் சொல்லம்புகளால் அதைக் குத்திப் புண்ணாக்கி விட்டாள். அவளே இப்படிச் சொல்லி விட்ட பிறகு இனியும் அவன் ஆசைக்குப் பொருளேது? அவளுடைய விருப்பத்துக்கு விரோதமாக அவளைச் சுகுமாருக்கு மணம் செய்து வைத்துவிடலாம். ஆனால் அதன் பிறகு அவளுடைய வாழ்க்கை எப்படியிருக்குமோ! முரளி சொன்னது போலாகிவிட்டால்...? ஆசைத் தங்கை! அருமை நண்பன்! இருவருடைய வாழ்வுக்குமே அவன் வைரியாகி விடுவானோ?


ஒரு வாரம் விரைந்து சென்றது.

''கோபி! உன் நண்பனிடமிருந்து கடிதமே வரக் காணோமே? நீயாவது ஒன்று எழுதிப் போடேன்'' என்று கூறினார் அப்பா.

''நான் எழுதிப் போட்டுவிட்டேன் அப்பா!'' என்று வறட்சியான குரலில் கூறினான் கோபி.

''என்னவென்று ?''

''இப்போதைக்குப் பூரணிக்குக் கல்யாணம் செய்வதாக இல்லையென்று!''


Leyland

''கோபி! நிஜமாகத்தான் சொல்கிறாயா!'' ஆச்சரியமாகக் கேட்டார் அப்பா.

''ஆமாம்!'' என்று தலையை ஆட்டினான் மகன்.

''யாரைக் கேட்டுக் கொண்டு அப்படி எழுதினாய் நீ? நான் ஒருவன் உயிருடன் வீட்டில் இருப்பதையே மறந்து விட்டாயா?''

''மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா. பூரணிக்குச் குமாரை மணந்து கொள்ள விருப்பமில்லை. அதனால் எனக்கும் அதில் விருப்பமில்லை.''

''உன் விருப்பத்தையும், பூரணியின் விருப்பத்தையும் யார்டா கேட்டார்கள், அதிகப் பிரசங்கிகளா?''

''குமார் என்னுடைய நண்பன் அப்பா. அவனுடைய வாழ்வைப் பாழ்படுத்த நான் காரணமாக இருக்க மாட்டேன். அது என்னால் முடியவும் முடியாது.'' கண்டிப்பாகக் கூறிவிட்டு நகர்ந்து விட்டான் கோபி.

திக்பிரமை அடைந்து நின்று விட்டார் அவன் தந்தை.

இதற்குப் பிறகு ஓர் ஆறு மாதங்கள் வரையில் வீட்டில் கல்யாணப் பேச்சையே ஒருவரும் எடுக்கவில்லை. கடனே என்று ஏதேதோ ஜாதகங்களை வாங்கி வந்து தகப்பனாரிடம் கொடுத்தான் கோபி. ஒன்று கூடப் பூரணியின் ஜாதகத்துடன் பொருந்தவேயில்லை. அப்பாவும் அம்மாவும் சேர்ந்து கொண்டு பூரணியைக் குறைகூறத் தலைப்பட்டார்கள். இவ்வளவும் போதாதென்று கோபியின் மாமா வேறு தம் மகளின் கல்யாணத்துக்கு அவசரப்படுத்தினார். அவர் மகள் மல்லிகா கோபிக்காகவே பிறந்து வளர்ந்து காத்திருப்பவள்.

திடீரென்று ஒரு நாள் பூரணி கோபியிடம் வந்து, ''அண்ணா! எனக்குச் சம்மதம். கல்கத்தாவுக்குக் கடிதம் எழுதி விடுங்கள்'' என்று கூறிய போது கோபிக்குத் 'திக்'கென்றது. 'எப்படி ஏற்பட்டது இந்தத் திடீர் மனமாற்றம்?

சற்றுப் பொறுத்து, ''எனக்கு விருப்பமில்லை'' என்றான் நோட்டம் பார்க்கும் நோக்கத்துடன்.

''செய்து கொள்ளப் போகிறவள் நான் தானே?''

''உன்னிடம் இங்கே யாரும் தியாகத்தை எதிர்பார்க்கவில்லை!''

''தியாகம் செய்யப் போவதாக நான் சொல்லவில்லையே!''

''சில விஷயங்களைச் சொல்லாமலேயே தெரிந்து கொள்ள முடியும்.''

''அண்ணா!'' அதட்டும் பாவனையில் தான் குரல் வெளிப்பட்டது என்றாலும் பூரணியின் கண்கள் கலங்கித்தான் இருந்தன.

''குமார் உனக்கு ஏற்றவனில்லை பூரணி. உனக்கு ஏற்றவனை நான் கொண்டு வருகிற வரையில் நீ காத்திருக்கத்தான் வேண்டும்.''

''நான் முன்பு கூறியதையே நீங்கள் இன்னமும் மனத்தில் வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. என் மனத்தை நான் மாற்றிக்கொண்டு விட்டேன் அண்ணா.''

''அதுதான் வேண்டாம் என்று சொல்கிறேன் நான். நீ பலவந்தமாக உன் மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. அப்படிப்பட்ட விவாகங்களினால் யாருக்குமே இன்பம் கிடைக்காது. குமாரின் வாழ்க்கை சந்தோஷமாக இருப்பதற்கு நான் பொறுப்பாளியல்லவா?''

''அவருக்குத்தான் என்னைப் பிடிக்காமலில்லையே!'' விழிகளில் வியப்பைக் கொட்டினாள் பூரணி.

''உண்மை! ஆனால் அது மட்டும் போதாதே! இரு மனங்கள் ஒன்றுபடுவது தான் உண்மையான திருமணம். அப்படிப்பட்ட திருமணத்தில்தான் இல்லற இன்பம் முழுமை அடைய முடியும், பூரணி.''

''அப்படியானால் உங்கள் முடிவு என்ன?''

''வரன் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்?''

''அவசியமில்லை. நீங்கள் எழுதாவிட்டால், நானே எழுதி விடுகிறேன்'' என்றாள் பூரணி. அவள் குரலில் காணப்பட்ட வேகம் அவனைத் திகைக்க வைத்தது!

''விலாசம்கூட எனக்குத் தெரியும்!'' மற்றோர் அணுகுண்டை வீசினாள் பூரணி.

''இன்னமும் என்னடா தயக்கம்? கடிதம் எழுத வேண்டாம். வா, நாமே நேரில் கல்கத்தா போய் வரலாம்'' என்றார் பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்ட அப்பா.

பிறகு என்ன.....? குமார் பூரணியின் கல்யாணம் இனிது நடந்தேறியது.

வருடங்கள் விரைந்தன. இரண்டு வருடங்கள் முழுசாக ஓடி ஒளிந்த பிறகு இப்போதுதான் முதன் முதலாகப் பிறந்தகம் வந்திருக்கிறாள் பூரணி; அதுவும் தாய்மைப் பேற்றை எதிர்நோக்கிக் கொண்டு. இந்த இரண்டு வருட காலத்தில் கல்கத்தாவுக்குப் போய்ப் பூரணியைப் பார்த்துவிட்டு வர வேண்டும் என்று கோபி ஆசைப்பட்டான். ஆனால் அது முடியாமலேயே போய் விட்டது.

அம்மாவும் அப்பாவும் இரண்டு தடவைகள் கல்கத்தாவுக்குச் சென்றுவிட்டு வந்தார்கள். அவர்களிடம் விசாரித்த போது, ''சந்தோஷமாக இல்லாமலென்ன? அகமுடையானும் தாங்கு தாங்கு என்று தாங்குகிறான். மாமியார் — மாமனாரும் தங்கக் கம்பி. வலிக்கிறதோ!'' என்றாள் அம்மா.

இந்தப் பதிலினால் கோபியின் மனம் சமாதானம் அடையவில்லை. 'பூரணி, தன்னால் தன் பெற்றோர்களுக்கு வீண் சிரமம் வேண்டாம் என்றும், தன்னால் தன் சகோதரனின் திருமணம் தள்ளிப் போக வேண்டாம் என்றும் எண்ணியே குமாரை மணக்கச் சம்மதித்திருப்பாளோ! அதனால் அவளால் குமாரை விரும்ப முடியாமல் இருந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பாளோ! குமாரும் தன்னிடம் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பானோ!' என்றெல்லாம் தன் மனத்துக்குள்ளாகவே எண்ணி எண்ணிப் புழுங்கிக் கொண்டிருந்தான் கோபி. சில சமயங்களில் தன் மன வேதனையை மனைவி மல்லிகாவிடம்கூட அவன் கூறியதும் உண்டு.

இப்போது தன் நாத்தனாரை வயிறும் பிள்ளையுமாகக் கண்டதும் கிடுகிடுவென்று கணவனிடம் ஓடி வந்தாள் மல்லிகா.



''பக்கத்து வீட்டுப் பையனைப் பாரேன்! பி.ஏ. பாஸ் பண்ணின நாளிலேயிருந்து தினம் பேப்பர் இரவல் வாங்கிண்டு போய்.....''
''வேலை ஏதாவது காலி இருக்கான்னு பார்க்கிறானோ?''
''ஊம்! அதெல்லாமில்லே! மாப்பிள்ளை தேவை விளம்பரங்களையாக்கும் தினம் தினம் பார்த்துக் கொண்டிருக்கிறான்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''மருமான் பிறக்கப் போகிறான். கவலை விட்டதா? இனி மேலாவது நிம்மதியாக இருங்கள்'' என்றான் வெகுளியாக.

''பைத்தியம்! தாய்மை அடைந்துவிட்டால் அவளுடைய தாம்பத்தியத்தில் தகராறே இருக்காது என்று எண்ணிவிட்டாயா? எத்தனை எத்தனை குடும்பங்களில் முழுமையான தாம்பத்திய இன்பம் என்பது துளியும் இல்லாமல் கடமையின் அடிப்படையில் இன விருத்திகள் நடந்து கொண்டு வருகின்றன. தெரியுமா? பூரணியின் இல்வாழ்க்கையும் அவைகளில் ஒன்றாக இருந்து விட்டால்? எனக்கென்னமோ பயமாகத்தான் இருக்கிறது! சுகுமாருக்கு நான் ஏதேனும் தீமை செய்து விட்டிருப்பேனோ என்று வேதனையாகவும் இருக்கிறது.''

ஒன்றும் புரியாமல் விழித்தாள் மல்லிகா.

பள்ளிக்குச் சென்றிருந்த பாபும், பிரேமாவும் பகலுணவுக்காக வீட்டுக்கு வந்த பிறகுதான் வீடு கலகலப்பாக விளங்கியது.

''உப்பி விட்டாயே பூரணி!'' என்று கையை விரித்துக் காட்டியபடியே வெண்கலக் குரலில் பேசிக் கொண்டு உள்ளே நுழைந்தான் பாபு.

''நன்றாகக் கவனித்துப் பாருடா, பாபு! பூரணி கொஞ்சம் நிறம் மங்கிப் போயிருக்கவில்லை?'' என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டாள் பிரேமா.

பூரணியின் அருகில் வந்து அவளைத் தலையோடு கால்வரை உற்றுப் பார்த்து விட்டு, ''ஆமாம், பிரேமா! அத்திம்பேரின் நிறம் கொஞ்சம் இவளிடமும் ஒட்டிக் கொண்டு தான் விட்டிருக்கிறது. பரவாயில்லை. சோப்புப் போட்டுக் குளித்தால் பழைய நிறம் வந்து விடும்'' என்றான் பாபு.

''பூரணி! நீ ஊருக்குப் போகும் போது மறக்காமல் அம்மா எடுத்து வைத்திருக்கிற பீர்க்கங்காய் நெற்றை எடுத்துப் போ. அதற்குள்ளே இருக்கிற நாரை உடம்பிலே போட்டுத் தேய்த்தால் அத்திம்பேரின் கறுப்பு நிறம் உரிந்து போகுமாம்.'' — இது பிரேமா.

''பிறக்கப் போகிற காக்காய்க் குஞ்சாவது ஆணாக இருந்து விட்டால் பரவாயில்லை. பெண்ணாகப் பிறந்து விட்டாலோ...?'' பாபு சொல்லி முடிக்கவில்லை.

''போதும், நிறுத்துடா! நீ ரொம்ப எலுமிச்சம் பழம்தான்!'' என்று அவனை ஓர் அதட்டல் போட்டாள் பூரணி.

''எலுமிச்சம் பழ நிறம் இல்லாவிட்டாலும் இங்கே யாரும் அத்திம்பேர் மாதிரி இஞ்சின் கரியாக இருக்க வில்லை'' என்றாள் பிரேமா.

''இப்போது இரண்டு பேரும் வாயை மூடப் போகிறீர்களா, இல்லையா?'' என்று உரத்த குரலில் கத்தியவாறே எழுந்திருந்து அவர்களை அடிக்கப் போனாள் பூரணி.

''பூரணி!'' என்று அழைத்தபடி அவள் எதிரே போய் நின்றான் கோபி. அவன் முகத்தில் அப்போதுதான் உண்மையான உற்சாகத்தின் உதயம் தெரிந்தது. அதில் நிம்மதியின் பொலிவும் கூடியே இருந்தது!

''பாரு, அண்ணா, இவர்களை!'' என்று விம்மினாள் பூரணி குழந்தையைப் போல்.

''அவர்கள் சொல்வதில் தவறு என்ன இருக்கிறது பூரணி? உன் கணவன் உன்னைப் போல் சிவப்பாக, அழகாக இருக்கவில்லையே! அவன் நல்ல கறுப்புத்தானே? கலியாணம் ஆவதற்கு முன்பு நீயும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு அவனைக் கேலி செய்ய வில்லையா?'' என்று தங்கையைச் சீண்டினான் கோபி வேண்டுமென்றே.

''அது அப்போது. அப்போது அவர் யாரோ, நான் யாரோவாக இருந்தது. அதனால் ஆயிரம் பேசியிருக்கலாம். இப்போது அப்படியல்லவே! என் எதிரில் யாரும் அவரை விளையாட்டாகக்கூட மட்டம் தட்டிப் பேசக் கூடாது. அதை என்னால் கேட்டுக் கொண்டு சும்மாயிருக்கவும் முடியாது.'' புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே கூறினாள் பூரணி. உணர்ச்சி மிகுதியினால் அவளுடைய அதரங்கள் படபடப்பதையும் கோபி காணத் தவறவில்லை. அவன் உள்ளம் மகிழ்ந்தது. நிம்மதி கண்டது.

''வருத்தப்படாதே, பூரணி! இனி மேல் உன் கணவனை இங்கே யாரும் பரிகாசம் செய்யாமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு'' என்று தங்கையை அன்புடன் சமாதானப் படுத்தினான் கோபு.

அவன் தன் அறைக்குள் நுழைந்தபோது, ''பார்த்தீர்களா, அத்தான்! கிடைக்காததை எண்ணி ஏங்குகிற தீவிரத்தில், கிடைத்திருப்பதையும் நழுவ விட்டு விடுவது ஆண்களின் சுபாவம். கிடைத்ததைக் கொண்டு வாழ்வை முழுமைப்படுத்திக்கொள்வதுதான் பெண்களின் தனிக் குணம். பெண் ஆணைவிட மாட்டாள். ஆணும் பெண்ணைவிட முடியாது'' என்றாள் மனைவி மல்லிகா.

''ம்....! அப்படியா?'' என்று ஆச்சரியமாகக் கேட்பது போலக் கேட்டு மனைவியை உற்சாகப்படுத்தினான் கோபி.



இப்படியும் சிலர்!

து. ராமமூர்த்தி

குரோம்பேட்டை ஸ்டேஷனில் மின்சார ரயில் வண்டியில் ஏறி உட்கார்ந்தால், சென்னை கோட்டை ஸ்டேஷன் வந்து சேரச் சுமார் ஒரு மணி நேரமாகும். சைதாப்பேட்டை வருகிற வரையில் அவ்வளவு கூட்டம் இராது. அதன்பின் திமுதிமு வென்று கூட்டம் சேர்ந்து விடும். முண்டி அடித்துக் கொண்டு ஏறி, கூட்டத்தில் நிற்கவும் சௌகரியமாக இடம் கிடைக்காமல் இடிபட்டுக் கொண்டு தான் அடைந்து கிடக்க வேண்டும்.

கோவிந்தராஜன் முதல் வகுப்பு சீசன் டிக்கெட் வாங்கி யிருந்தார். அதனால், அதிக சிரமம் இல்லாமல் அவரால் குரோம்பேட்டையிலிருந்து கோட்டை ஸ்டேஷன் வரை தினம் பிரயாணம் செய்ய முடிந்தது. இருந்தாலும் ஒரு மணி நேரம் பிரயாணம் ஆகையால், தினம் இரண்டு வேளை போய் வருவது அலுப்பூட்டும் காரியம்தான். இதையும் அலுப்புத் தோன்றாதவாறு செய்து விட்டார் கோவிந்தராஜன். வாசக சாலையில் அவர் அங்கத்தினர். எப்பொழுதும் அவர் கையில் ஏதாவது ஒரு புஸ்தகம் இருக்கும். ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் படிக்கத் தொடங்குவார். கோட்டை ஸ்டேஷன் போய்ச் சேரும் வரையில் படிப்பார். அப்படியே மாலையிலும் கோட்டையில் ரயில் ஏறினால் குரோம்பேட்டை வரும் வரையில் படித்துக் கொண்டே யிருப்பார். வீட்டில் படிக்க அதிக அவகாசம் இராவிட்டாலும், தினம் இரண்டு மணி நேரம் ரயிலில் படிப்பதிலேயே வாரம் இரண்டு புத்தகங்களாவது படித்து விடுவார் அவர்.

அன்றும் அப்படித்தான் அவர் ரயிலில் வந்து கொண்டிருந்தார்.

காலை ஒன்பதரை மணிதான். இருந்தாலும் வெய்யில் காலமாகையால் புழுக்கமாக இருந்தது. ரயிலில் மின்சார விசிறிகளில் சில தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மையைப் போல் வட்டமடித்துச் சுழன்றன. கோடியில் உட்கார்ந்திருந்த இடத்துக்கு மேல் இருந்த விசிறி என்னவோ கோளாறினால் சுழலாமல் சுற்றியதால் அவர் பக்கம் காற்று வீசவில்லை.

அவருக்கு வியர்த்தது.

ரயில் வண்டி மீனம்பாக்கம் ஸ்டேஷனில் நின்று, பின் கிளம்பியது. முதல் வகுப்பில் அதிகக் கூட்டம் இல்லை.

அந்த வண்டியில் இரு பகுதிகள். ஒன்று பெரிய பகுதி. இன்னொன்று சிறிய பகுதி. இரண்டுக்கும் நடுவில், ஆள் நுழையும் இடைவெளியுடன் ஒரு தடுப்பு.

கோவிந்தராஜன் சின்னப் பகுதியில் இருக்கிறார். அவருடன் இன்னும் நான்கைந்து பிரயாணிகள். பெரிய பகுதியில் பத்துப் பதினைந்து பேர்கள் இருக்கும்.

வண்டி கிளம்பியது.

பக்கத்தில் ஏற்பட்ட பரபரப்பினால் கோவிந்தராஜன் படிப்பிலிருந்து தம் கவனத்தைத் திருப்பிப் பக்கத்தில் நோக்கினார்.

அடுத்த பிரயாணியை அது வரை அவர் கவனிக்க வில்லை. அவரிடமிருந்து ஒரு தினுசான நறுமணம் வருவதை மட்டும் இலேசாக கிரகித்திருந்தார். அவருக்கு நறுமணம் என்றாலே . பிடிக்காது. சில நறுமணங்கள் தலை வலியை உண்டாக்கும்.

அந்தப் பிரயாணிக்கு நாற்பது வயசு இருக்கலாம். தலை கிராப்பைக் குட்டையாக வெட்டி யிருந்தார். கறுப்புக் கண்ணாடி ; டெரிலின் சட்டை; கையில் ஒரு தோல்பை. 'இன்ஷூரன்ஸ் ஏஜண்டோ அல்லது மெடிகல் ரெப்ரசண்டேடிவோ?' என்று அவரை எடை போட்டார் கோவிந்தராஜன்.

தம் பக்கம் கோவிந்தராஜன் பார்ப்பதைக் கண்டதும், அவர் நிஜார்ப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து, முகத்தைத் துடைத்து மெதுவான குரலில், ''டிக்கட் பரிசோதகர் வந்துட்டான்! இன்னிக்கின்னு பாருங்கோ, சீசன் டிக்கட்டை வீட்டிலே மறந்து வச்சிட்டு வந்திருக்கேன் !| என்ன பண்ணறது?'' என்றார்.

வண்டி வேகமாக ஓடியது.

பழைய வண்டி இல்லை. புதிய வண்டி.

''பரவாயில்லை. வீட்டிலே டிக்கெட்டை வைத்து மறந்து வந்துட்டேன்னு சொல்லலாமே?'' என்றார் கோவிந்தராஜன் பக்கத்தில் இருந்தவரிடம்.

''ஆமாம்! அப்படிச் சொல்லலாம். இருந்தாலும், என்ன எக்கச்சக்கமான நிலை!''

மெதுவான குரலில் சொல்லியபடி அவர் முகத்தைக் கைக்குட்டையால் ஓயாமல் துடைத்தார்.

கோவிந்தராஜனும் இரண்டொரு முறை தம் டிக்கெட்டை மறந்து வீட்டில் வைத்து விட்டு ரயிலில் போனதுண்டு. ஆனால் அப்போது டிக்கெட் பரிசோதகர் யாரும் வந்தது இல்லை. அப்படி வந்திருந்தால், இப்போது தம் பக்கத்தில் உள்ளவர் இருக்கும் நிலையில்

தானே தாமும் இருந்திருப்போம் என்றதை நினைத்த போது, இப்போதும் தாமே டிக்கட்டில்லாமல் வந்துவிட்டது போல் அவருக்கும் 'குப்'பென்று வியர்த்து விட்டது!

டிக்கெட்டை மறந்து வீட்டில் வைத்து வந்து விட்டேன் என்று சொல்லலாம். டிக்கட் பரிசோதகரும் சரி என்று சும்மா போய்விடுவார். இருந்தாலும், எவ்வளவு எக்கச்சக்கமான நிலைமை! அவ்வளவு பேருக்கு நடுவில் டிக்கெட் பரிசோதகர் கேட்க, நாம் சாக்குச் சொல்ல! சில பேர் நம்புவார்கள். சிலர், நாம் டிக்கெட் வாங்காமல் வந்து விட்டுப் பொய் சொல்வதாகக்கூட நினைக்கலாம் அல்லவா ?

பக்கத்து ஆசாமியிடம் ஏற்பட்ட இரக்கத்தோடும், பக்கத்தில் எவ்வளவு பேர்கள் இருந்தாலும் ஒருவராலும் ஓர் உதவியும் செய்ய முடியாத இக்கட்டான நிலைமைகளும் இம்மாதிரி ஏற்படுகின்றனவே என்ற ஆச்சரியத்தோடும் அவர், டிக்கட் பரிசோதகர் நெருங்கி விட்டாரா என்று பார்த்தபோது இன்னுமோர் ஆச்சரியம் அவருக்கு ஏற்பட்டது. அந்த டிக்கெட் பரிசோதகரை அவர் அடையாளம் கண்டு கொண்டார்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, திருச்சியில் கோவிந்த ராஜன் ஒரு ஆபீஸில் அதிகாரியாக இருந்த போது பொன்மலையில் ஜாகை வைத்திருந்தார். பக்கத்தில் ரயில்வே குவார்டர்ஸில் இருந்த இந்த டிக்கட் பரிசோதகரை நன்றாக அவருக்குத் தெரியும். அவர் குடும்பத்தினருக்கும் அந்த டிக்கெட் பரிசோதகரின் குடும்பத்தினர் நன்றாகத் தெரிந்தவர்களாக இருந்தனர்.

டிக்கெட்காரர் தமக்குத் தெரிந்தவர் என்பதை உணர்ந்ததும் கோவிந்தராஜனுக்கு ஒரு யோசனை தோன்றியது. பக்கத்தில் இருந்தவரிடம் மெதுவான குரலில், "அந்த டிக்கெட் பரிசோதகர் எனக்குத் தெரிந்தவர். நான் அங்கே போய் அவரிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். அதற்குள் அடுத்த ஸ்டேஷன் வந்து விடும். நீங்கள் இறங்கிப் போய் ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு அடுத்த ரயிலில் வாருங்கள்" என்று கூறிவிட்டு, எழுந்திருந்து அந்தக் கம்பார்ட்மெண்டின் மறுபகுதிக்கு வந்து உட்கார்ந்திருந்த பிரயாணிகளுக்கு நடுவில் நின்று கொண்டிருந்தார்.

டிக்கட் பரிசோதகர் அவரிடம் வந்ததும் அவரைப் பார்த்துச் சந்தோஷப் புன்னகை செய்து, அவரிடம் யோக க்ஷேமம் விசாரிக்க ஆரம்பித்தார்.

"என்ன ஸார் ! சௌக்கியமா?"

"சௌக்கியம்தான்! நீங்க ஏது இவ்வளவு தூரம் வந்தது ? உங்களையும் சென்னைக்கு மாற்றியாச்சா?"

"இல்லே, ஸார். ஒரு 'ஸ்பெஷல் ஸ்குவாட்' மெட்ராஸுக்கு வந்தது. அதோட வந்திருக்கேன். பத்து நாள் இங்கே. அப்புறம் திரும்பிடுவேன். வீட்டிலே எல்லாரும் சௌக்கியம்தானே ?"

"சௌக்கியம்தான். உங்க வீட்டிலே?"

"ஓ: எல்லாரும் சௌக்கியம். உங்க பையன் என்ன பண்ணறான் ?"

"இஞ்சினீரிங் காலேஜில் சேர்ந்திருக்கான். உங்க மனைவிக்குக் கால் வீக்கம்னு சிகிச்சை பண்ணிண்டிருந்தேளே, எப்படி இருக்கு?"

"தேவலே, ஸார். இப்போ வீக்கம் இல்லே. 'பைலே ரியாஸிஸோ'ன்னு சந்தேகமா யிருந்தது. அதனாலேதான் அத்தனை நாள் மருந்து குடுத்தார் டாக்டர். பெண்ணுக்கு ஏதாவது வரன் பார்த்திருக்கேளா? இந்த வருஷம் கல்யாணம் உண்டா?"

"உம்; பார்த்துண்டுதான் இருக்கு. ஒண்ணும் செட்டில் ஆகல்லே. ஞாயிற்றுக் கிழமை வேலை இல்லாமல் இருந்தால் வாங்களேன் சாப்பாட்டுக்கு!"

" ஓ, அதுக்கென்ன வரேன் ! குரோம்பேட்டையிலே ராதா நகர்தானே ? என்ன நம்பர்?"

கோவிந்தராஜன் தம் பையில் கைவிட்டார். நிதானமாக அதில் துழாவித் துழாவி ஒரு துண்டுக் காகிதத்தைத் தேடிக் கண்டு பிடித்து எடுத்தார். சட்டைப் பையிலிருந்து பேனாவை நிதானமாக எடுத்து, நிதானமாகவே தம் விலாசத்தைக் காகிதத்தில் குறித்து நண்பரிடம் கொடுத்தார்.

இதற்குள் வண்டி பரங்கிமலை ஸ்டேஷனுக்கு வந்து நின்றது. சிலர் இறங்கினர். சிலர் திபு திபுவென்று ஏறினர். வண்டியில்





டைரக்டர்: அந்த நடிகை இந்தப் படத்திலே உங்களுக்கு மாமியாராக நடிப்பது வாஸ்தவம் தான்...! அதற்காக நீங்கள் அவருடன் சண்டை போட்டுவிட்டு இப்படித்தான் பேசாமல் இருக்க வேண்டுமா?''

கூட்டம் நிறைந்து விட்டது. 'இருபத்தி ஒன்று பேர்' என்று போட்ட வண்டியில் சுமார் ஐம்பது பேர்!

டிக்கட் பரிசோதகரும் கோவிந்தராஜ னிடம் சொல்லிக் கொண்டு வேறு கம்பார்ட் மெண்டுக்குப் போனார். தாராளமாகப் பெரு மூச்சு விட்டார் கோவிந்தராஜன்.

தாமே இந்த இக்கட்டான நிலையில் அகப்பட்டுத் தெய்வாதீனமாகத் தப்பித்தது போன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது.

எப்போதுமே அவர் கூடுமானவரையில் எல்லா விஷயத்திலும் ஜாக்கிரதையாக இருக் கும் சுபாவம் உடையவர். வீட்டை விட்டுக் கிளம்பும்போது சீசன் டிக்கட் இருக்கிறதா, மணிபர்ஸ் இருக்கிறதா, பேனா இருக்கிறதா என்றெல்லாம் பார்த்துக்கொண்டுதான் புறப் படுவார். அப்படியும் ஒவ்வொரு சமயம் மறதியினால் எதையாவது விட்டுப் போன தும் உண்டு.

இனிமேல் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார் அவர். கறுப்புக் கண்ணாடிக்காரர் அகப்பட் டுக்கொண்ட இக்கட்டான நிலையில் தாம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது!

ஒரு தினம் மாலை தாம் அங்கத்தினராக இருந்த கிளப்பில் நண்பர்களுடன் உரை யாடிக் கொண்டிருந்தார் கோவிந்தராஜன்.

''கோவிந்தா போட்டுண்டு திருப்பதிக்குப் போறேன்னு வரவான்னே நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் நிஜமாகவே திருப் பதிக்கா போறான்! வயிற்றுத் திருப்பதிதான். இதனாலே நிஜமாகவே திருப்பதிக்குப் போற வனையும் நாம்ப நம்பமுடியறதில்லே!''

பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த கோவிந்தராஜன் சொன்னார்: ''ஒரு சின்ன விஷயம். அன்றொரு நாள் ரயிலில் ஒருவர் தம் சீசன் டிக்கட்டை மறந்து வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டார். டிக்கட் பரி சோதகரைப் பார்த்ததும் வேர்த்து விறு விறுத்துப் போனார். 'டிக்கட் இருக்கிறது. வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன்' என்று சொல்லலாம். டிக்கட் பரிசோதகரும் ஒப்புக்கொள்வார். ஆனால் டிக்கட் வாங்கா மலே சிலர் இம்மாதிரி பொய் சொல்லக் கூடும். அதனால் உண்மை சொல்கிறவரையும் ரயில்க்காரர்கள் நம்ப மறுக்கலாம் இல்லையா? அதனால் அவர் பயந்து நடுங்கிப் போனார்.''

''அடப் பாவமே! ரொம்ப எக்கச்சக்க மான நிலைமைதான் இதெல்லாம்! அப்புறம் என்ன ஆச்சு?''

கோவிந்தராஜன் சிரித்து, நடந்ததைக் கூறினார். எல்லோரும் சிரித்தார்கள்.

''முன்பின் தெரியாத ஒருவருக்காக ஒரு தெரிந்த நண்பரை ஏமாற்றி விட்டீரே!''

''என்ன செய்வது? நண்பரை ஏமாற்றிய தால் அவருக்கு ஒரு கெடுதியும் நேரவில்லை. தெரியாத மனிதருக்கு அந்த உதவி செய் யாமல் இருந்தால் அவர் நிலைமை இக் கட்டாக ஆகியிருக்கும் இல்லையா?''

அவர் டிக்கட் பரிசோதகரை அவ்வாறு ஏமாற்றியிராவிட்டால் அந்தப் பரிசோதகர் பிரயாணிக்கு 'பெனிபிட் ஆப் டௌட்' தந் திருப்பாரா என்ற சர்ச்சையில் சம்பாஷணை திரும்பி விட்டது.

இன்னொரு தினம் மாலை.

கோவிந்தராஜன் வழக்கம்போல் மின் சார ரயிலில் முதல் வகுப்பில் இருக்கிறார், தாம்பரம் செல்லும் வண்டியில்.

ஒரே கூட்டம். உட்கார இடம் கிடைக்கா மல் அவர் நிற்கிறார்.

மாம்பலத்தில் பலர் இறங்கினர். காலி யான இடம் ஒன்றில் அமர்ந்தார் கோவிந்த ராஜன். கையில் இருந்த புத்தகத்தைப் புரட்டினார்.

பின்னும் பேச்சுக் குரல் கேட்கிறது.

''அவசரமா வீட்டிலேயிருந்து காத்தாலே புறப்பட்டேன். சீசன் டிக்கட்டை மறந் துட்டேன்.''

''போன வாரம்கூட நீங்க இப்படித்தான் வந்தீங்க ஒரு நாள். இதே மாதிரிதான் சொன் னீங்க. இன்னிக்கும் இப்படியே சொல்றீங்க. எப்படிச் சும்மா விடறது? 'எக்ஸஸ் ஃபேர்' கட்டிடுங்க!''

பிரயாணி என்னவோ சொல்கிறார். டிக்கட் பரிசோதகர் மசிகிறவராக இல்லை.


அந்தப் பிரயாணியின் குரலைக் கேட்ட கோவிந்தராஜன் திரும்பிப் பார்த்தார்.

டிக்கட் பரிசோதகர் நோட்டுப் புத்தகத் தில் எழுதுவதையும், பிரயாணி அவர் எதிரே அசடு வழியும் முகத்துடன் நிற்பதையும் கண்டார்.


அந்தப் பிரயாணி அவருடைய பழைய நண்பர்தான்! அதே குட்டையான கிராப்; கறுப்புக் கண்ணாடி, தோல் பை!

கோவிந்தராஜன் பெருமூச்செறிந்தார்.

''ராம—ராமா! இதுவும் வயிற்றுத் திருப் பதிதானா? எது நிஜத் திருப்பதி? எது வயிற் றுத் திருப்பதின்னே கண்டுபிடிக்க முடியயில் லையே!'' தமக்குள் முணுமுணுத்தவாறு மறு படியும் தம் புத்தகத்தில் ஆழ்ந்தார் அவர்.



பார்கோ
கேஸ் மாண்டில்கள்
சிறந்த ஒளிக்கும்
நீடித்த சேவைக்கும்
தயாரிப்பவர்கள் :
பார்கோ மாண்டில் ப்ராடக்ஸ்
38/40, சர்வோதய பவன்
மார்ஷ் ரோடு, பம்பாய் - 64 N.B.



ஆல்போ-ஸாங்
எல்லா வயதினருக்கும
ஒரு சிறந்த டானிக்
உங்களுடைய உடல்வளர்ச்சிக்கு ஆல்போ ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளை யோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்யத்திற்கும் உடல் வளர்ச்சிக் கும் தேவையான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங்கில் இருக்கின்றன
ALBO-SANG
FOR POORLY AND IMPROPERLY NOURISHED BABIES AND ADULTS
ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

காங்கிரஸுக்குத் தோல்வி தருவது மாபெரும் தேசப் பணி

ராஜாஜி வங்க கவர்னராக இருந்து பின் கவர்னர் ஜெனரலாக வந்த சந்தர்ப்பத்தில் 1949ல் ஒரு கப்பல் ஆரம்ப விழாவுக்குத் தலைமை தாங்கத் தூத்துக்குடிக்கு வந்தார். நானும் இலங்கையிலிருந்து நேரே அங்கு சென்றேன். திரு காமராஜ் உள்பட மற்றும் பல தலைவர்களும் அங்கு வந்திருந்தனர். தமிழகம் திரண்டு வந்திருந்தது. தமிழ்ப் பெருமகன் நாட்டின் உச்சிப் பதவியில் இருப்பதைக் கண்டு பெருமிதம் கொண்டேன். ராஜாஜியைத் தூற்றியவர்கள் போற்றுவதைக் கண்டு அகங்குளிர்ந்தேன். 1952ல் நடைபெற்ற சென்னை சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி கண்டது. ஆந்திரா அப்பொழுது சென்னையுடன் சேர்ந்திருந்தது. ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு ஓய்வு பெற்றிருந்தார். மந்திரி சபை அமைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி காங்கிரஸ் தலைவர்கள் அவரைக் கெஞ்சிக் கேட்டனர். தேச நன்மையை முதன்மையாகக் கவனிக்கும் ராஜாஜி, 'கம்யூனிஸ்ட்' கூட்டில் சென்னை மாகாணம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்ற நினைப்பில் ஒப்புக் கொண்டார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியையும் டாக்டர் சுப்பராயன் ஏற்றார். கவர்னர் ஜெனரல் பதவி வகித்தவர் ஒரு மாகாண முதல் அமைச்சர் பதவியை ஏற்பது பதவி ஆசையினால் அல்ல, கடமை உணர்ச்சியினாலேயே. ''முதல் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டாம்'' எனக் கொழும்பிலிருந்து ராஜாஜிக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். என் எழுத்தின் கருத்தை அவர் உணரவில்லை என்றுதான் நான் கருத வேண்டும். ராஜாஜி முதல் அமைச்சரானதும் மற்றவர்கள் தங்கள் நிலைகளைச் சீர் செய்து கொண்டனர். தங்களின் சுயநலனைப் பெருக்க ராஜாஜி குந்தகமாக இருப்பதால் ஆந்திராவும் பிரிந்து நிலைமையும் சரியாகிவிட்டதால் இனி எப்படி ராஜாஜியைக் காலைவாரி விடலாம் எனத் திட்டமிடலானார்கள். அந்தப் பதவிக்குப் பலர் வந்து பின் சூத்திரதாரியாகிய திரு காமராஜரே முதல் அமைச்சரானார். இவர் முதல் அமைச்சராயிருந்த சமயம் ஒரு முறை என் சுயபதியாம் காயல்பட்டணம் வந்திருந்தார். நானும் அவர் வந்த அன்றுதான் கொழும்பிலிருந்து அங்கு சென்றேன். ஒரு பூங்காவின் அடிக்கல் நாட்டு விழாவுக்குத் திரு காமராஜ் தலைமை தாங்குவதாக ஏற்பாடு. அத்துடன் வேறு சில விழாக்களும் கூட. விழாக் குழுவினர் ஓர் இரவு விருந்து ஏற்பாடு செய்திருந்தனர். நானும் அவ்விருந்துக்குச் சென்றேன். விருந்துக்குப் பலரும் வந்திருந்தனர். அப்பொழுது சட்டசபைக்கு ஓர் உபதேர்தல் நடந்து கொண்டிருந்தது. காங்கிரஸ் வேட்பாளருக்கு விரோதமாக வேலை செய்யும் ஒரு சிலரும் விருந்தில் கலந்து கொண்டிருந்தனர். விருந்து முடிந்தது. திரு காமராஜ் என்னிடம் அணுகினார். ''உங்கள் ஊர்க்காரர்கள் என்னை அகௌரவப்படுத்தி விட்டனர். நான் விழாக்களில் கலந்து கொள்ள மாட்டேன். போகப் போகிறேன்'' என்றார்.

''நடந்தது என்ன?'' என்று கேட்டேன். ''உம்மை எனக்குத் தெரியும். நீர் ராஜாஜி ஆள். காங்கிரஸ் விரோதிகளை இந்த விருந்துக்கு அழைத்திருக்கிறார்கள்'' என்று பதற்றத்துடன் கூறினார். ''நான் ராஜாஜி ஆளாக இருப்பதற்கும் இந்த விருந்துக்கும் என்ன சம்பந்தம்? நானும் இன்றுதான் வந்தேன். காங்கிரஸ் விரோதிகளை அழைத்தார்களென்று குறை கூறுகிறீர்கள். விழாக்குழுவினர் காங்கிரஸ்காரர்களல்லவே! காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் தங்களைக் கௌரவிக்கவில்லை. தங்களை முதல் அமைச்சர் என்ற முறையில் கௌரவிக்கிறார்கள்'' என்று கூறினேன். எங்கள் இருவரின் உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த எங்களூர் முஸ்லிம் வக்கீல் ஒருவர் ஏதும் விபரீதம் நிகழ்ந்து விடக்கூடாது என்று கவலை கொண்டாரோ என்னவோ, மயங்கிக் கீழே விழுந்துவிட்டார். அவருக்குத் தண்ணீர் தெளித்து மயக்கம் போக்க வேண்டியதாயிற்று. இதனிடையில் திரு காமராஜுடன் ஒன்றாக வந்திருந்த டாக்டர் வரதராஜுலு நாயுடு குறுக்கிட்டு என் பேச்சின் கருத்தைப் புரிந்து கொண்டு சமாதானப்படுத்தினார். அதன்பிறகு திரு காமராஜ் பேசிய எந்தக் கூட்டத்திலும் நான் பேச முடியாதென மறுத்துவிட்டேன்.


இதுதானா ஜனநாயகம்? இதுதானா சோஷலிஸம்? 'வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை' என்ற முறையில் எதேச்சாதிகாரம் நடத்தவா நாம் சுதந்திரம் பெற்றோம் ? அதிகார மமதை கூடிவிட்டது காங்கிரஸுக்கு. ஜனநாயக சோஷலிஸம் வெற்று வேதாந்தம். நம்மைக் கடன்காரனாக்கி விட்டது காங்கிரஸ் ஆட்சி. நாடுதோறும் சென்று பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்து விட்டோம். நேற்று குடில்களில் வாழ்ந்த காங்கிரஸ் பிரமுகர்கள் இன்று மாளிகைகளில் வாழ்கிறார்கள். மக்கள் தரித்திரர்களாகி நடுத்தெருவில் நிற்கிறார்கள்.

பாரத அன்னை மீது ஆணை! அண்ணல் மஹாத்மாஜி மீது ஆணை! எதேச்சாதிகாரமாக நடந்து மக்களைப் படுகுழியில் வீழ்த்திய காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு விரோதமாக உங்கள் வாக்கைச் செலுத்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றுமாறு உங்களைத் தமிழன்னையின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன். ''ஜெ ஹிந்த் !''

காயல்பட்டணம்
29—1—67

எம். கே. செய்யது அஹ்மது

* * *



நான் முப்பத்தாறு வருடங்கள் நேர்மையாக, உண்மை

யாக உழைத்து ஓய்வு பெற்றுள்ள 'செகண்டரி கிரேடு' ஆசிரியர். நான் 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் தேதி என்னுடைய பதவியிலிருந்து ஓய்வு பெற்றேன். ஓய்வு பெறுவதற்கு முன்னோடியாக 4–6–65 முதல் 8-1-66 வரையில் லீவில் இருந்தேன். இந்த லீவு திருச்சிராப்பள்ளி மாவட்டக் கல்வி இலாகா அதிகாரியால் அனுமதிக்கப்பட்டது.

என்னுடைய பென்ஷன் சம்பந்தமாகப் பல கடிதங்கள் விசேஷ திருச்சி கல்வி அதிகாரிக்கும் அவற்றின் நகல்கள் கல்வி அமைச்சருக்கும் அனுப்பப்பட்ட பிறகு என்னுடைய பென்ஷன் சம்பந்தமான நமூனாக்கள் 30–4–1966ல் கிடைக்கப் பெற்றேன். அவற்றை 4–5–1966ல் சரியாகப் பூர்த்தி செய்து திரும்ப அனுப்பி யுள்ளேன். ஆனால் ஓய்வு பெற்று ஒரு வருடமாகியும் இன்று வரை என்னுடைய பென்ஷன் கிடைக்கப் பெற்றிலேன். இது பற்றிக் கல்வி அமைச்சருக்கு ரிஜிஸ்தர் தபாலில் கடிதம் எழுதியும் என்னுடைய வேண்டுகோள் அவர்களுடைய காதில் எட்டாமல் இருப்பது மிகவும் ஆச்சரியமான செய்தியாகும்.

கல்கத்தா—19
19–1-67 வி. எஸ். இராமநாதன்

நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்!

சரித்திரத்தில் இடம் பெறத் தகும் விருகம்பாக்கம் மாநாட்டினைப் பற்றி ''அறுபத்தேழில் சந்திப்போம்'' எனும் தலைப்பில் முரசொலி மாறன் அவர்கள் எழுதிய உணர்ச்சி மிகு கட்டுரையினைத் தொடர்ச்சியாகக் கருத்துக்கு விருந்தாக வெளியிட்டு எங்கள் உள்ளத்தில் உவகை பொங்கச் செய்த ''கல்கி''யினை எங்கள் இதயத்தில் அமர்த்திவிட்டோம்.

அரங்கக்குடி, எம். பாரூக், எஸ். முனாக்,
30–1–67 ஜி. செல்வம்

ஓர் அபூர்வ விளக்கம்

சென்னையிலிருந்து டெல்லி போகும் சதர்ன் எக்ஸ்பிரஸில் 'ஸ்லீப்பர்' வண்டியில் வந்து கொண்டிருக்கிறோம். அதில் பிரபல காங்கிரஸ்காரர் ஒருவர் வந்தார். பொதுவாக நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள், அநியாய விலைகள், கள்ள மார்க்கெட்டு, லஞ்சம், பெருகி இந்த விஷயங்களைப் பற்றிச் சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

காங்கிரஸ்காரர் என் கணவரிடம் கூறினார்: ''ஏனய்யா, அந்த நாட்களில் நாங்கள் ஜெயிலில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்போது எங்களுக்கு நல்ல காலம் வந்து நாங்கள் பதவி வகித்துச் சம்பாத்தியம் செய்வது உங்கள் கண்களைக் கரிக்கிறதா?''

இதற்கு என் கணவர், ''அப்படியில்லை. நீங்கள் பதவி வகிப்பது பற்றி யாருக்கும் அசூயை இல்லை. ஆனாலும் எதை எடுத்தாலும் எங்கு போனாலும் இந்த லஞ்சப்பிசாசைத் தான் பார்க்கிறோம். இதற்கு ஒரு முடிவு கிடையாதா?'' என்று கேட்டார்.

''எது லஞ்சம்? நீங்கள் தபால் சீக்கிரம் பட்டுவாடா செய்யப்படுவதற்கு (''எக்ஸ்பிரஸ் டெலிவரி'') அதிக தபால் முத்திரைகள் ஒட்டுகிறீர்கள். இது தபால் இலாகாவுக்குக் கொடுக்கும் லஞ்சமா? ரிஜிஸ்தர், இன்ஷியூர் செய்வதற்கு அதிகத் தபால் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இது லஞ்சமாகுமா? ஏதோ நம் காரியத்தைச் சுலபமாக்கிக் கொள்வதற்கோ, சீக்கிரம் முடித்துக் கொள்வதற்கோ, நியாயமான அதிகச் செலவு என்றுதானே இவற்றைக் கருதுவீர்கள்? பின்னர் லஞ்சம், கைக்கூலி என்றெல்லாம் ஏன் பிதற்றுகிறீர்கள்? அர்ஜெண்ட் தந்திக்கு இரட்டை சார்ஜ் கொடுத்தால் அது லஞ்சமா?'' இப்படி அந்தக் காங்கிரஸ்காரர் என் கணவரைத் திருப்பிக் கேட்டபோது வண்டியில் உட்கார்ந்திருந்த எல்லோரும் திகைத்துப் போயினர். ஊழலை உத்தமமாக்கும் இந்தப் புதிய விளக்கத்தைக் கேட்டு யாருக்குத்தான் பதில் பேசத் தோன்றும்!

கான்பூர்
29-1-67 கல்யாணி

அருவருக்கத்தக்க செயல்

சமீபத்தில் திருச்சி மாவட்டத்தில் ஒரு திராவிடக் கழகத் தேர்தல் பிரசார ஊர்வலத்தில் மிகவும் அருவருக்கத் தக்கதும் ரத்தக் கண்ணீர் வடிக்கும்படியானதுமான சில சம்பவங்கள் நடந்ததை நேரில் பார்க்க நேர்ந்த ஒரு துர்ப்பாக்கியசாலி நான். மனம் பொறுக்க முடியாமல் உங்களுக்கு எழுதுகிறேன். காந்திஜிக்கு அடுத்தபடியாக நாம் போற்றி வணங்கக் கூடிய ராஜாஜியையும் பொதுவாக பிராம்மணர்களையும் (பூணூலை அறுப்பது போலவும் குடுமியை வெட்டுவது போலவும்) அவமானப் படுத்தினர். இப்படிப் பட்ட இழிவான மிருகத்தனமான காட்சிகளுடன் வந்த ஊர்வலத்தில் காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொண்டனர். அரசாங்கச் சட்டக் காவலர்களான போலீஸ்காரர்களும் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தனர்.

தேர்தல் பிரசாரத்தின் மற்றோர் அம்சம் காங்கிரஸ் கட்சியின் பதினெட்டு வருட கால 'சாதனை'களைப் பற்றிய வழக்கமான ஒரு பட்டியலாகும். அவைகளில் கல்லூரிகளின் எண்ணிக்கை உயர்வு, சாலைகள் விஸ்தரிப்பு, துணி உற்பத்தியின் சராசரி அளவு போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவுப் பண்டங்கள் உற்பத்தியைப் பற்றியோ, அவைகளின் விலைகளைப் பற்றியோ, இன்றைய மக்களின் வாங்கும் சக்தியைப் பற்றியோ ஏதேனும் ஒரு குறிப்புக்கூட இல்லை. பட்டினியினால் அவதிப்படும் மக்களுக்கு முன் சாரமற்ற ஒரு நீண்ட பட்டியலை நீட்டினால் அவர்களின் பசி மறைந்து போகுமா என்ன?

சென்னை—15
31—1—67 வேதவல்லி ராகவன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



Kleertone
நேர்த்திக்கும்
சிக்கனத்திற்கும்
கிளியர்டோன்
இஸ்திரிப் பெட்டிகள்:
"எலிகெண்ட்" இஸ்திரிப் பெட்டி.
"இம்பீரியல்"
ஆட்டோமேடிக்
இஸ்திரிப் பெட்டிகள்.
கெட்டில்கள்:
சூடெதிர்க்கும் கைப் பிடியும்,
குமிழ் மூடியும், பாதமும்
பொருந்தியது
"இம்பீரியல்"
கெட்டில்.
ஸாஸ்-
-பேன்
கெட்டிலும்
கிடைக்கிறது
டோஸ்ட்டர்:
முறுகலான பொன்னிற
டோஸ்ட்டுகள்
தயாரிக்க.
ரேடியண்ட் ஹாட் பிளேட்:
ஒரு தொல்லையில்லை, பரபரப்பு
இல்லை— உங்கள் சமையல்
வேலையே இலகு
வாகிவிடும்.
மடக்கக்கூடிய எஃகு
பர்னிச்சர்:
கலையும் சிக்கனமும்
பொருந்தியவை.
சோபிக்கும்
வர்ணங்களிலே
நாகரீக வடிவழகு
வாய்ந்தவை.
கிளியர்டோன் தயாரிப்புகள்
என்றாலே உறுதியான பாதுகாப்பும்
நியாயமான மதிப்பும் உங்களுக்குக்
கிடைப்பது நிச்சயம். செப்பம்
செய்வதிலே யாதொரு தொல்லையும்
இராது. ஏனெனில், நம் நாடெங்கும்
இவ் வசதிகள் கிடைக்கின்றன.
தவிர இத் தயாரிப்புகள்
எல்லாவற்றுக்கும் 1 வருட கால
உத்தரவாதம் தரப்படுகின்றன.
நல்வாழ்வுக்கே கிளியர்டோன் தயாரிப்புகள்
GRA
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.
பம்பாய், கல்கத்தா, சென்னை, டெல்லி, பெங்களூர், செகந்திராபாத், பாட்னா
INTERPUB GRA.8 TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

INDIA PISTONS EMPLOY THE BEST DISTRIBUTION NETWORK FOR MARKETING THEIR QUALITY PRODUCTS



Power Pak pilfer proof sets at a retailer's counter.

The IP leadership in Original Equipment is an assurance of the same rigid quality for replacement. Decades of experience in parts merchandising through a distri tor network, the pick of the automotive trade in India, is a further assurance of availability of the right product at the right price even in remote parts of the country.

To add to this, the IP Service Training Centre set up to train engine mechanics all over the country for quality re-conditioning, is a further assurance of the best value for the money spent on quality product sales backed by effective service.

To be of complete service to automobile manufacturers, the trade and consumers, IP's Second Stage expansion will soon go into production to make available their products more freely at competitive pricing. The range is being widened to cover every popular type of car commercial vehicle, motor cycle, tractor and stationary engine.

INDIA PISTONS LIMITED
SEMBIAM **MADRAS-11**

IP-